மகாஜனாவின் 87 O/L,90 A/L அணி நண்பர்களின்

# குவியம்

(கல்லூரி ஞாபகார்த்த மலர்)



மகாஜனாவின்

87 O/L, 90 A/L அணி நண்பர்களின்

# குவியம்

(கல்லூரி ஞாபகார்த்த மலர்)

# 2023



## மலர் விபரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| மலரின் பெயர் | :- | **மகாஜனாவின் 87 O/L,90 A/L அணி நண்பர்களின் "குவியம்"** |
| மலராசிரியர் | :- | **சி.சிவசிவா** |
| வெளியீடு | :- | **மகாஜனாவின் 87 O/L,90 A/L மகாஜனன்களின் ஒன்றுகூடல் விழாக்குழு** |
| பதிப்பு | :- | **24.08.2023** |
| பக்கங்கள் | :- | **152** |
| பிரதிகள் | :- | **200** |
| அட்டைப்படம் மற்றும் மலர் வடிவமைப்பு | :- | **ப.பிரதீபன் (ஆசிரியர்)** |
| அச்சுப்பதிப்பு | :- | **எவகிறீன் அழுத்தகம்** |

# சிவகாமி உடனுறை ஆனந்த நடராசப் பெருமான்



## நிறுவுனர் பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை



## மகாஜனா சிற்பி தெ.து.ஜயரத்தினம்



## மலரின் உள்ளே...


I. வாழ்த்துச் செய்திகள்
ii. கல்லூரிக் கீதம்
iii. கல்லூரிக் கொடிக்கீதம்
iv. விழாக்குழு

**இயல் 1. நெஞ்சில் நிலைத்தவர்கள்**

1. நெஞ்சில் நிலைத்தவர்கள்
2. எமது கல்லூரிக்கால முதல்வர்கள்
3. சிலைகளைச் செதுக்கிய சிற்பிகள்

**இயல் 2. 87 சாதாரணதர 90 உயர்தர மகாஜனன்கள்**

1. மகாஜனாவில் நாங்கள்
2. மகாஜனாவின் 87 O/L,90 A/L அணி நண்பர்கள்

**இயல் 3. எங்கள் நினைவுகளில் மகாஜனா**

1. எனது முதல் மகாஜனா கல்லூரி ஆசிரியர் - Dr.கலைச்செல்வி விஜயசிங்கம்
2. எழுத்து அறிவித்தவன் இறைவனாகும் - வி.இ.குகநாதன்
3. மகாஜனாவும் மாணவர்களும் - பிறேமினி பிரதாபன்
4. நெஞ்சில் ஓர் ஆலயம் - வானதி காண்டீபன்
5. எனக்குப்பிடித்த வகுப்பறை - இராசமலர் குகபாலன்
6. ஞாபகம் வருதே!!! - கோமதி மாயகிருஷ்ணன்
7. மகாஜனா நினைவுகளில் முக்குளித்தல் - மிருணாளினி ஜீவேஸ்வரா ரூபன்
8. புலனம் என்னும் நட்பின் சரணாலயம் - க.சதுர்முகன்
 - இ.சசிதரன்
 - தயாளினி கமலாகரன்
9. நானும் சாரணியமும் - செல்வராசா ஜெயபவான்
10. அந்தநாள் - இராஜேஸ்வரி நடராஜா
11. நட்பின் மகிமை - கோமதி மாயகிருக்ஷ்ணன்

12. கனவில் மட்டும் பேசிவிட்டுச் செல்லும் விம்பங்கள் - பிறேமினி பிரதாபன்
அகிலா சுதேந்திரன்
இ.சசிதரன் (சுதா)
க.சதுர்முகன்
யு.சிவன்ராஜ்
13. மகாஜன அன்னையின் விழுமியப் பண்புகளும் கலைநிகழ்வுகளும் 1978 - 1990 காலப்பகுதிகளில் ஓர் கண்ணோட்டம் - வற்சலா கருணாகரன்
14. எனது வாழ்வில் மகாஜனா - க. நித்தியானந்தன்
15. கடந்து போன பாடசாலை நினைவுகள் - யு.சிவன்ராஜ்
16. மலரும் பசுமையான நினைவுகள் - புவனேஸ்வரி கிருஷ்ணலிங்கம்
17. உன் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிகள் - கருணாவதி தேவதாசன்
18. எமது பள்ளிக்கூடப் பொன்மொழியின் ("Know thyself") தமிழ் இலக்கியப் பின்புலம் :- - வி.இ.குகநாதன்
19. நினைவுகளை மீட்போம் - தி.தவராணி
20. அறிவினை மேம்படுத்தல் - மிருணாளினி ஜீவேஸ்வரா ரூபன்
21. Know Thyself - Mrinalini Jeeweshwara Ruban
22. வகுப்பறைக்கு வெளியே கல்வி அனுபவங்களை மேம்படுத்துதல் - மிருணாளினி ஜீவேஸ்வரா ரூபன்
23. "School Education" - Dr.V.Kalaichelvi
24. மகாஜன அன்னையின் மகத்தான வரம் - ரதி தெய்வேந்திரன்.
25. நட்போட திருநாள் - மு.சிவதாசன்
26. மீண்டும் ஒரு நடை பள்ளிக்கு - வானதி காண்டீபன்
27. எனது கல்லூரிக்கால நினைவுத்துளிகள் - தயாளினி கமலாகரன
28. இத்திலத்தில் வேண்டும்வரம் என்னிலேற்று - நடராஜர் காண்டீபன்
29. நாங்களும் மகாஜனாவும் - சி.சிவசிவா

## இயல் 4 மகாஜனாவின் மேம்பாட்டில் 87 சாதாரணதர, 90 உயர்தர மகாஜனன்கள்

## இயல் 5 எங்கள் ஒன்றுகூடல்கள்

1. பாடசாலை நிகழ்வுகள் (ஆரம்பப்பிரிவு முதல் இடைநிலை வரை)
2. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி - 1990
3. உயர்தர வகுப்பு ஒன்றுகூடல் - 1990
4. யாழ்ப்பாண நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்
5. கொழும்பு நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்
6. கனடா நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்
7. இங்கிலாந்து நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்
8. சுவிற்சர்லாந்து நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்
9. பிரான்ஸ் நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்

யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை
J/Mahajana College Tellippalai

T.P 021 321 4004
021 205 9293

E.Mail :jayamahajana2010@gmail.com
web : www.Mahajana College.lk

# வாழ்த்துரை



மகாஜனக் கல்லூரியின் க.பொ.த (சா.த) 1987, க.பொ.த (உ.த) 1990 அணியினரால் வெளியிடப்படும் குவியம் என்ற மலருக்கான வாழ்த்துரையை வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

கல்லூரியானது இன்று தலைநிமிர்ந்து புகழோடு நிற்கின்றது என்றால் இதற்கு மூலவேராகத் திகழ்பவர்கள் உலகெங்கும் வாழ்ந்து கொண்டிருக்கும் பழைய மாணவர்களே என்றால் மிகையாகாது.

**“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்**
**ஆலயம் பதினாயிரம் நாட்டல்**
**அன்னயாவினும் புண்ணியம் கோடி**
**ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”**

என்ற பாரதியாரின் கூற்றுக்கிணங்க மாணவர்களின் கல்வி நலனையே நோக்கமாகக் கொண்டு செயற்படுபவர்களே கல்லூரித் தாய் வளர்த்தெடுத்த மழலைகள். கல்வி வளர்ச்சியடைய வேண்டும் என்ற உயர் சிந்தனையை நோக்காகக் கொண்டு எந்நேரமும் உதவிக்கரம் நீட்டுபவர்கள். அண்மையில் இந்த அணியினரால் Smart வகுப்பறைகள் அமைக்கப்பட்டு மகிழ்ச்சிகரமாக திறந்து வைக்கப்பட்ட நிகழ்வு என் மனக்கண்ணில் நிழலாடுகிறது.

87 - 90 காலப்பகுதிகள் ஒரு நெருக்கடியான காலமாக இருந்தபோதும் உங்கள் அணியின் கல்விச் சாதனைகள் அளப்பரியன. இன்று நீங்கள் அனைவரும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர்ந்த தரத்தில் நிறைவான வாழ்வு வாழ்வதைக் கண்டு என் மனம் புளகாங்கிதம் அடைகின்றது.

தாங்கள் கற்ற காலத்தை நினைவுகளாக்கி அனுபவங்களைப் பதிவுகளாக்கி, பதிவுகளை முத்துக்களாக்கி, கோத்து மலரொன்றை வெளியிடுவது சிறந்ததொரு முயற்சி யாகும். இம்முயற்சியானது கல்லூரியின்மீது கொண்டிருக்கும் பற்றினையும் அன்னி யோன்யமான உறவினையும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

இந்த அணியினர் அனைவரும் எங்கு வாழ்ந்தாலும் சீரும் சிறப்புடன் எல்லா நலன்களும் பெற்று. இன்று போல் என்றும் சிறப்போடு வாழ கல்லூரியில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமானை வேண்டி, மலர் சிறப்புற மனதார வாழ்த்துகின்றேன்.

**திரு.ம.மணிசேகரன்,**
அதிபர்,
யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

# குவியத்தின் நுழைவாயிலில் ...



**சி.சிவசிவா**
மலராசிரியர்

மகாஜனாவின் சிறப்புக்கள் பல. மகாஜனன்களின் பள்ளிமீதான பற்று, பள்ளியின் வளர்ச்சியில் பங்குகொள்ளல், கற்பித்த ஆசிரியர்களுக்கு மதிப்பளித்தல் என்பன மகாஜனன்களிற்கே உரித்தான பண்பு. மகாஜனாவின் கற்றல் காலத்தை மையப்படுத்திய மாணவர்களின் அணிகள், நாட்டுக்குநாடு மகாஜனன்களின் அமைப்புக்கள், உலகளாவிய ரீதியிலான மகாஜனன்களின் அமைப்பு என மகாஜனன்களின் அணிகள் விரிவடைந்து இயங்குகின்றன. அந்தவகையில் மகாஜனாவின் 87O/L, 90A/L அணியினரும் உலகலாவிய ரீதியில் இணைந்து இயங்குகின்றனர்.

## 87O/L, 90A/L அணியின் புலனக் (WhatsApp Group) குழு



நாட்டில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பல பிரதேச மக்களின் இடப் பெயர்வு மற்றும் பள்ளியின் இடப்பெயர்வு போன்றன காரணமாக, வேறு பள்ளி களில் கற்றலைத் தொடர்வதற்ககாவும், பள்ளியைவிட்டு இடைவிலகியும் நண்பர்கள் பலர் வெளியூர்களுக்கும், வெளிநாடுகளுக்கும் புலம்பெயர்ந்து சென்றனர். புலம்பெயர்ந்த நண்பர்கள் அந்தந்த நாடுகளில் ஒன்றுகூடினர். தாயக நண்பர்களோடு நீண்ட காலமாகத் தொடர்பு இல்லாத நிலையில் அனைத்து நண்பர்களையும் ஒன்றிணைப்பதில் பெரும்பங்காற்றியது மகாஜனாவின் 87O/L, 90A/L அணியின் புலனக் (WhatsApp Group) குழுவாகும். சதுர்முகன், வரதராஜன், குகநாதன், ஜெயராஜ், தனுசன், நெவின்ஸ்ராஜ், கணேஷ்குமார், மதன்லால் ஆகிய நண்பர்கள் இங்கிலாந்தில் ஒன்றுகூடியபோது அவர்களின் சிந்தனையில் உதித்து 01.10.2016 அன்று ஆரம்பிக்கப்பட்ட குழு "மகாஜனாவின் 87 O/L, 90 A/L அணியின் புலனக்குழு (WhatsApp Group)" ஆகும். இது உலகலாவிய ரீதியில் அனைத்து நண்பர்களையும் ஒன்று சேர்த்ததிலும் தொடர்ந்து ஒன்றிணைத்து வைத்திருப்பதிலும் பெரும்பங்காற்றி வருகின்றது.

## 87O/L, 90A/L அணியின் சாசனம்



வெளிநாட்டு நண்பர்கள் பலர் தங்களுடன் கற்ற நண்பர்களின் வளர்ச்சிக்காகவும், பள்ளியின் வளர்ச்சிக்காகவும் பற்பல உதவிகளை வழங்கிக்கொண்டிருந்தனர். இவ்வுதவிகளை ஒன்றிணைத்து உதவி தேவைப்படும் நண்பர்கள் அனைவருக்கும் உதவிகளை வழங்கும் நோக்கம் மற்றும் கற்பித்த ஆசிரியர்களுக்கு உதவுதல் போன்ற பல நோக்கங்களுக்காக ஆரம்பிக்கப்பட்டது 87O/L, 90A/L அணியின் சாசனம் ஆகும்.

### சாசனத்தினால் வழங்கப்பட்ட மற்றும் வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற உதவிகள்

1. பிள்ளைகளின் கல்வி வளர்சிக்காக 15 நண்பர்களின் பிள்ளைகளுக்கு கற்றலுக்கான சிறு உதவி தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன.
2. இரண்டு நண்பர்களுக்கும், நண்பனின் மகள் ஒருவருக்கும் வாழ்வாதார உதவியாக தையல் இயந்திரங்கள் வழங்கப்பெற்றன.
3. குடும்ப உறுப்பினர்களின் இழப்பின்போது உதவி தேவைப்படும் நண்பர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகின்றது.
4. கொவிட் 19 வைரசுப் பெருந்தொற்றுக் காரணமாக ஏற்பட்ட இடரின்போது நண்பர்கள் சிலருக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.
5. நண்பர்கள் உதவிகள் கோரும்போது சாசன நிர்வாகக் குழுவின் தீர்மானங்களுக்கமைவாக உதவிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### பொன்விழா ஞாபகார்த்தமாக மகாஜனாவின் கல்வி வளர்ச்சிக்காக திறன்பலகைகள் (Smart boards) கையளிப்பு




87O/L, 90A/L அணி நண்பர்களின் பொன்விழா ஒன்றுகூடலையும், எம்மை வழிப்படுத்திய ஆசிரியர்களை மதிப்பளிக்கும் நிகழ்வினையும் 2021 இல் தாயகத்தில் நடாத்துவதற்கான யோசனைகள் இருந்த போதும் கொவிட் 19 வைரசுப் பெருந்தொற்றுக் காரணமாக கைவிடப்பட்டது. எனினும் நண்பர்களின் பொன்விழா ஞாபகார்த்தமாக மகாஜனாவின் கல்வி வளர்ச்சிக்காக வகுப்பறைகளை அழகுபடுத்தும் வர்ணப் பூச்சு வேலைகள், வகுப்பறைகளில் திறன் பலகைகளுக்கான மின்சார இணைப்பு, மின்விசிறிகள் மற்றும் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு நான்கு திறன்பலகைகள் (Smart boards) 27.01.2021 அன்று கையளிக்கப்பட்டது. இந்த விழாவில் பெரும்பாலான நண்பர்கள் கலந்து சிறப்பித்தனர்.

## Zoom ஊடாக நண்பர்களுக்கு பொன்விழா வாழ்த்துக்கள்



எமது நண்பர் ஒருவரின் 50 வது பிறந்த நாள் (பொன்விழா) நிகழ்வினை கொழும்பிலிருந்து நண்பரான கீதா அவர்கள் ஏனைய நண்பர்களுக்கு Zoom செயலி ஊடாக ஒளிபரப்புச் செய்திருந்தார். இந்த நிகழ்வானது உலகலாவிய ரீதியில் நண்பர் களை ஒன்றினைத்து 50 வது பிறந்த நாளன்று (பொன்விழா) நண்பர்களை வாழ்த்துவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது. துசியந்தன், தயாளினி, சதுர்முகன், புவனசிங்கம், இராஜகௌரி, சீராளன் ஆகியோர் இணைந்து நண்பர்களை Zoom ஊடாக வாழ்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய் திருந்தார்கள். ஒருவருட காலம் இந்நிகழ்வினை ஒருங்கிணைத்துச் செல்லுதல் என்பது மிகுந்த சிரமமானது. எனினும் இந்நிகழ்வினை சிறப்பாக முன்னெடுத்த நண்பர்கள் பாராட்டுக்குரியவர்கள்.



## ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பும் குவியம் மலரும்

கொவிட் வைரசுப் பெருந் தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்ட பொன்விழா ஒன்றுகூடலும், எம்மை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வும் நண்பர்களின் யோசனைகளுக்கமைவாக, உலகலாவிய ரீதியில் நண்பர்களை ஒன்றினைத்து ஒன்றுகூடலை 2023 இல் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டது. நண்பர்களை ஒன்றிணைத்து Zoom ஊடான ஒன்றுகூடலை நண்பன் சீராளனுடன் இணைந்து ஏற்பாடு செய்தேன். நண்பர்கள் பலர் கலந்துரையாடலில் கலந்தகொண்டு நிகழ்விற்கான நிதியினை வழங்குவதற்கு முன்வந்தனர். இந்த நண்பர்களின் பேருதவியால் ஒன்றுகூடல் நிகழ்வு சாத்தியமாயிற்று. நன்பர்களின் ஒத்துழைப்புடன் 21.08.2023 முதல் 26.08.2023 வரையான காலப்பகுதி ஒன்றுகூடல் வாரமாக நண்பர்களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒன்றுகூடலுக்கான ஒழுங்குகள் மேற்கொள்ள ஆரம்பிக்கப்பட்டன.

விழாவினை ஒழுங்கமைக்கும் பொறுப்பு எவ்வாறு என்னிடம் வந்தது என யோசித்துப் பார்க்கின்றேன். நண்பர்களால் தரப்பட்டதா? அல்லது நான் எடுத்துக்கொண்டேனா? விழாபற்றியும், விழாவிற்கான நிதி தொடர்பாகவும் நண்பர்கள் என்னோடு பேசத் தொடங்கினர். இது எனக்கு ஒரு உந்துதலாக இருந்தது. நண்பர்கள் என்னிடம் ஒன்றுகூடல் ஒழுங்கமைப்புப் பொறுப்பினை ஒப்படைத்ததாக எண்ணினேன். நம்பிய நண்பர்களுக்காக விழாவினைச் சிறப்பாக நடாத்துவதற்கான ஒழுங்கமைப்பைச் செய்யத் துணிந்தேன்.

நிகழ்வினை சிறப்பாக ஒழுங்கமைத்து நடாத்துவதற்கு குழு ஒன்று தேவை. இந்தக்குழு என்னால் வடிவமைக்கப்பட்டது. இந்தக் குழுவை தானாகச் சேர்ந்த கூட்டம் என்பதைவிட நானாகச் சேர்த்த கூட்டம் எனக் கூறுவதே பொருத்தமாக இருக்கும். இக்குழு "மகாஜனாவின் 87 O/L, 90 A/L அணி நண்பர்களின் ஒன்றுகூடல் விழாக்குழு" என அழைக்கப்பெற்றது.

வேலைப்பகிர்வுகள் வழங்கப்பெற்று நண்பர்களின் ஒத்துழைப்புடன் விழா ஏற்பாடுகள் நடந்தன. ஒன்றுகூடல் ஞாபகார்த்தமாக மலர் வெளியிடும் யோசனை முன்வைத்தபோது ஒன்றுகூடலுக்கான காலம் நெருங்குவதினாலும், குறைந்த கால அவகாசம் இருப்பதினாலும், நிதி தொடர்பான பிரச்சினை இருப்பதாலும் அதனை மின்நூலாக வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. எனினும் மலரினை அச்சேற்றி மலராக வெளியிடல் வேண்டும் என்ற பல நண்பர்களின் வேண்டுகோளுக்கமைவாகவும், அதற்கான நிதியை வழங்குவதற்கு பல நண்பர்கள் முன்வந்த காரணத்தினாலும் பொன்விழா ஞாபகார்த்த மலர் அச்சேறி வெளிவருகின்றது.

### குவியம் பின்னணி

பொன்விழா ஞாபகார்த்த மலருக்கு நாமம் சூட்டுவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. நண்பன் குகநாதன் அவர்களினால் முன்மொழியப்பட்ட பல தூய தமிழ்ப் பெயர்களில் “குவியம்” என்ற நாமம் மகாஜனாவின் 87 O/L, 90 A/L அணி நண்பர்களின் ஒன்றுகூடல் விழாக்குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டு மலருக்கு “குவியம்” என்ற நாமம் சூட்டப்பட்டது.

### குவியத்தின் உள்ளே...

குவியம் ஐந்து இயல்களைக் கொண்டுள்ளது.

- இயல் ஒன்று :- **“நெஞ்சில் நிலைத்தவர்கள்”** - எமது கல்லூரிக் கால அதிபர்களின் புகைப்படங்களும், எம்மை வழிப்படுத்திய ஆசிரியர்களது புகைப்படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இயல் இரண்டு :- **“87 சாதாரணதர, 90 உயர்தர மகாஜனன்கள்”** இதில் நண்பர்களின் புகைப்படங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.
- இயல் மூன்று :- **“எங்கள் நினைவுகளில் மகாஜனா”** நண்பர்கள் பள்ளி தொடர்பான தமது ஞாபகங்களை ஆக்கங்களாகப் பதிவு செய்துள்ளனர். அனைவரும் எழுத்தாளர் அல்ல, பள்ளி நினைவுகளை மலரில் பதிவு செய்தல் வேண்டும் என்ற பெருவிருப்பம் நண்பர்களைத் தூண்டியது…
- அவரவர் ஆக்கங்களுக்கு அவரவரே வகை கூறுவர்.
- இயல் நான்கு :- **“மகாஜனாவின் மேம்பாட்டில் 87 சாதாரண, 90 உயர்தர மகாஜனன்கள்”** எமது அணி நண்பர்களினால் பள்ளியின் மேம்பாட்டிற்றகாக வழங்கப்பட்ட உதவிகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகள் ஏனையோருக்கு முன்னுதாரணமாக அமையுமென நம்புகின்றேன். உதவிகள் போதாதெனில் பள்ளிக்கு மேலும் உதவுவதற்கு நண்பர்களைத் தூண்டுமெனவும் நம்புகின்றேன்.
- இயல் ஐந்து :- **“எங்கள் ஒன்றுகூடல்கள்”** பள்ளியின் ஆரம்ப வகுப்பு நிகழ்வுகள், விளையாட்டு, A/L ஒன்றுகூடல், வெவ்வேறு நாடுகளில் நடைபெற்ற நண்பர்களின் ஒன்றுகூடல் நிகழ்வுகளின் தொகுப்பு என்பன தரப்பட்டுள்ளன.

### பல கோடி நன்றிகள்

ஆசிரியர்களின் மதிப்பளிப்பு நிகழ்வு சிறப்பாக அமைய நேரில் வருகை தந்து விழாவில் கலந்து விழாவினைச் சிறப்பித்து எம்மை வாழ்த்திய அனைத்து ஆசிரியப் பெருதகைகளுக்கும்

பலகோடி நன்றிகள். நேரில் வருகைதர முடியாவிட்டாலும் விழா சிறக்க வாழ்த்தியதோடு எம்மை மனதார வாழ்த்திய அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் பலகோடி நன்றிகள்.

ஆசிரியர் மதிப்பளிப்பு நிகழ்வும், ஒன்றுகூடல் நிகழ்வும் சிறப்பாக நடைபெறுவதற்கு பாடசாலை மண்டபம், விளையாட்டு மைதானம் என பாடசாலையினைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கியதோடு, குவியம் மலரிற்கான வாழ்த்துச் செய்தியையும் வழங்கி, பள்ளி நிகழ்வில் கலந்து எம்மை மகிழ்வித்த பள்ளியின் அதிபர் திரு.ம.மணிசேகரன் அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றிகள்.

குவியம் மலர் சிறப்பாக அமைவதற்கு மலரின் பக்க வடிவமைப்பினையும், அட்டைப் படத்தினையும் வடிவமைத்து உதவிய ஆசிரியர் திரு.ப.பிரதீபன் (ஆசிரியர், நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்) அவர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

மலரினைச் அழகான முறையில் அச்சேற உதவிய எவகிறீன் அச்சகத்தாருக்கு மனம் நிறைந்த நன்றிகள்.

**நண்பர்களே!**

விழாச் சிறப்பாக நடைபெற மகாஜனாவின் 87 O/L, 90 A/L அணி நண்பர்களின் ஒன்றுகூடல் விழாக்குழுவில் அங்கம் வகித்து, தங்களின் அனுபவக் கருத்துக்களை வழங்கி வழிகாட்டிய குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள். உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள், உதவிகள் யாவும் எமது விழாச் சிறப்புற பெரும் வழிகாட்டியிருப்பதை நினைத்துக்கொள்கின்றேன்.

விழாச் சிறப்பாக நடைபெற நிதிகளை அன்பளிப்பாக அள்ளி வழங்கிய அனைத்து நண்பர்களையும் நன்றியுடன் நினைக்கின்றேன் உங்கள் கொடையால் விழாச் சிறக்கின்றது. அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

ஒன்றுகூடல் தொடர்பாக தாயக நண்பர்களின் கலந்துரையாடல்களை எவ்வேளை யிலும் தனது இல்லத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு தருவதோடு, பலவித சுவையான சிற்றுண்டிகளையும் தேநீரையும் தயாரித்து வழங்கும் கு.இராஜகௌரி அவர்களின் உபசரிக்கும் பண்பினையும், தாராள மனத்தினை நன்றியுடன் பாராட்டுகின் றேன். அத்துடன் நண்பர்களின் கூழ் காய்ச்சி மகிழ்ந்துண்ணும் நிகழ்விற்கான ஒழுங்கமைப் பினைச் சிறப்பாகச் செய்து தருகின்றமையையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன்.

விழாவின் நிதியினைக் கையாள்வதற்குப் பொறுப்பாயிருந்து நிதி விடயங்களை சிறப் பான முறையில் கையாண்ட நண்பர்களான கேதீசன், கோமதி, சரத்சந்தர் ஆகியோருக்கு மனம் நிறைந்த நன்றிகள்.

குவியம் மலர் சிறக்கத் தமது பள்ளிக்கால நினைவுகளை ஆக்கங்களாக தந்துதவிய நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

மலரின் ஆக்கங்களை ஒப்புநோக்கிச் செவ்வை பார்த்து உதவிய வானதி காண்டீபன் அவர்களுக்கு மனம் நிறைந்த நன்றிகள்.

அதிபர்கள், ஆசிரியர்களின் படங்கள், நண்பர்களின் படங்கள், ஒன்றகூடல் படங்கள் என்பனவற்றைப் பெற்றுத் தந்துதவியதோடு விழா சிறக்க வழிகாட்டி உதவிய அனைத்து நண்பர்களுக்கும் நன்றிகள்.

விழாவினைச் சிறப்பாக முன்னெடுங்கள். நிதிப் பற்றாக்குறை இருப்பின் நாங்கள் அதனை நிவர்த்தி செய்வோம் எனக் குழுக் கலந்துரையாடலிலும், தனித்தனியாகவும் கைபேசியூடாக ஆதரவளித்து உறுதுணையாக இருந்த நண்பர்களான சிறிதரன் (கண்ணன்) சதுர்முகன், தயாளினி, வரதராஜன் (VK), Dr. கலைச்செல்வி, சுதர்சன் ஆகியோரை என்றும் மறக்கமுடியாது. அவர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

பெற்றுக்கொண்ட அனைத்துப் பொறுப்பான வேலைகளையும் செவ்வனே செய்து, அனைத்து வழிகளிலும் உறுதுணையாக இருந்து விழாச்சிறப்புற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நண்பர்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

விழாவினைச் சிறப்பாக ஒழுங்கு செய்வதில் உள்ள சிரமங்கள். நண்பர்களை ஒருங்கிணைத்தலில் உள்ள சிரமங்கள் பல. விழாவினை ஒழுங்கு செய்பவருக்கு பல சந்தர்ப்பங்களில் மனம் தளர்வது உண்டு. எனக்கும் பல சந்தர்ப்பங்களில் மனம் தளர்ந்தது. ஆரம்பம் முதல் நிறைவுவரை மனம் தளர்ந்த வேளைகளில் பக்கபலமாக நண்பர்கள் பலர் இருந்தனர். இவர்களுடைய ஆறுதல் வார்த்தைகள் இந்த நிகழ்வினை ஒழுங்கமைப்பதற்கு எனக்குப் பேருதவியாக அமைந்தது. . விழாவிற்கான நிதியை வழங்குவதற்கு பல சிறந்த நண்பர்கள் முன்வந்தனர். மனம்தளரும்போது ஆறுதல் தந்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

**நிறைவாக,**

தவறுதல் என்பது மனித இயல்பு எனவே அது என்னிடமும் இருக்கும்,

“தவறித் தவறின் தவறு அல்ல
தவறறிந்து தவறின் தவறு” என்றார் வள்ளுவர்.

நிகழ்வு ஒழுங்கமைப்புச் செய்தலில் நண்பர்களின் வழிகாட்டல்கள், ஒத்துழைப்புக்கள் கிடைத்தன என்பதை பெருமையுடன் கூறுகின்றேன். இச்செயற்பாடுகளில் நான் தவறறிந்து தவறவில்லை என்றே கருதுகின்றேன் எனினும் தவறித்தவறியிருப்பின் வள்ளுவன் சொன்னதுபோல் அதனைத் தவறாக கருதாமல் மகிழ்வுடன் ஏற்றுக்கெள்வீர்கள் என நம்புகின்றேன்.

# கல்லூரிக் கீதம்

(ஜன காண மன என்ற மெட்டு)
ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம்பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாகஜன மாதா
வெல்லுக மாகஜன மாதா

புலவர் நா.சிவபாதசுந்தரனார்.



# கொடிக் கீதம்

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோல முற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா

சரணம்
தீர முற்றுத் திருவடைந்த
தெய்வ துரை யப்பரது
தீர்க்கமான தியான மதில்
தேறிவந்த மாஜனாவின்
(கொடி)
மலர் மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர் விரித்து
தலம் பொலிந்த மாஜனாவைத்
தாங்கு கொடியின் தாள் பணிவோம்.
(கொடி)
தன மளித்துத் தவம் மிகுந்து
தாவியாடும் கொடியிது
மன மகிழ்ந்து மலர்கள் தூவி
வாழி என்று வணங்குவோம்.
(கொடி)

புலவர் நா. சிவபாதசுந்தரனார்.

# மகாஜனாவின் 87 O/L,90 A/L மகாஜனன்களின் ஒன்றுகூடல் விழாக்குழு

*01.* திரு. கு. சீராளன்

*02.* செல்வி. சோ. கீதா

*03.* Dr. பா. கேதீசன்

*04.* திருமதி. கு. இராஜகௌரி

*05.* திரு. செ. சரத்சந்தர்

*06.* திருமதி. மா. கோமதி

*07.* திரு. ந. செல்வநாதன்

*08.* திருமதி. க. தயாளினி

*09.* திரு. யு. சிவன்ராஜ்

*10.* திருமதி. யோ. பாமினி

*11.* திரு. த. சசிதரன்

*12.* திருமதி. அ. சந்திரகலா

*13.* திரு. அ. பங்கயச்செல்வன்

*14.* Dr. சு. மேகலா

*15.* திரு. அ. சிறிதரன்

*16.* Dr. வி. கலைச்செல்வி

*17.* திரு. க. சதுர்முகன்

*18.* திருமதி. க. அமுதினி

*19.* திரு. ந. வரதராஜன்

*20.* திருமதி. ஜீ. மிருணாளினி

*21.* திருமதி. கு. இராசமலர்

*22.* திருமதி. கா. வானதி (மலரின் ஒப்பு.நோக்குநர்)

*23.* திரு. சி. சிவசிவா

# இயல் - 01

## நெஞ்சில் நிலைத்தவர்கள்

# நெஞ்சில் நிலைத்தவர்கள்

**வாணியின் வீடு -**

அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயற்காற்றில்
கொம்புலுப்பிப் பூக்களினைக் கொட்டும் குடைவாகை
நம்பெரிய வெற்றிக்கு நாலுமலர் சூட்டவும்
ஓலைக் கிடுகின் ஒழுகுகின்ற கூரையை, வான்
நீலத்தில் முட்ட நிமிர்த்திப் புதுக்கி, நாம்
மாளிகை ஒன்றாக்கி மகிழ்ந்து நின்றோம். அங்கு வந்து
குந்திவிட்டாய் அம்மா! குழல் தோள் மீதசையத்
தென்தமிழ் யாழ் மீட்டிச் சிரித்தபடி வீற்றிருந்தாய்!
விந்தையில்லை வேறெதுநின் வீடு?

**- மஹாகவி -**

கல்லூரித் தாபகர், கல்விக்கலைஞர் இற்றைக்கு 113 ஆண்டுகளுக்கு முன் தீர்க்க தரிசனத்துடன் தாபித்த கல்லூரி மகாஜனக் கல்லூரி. கிராமத்து ஆண், பெண் பிள்ளைகளின் கல்வி விருத்தி ஒன்றே தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கு வழிவகுக்கும் எனும் தூரநோக்குச் சிந்தனையுடன் அவர் உருவாக்கிய கல்லூரிதான் இன்று உலகளாவிய ரீதியில் பல சாதனையாளர்களை, தொழில்வல்லுநர்களை எழுத்தாளர்களை, முயற்சியாண்மை யாளர்களை, பேராசிரியர்களை, ஆய்வறிஞர்களைத் தந்துள்ளது.

புகழ்பூத்த இக்கல்லூரியின் புதல்வர்களாக நாங்கள் பயின்றகாலத்தை நினைவில் மீட்டிப்பார்ப்பதில் தான் எவ்வளவு பரவசம். எம் ஒவ்வொருவரதும் உயர்ச்சிக்கு வித்திட்ட கல்லூரியை - ஆசிரியர்களை, அதிபர்களை நன்றியோடு பணிந்திட எமக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிட்டியுள்ள இவ்வேளையில் அவர்கள் அத்தனைபேர்களையும் பணிவோடு தொழுது நிற்கிறோம்.

1978 ஆம் ஆண்டு முதல் 1990 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலை வளாகத்தில் ஆடிப்பாடி, விளையாடி, கல்வி பயின்றோம்.கல்வியிலும் கலைகளிலும் விளையைாட்டுத் துறையிலும் கல்லூரி சிறந்தோங்கியிருந்தால் நாட்டின் பலபாகங்களிலிருந்தும் புற்றீசல்கள் போல் எம் கல்லூரியை நாடிப் பல மாணவர்கள் வந்து சேர்ந்தனர். தரம் ஒன்றில், தரம் ஆறில், உயர்தரத்தில் புத்தம் புதிதாக மாணவர்கள் பலர் வந்து சேந்தனர். எங்கள் நட்பு வட்டமும் பெருகியது.

1986 ஆம் ஆண்டுவரை எவ்வித இடையூறுகளுமின்றி எமது கல்விப்பயணம் தொடர்ந்தது. அதன் பின்னர் ஏற்பட்ட கலவரங்களால் எமது அணி மிகுந்த பாதிப்புக் குள்ளானது. பாடசாலை இடம் பெயர்ந்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் சிறிது காலம்

இயங்கியது. பின்னர் மருதனார்மடத்தில் கொட்டகைகளை அமைத்துத் தற்காலிக பாடசாலையாக மிகுந்த நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கியது. க.பொ.த சாதாரணப் பரீட்சை 1987 டிசம்பரில் தோற்ற வேண்டிய நாம் 1988 இல் தோற்றினோம். க.பொ.த உயர்தரப் பரீட்சை 1990 இல் தோற்ற வேண்டியவர்கள் 1991 இல் தோற்றினோம். வட புலத்தின் முதுசொம் கல்வி எனும் வாக்குக்கிணங்க யுத்த நெருக்கடிகளுக்கு மத்தியில் எமது கல்லூரி முதல்வர்களும் ஆசிரியப் பெருந்தகைகளும் அயராது உழைத்ததன் விளைவே இன்று எம் அனைவரதும் இருப்பு.

**1.1. கல்லூரி முதல்வர்கள் :-**

நாட்டின் யுத்த சூழல் பல இன்னல்களைத் தோற்றுவித்தது. தளராத மனமும் விடாமுயற்சியும் மிக்க எமது முதல்வர்கள் கல்லூரியின் மகிமை குறையாது அதனைப் பாதுகாத்து மீளக் கட்டியெழுப்பினார்கள். நாம் இங்கு கல்வி பயின்ற காலப்பகுதியில் ஏழு அதிபர்கள் கடமையாற்றினார்கள். திரு.பொன்.கனகசபாபதி, திரு. P. இராமசாமி, திரு. P.இரட்ணேஸ்வர ஐயர், திரு.பொன். சோமசுந்தரம், திரு.த. சண்முகசுந்தரம், திரு. வே. கந்தையா, திரு.க.நாகராஜா ஆகியோர் இக்காலப்பகுதியில் பாடசாலையைத் திறம்பட நிர்வகித்தவர்கள. இவர்களுள் எவரும் இன்று எம்மத்தியில் இல்லை.

**"வில்லூறு விளக்கு வியன்மறை எழுத்து**
**விளங்கிடு தாமரை உடையோம்**
**'உன்னை நீ அறி' என்றுரையை**
**நினைவுறு தொண்டாய்க்"** கொள்வதற்கு
வழிகாட்டிய இப்பெருந்தகைகளின் தாள்களைப் பணிந்து நிற்கிறோம்.

**1.2. சிலைகளைச் செதுக்கிய சிற்பிகள் -**

"நான் உயிருடன் இருப்பதற்கு என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்" என்ற அலெக்ஸாண்டரின் கூற்று எவ்வளவு பெறுமதி வாய்ந்தது. கல்வி போதிப்பதற்குமப்பால் நற்பழக்க வழக்கங்கள், விழுமியங்கள், உலகியல் ஞானம் முதலானவற்றையும் புகட்டுபவர்களாக எங்கள் ஆசிரியர்கள் இருந்துள்ளார்கள். இன்று நாம் பல்வேறு துறைகளில் மிளிர்வதற்கான அத்திபாரத்தைக் கட்டமைத்துத் தந்தவர்கள் எம் ஆசான்கள்.

**அறிவுப் பணியை அறப்பணியாக்கி எம்**
**அகவொளி பெருக்க அரும்மெழுகென உருகி**
**சிலையென எமைவடிக்க சீர்மிகு சிற்பியாகி**
**சிகரங்கள் நாம் தொட சிறப்புற ஏணியாகி**
**எம்முயர்வே தம்முயவர்வாய் எந்நாளும் மகிழ்ந்திருக்கும்**
**எமதருமைப் பேராசான்கள்**
**எழுத்தறிவித்த இறைவர் தாள் பணிந்தோம்"**

ஆரம்ப வகுப்பு முதல் க.பொ.த உயர்தர வகுப்பு வரை எம்மை ஆளாக்கிய ஆசிரியப் பெருந்தகைகளை வாழ்வில் என்றும் நாம் மறவோம்.

### 1.2.1. எண்ணும் எழுத்தும்

பிள்ளையின் ஒட்டுமொத்த ஆளுமை விருத்தி அதன் ஆரம்பக்கல்வியிலிருந்து தொடங்குகிறது. அறிவு விருத்தி மட்டுமன்றி நேர்மனப்பாங்கு, விட்டுக்கொடுப்பு, சகோதரத்துவம், கூட்டுறவு, ஆக்கத்திறன் முதலான பண்புவிருத்தி இப்பருவத்தில் கட்டியெழுப்பப்படுவதால் இப்பிரிவு ஆசிரியர்கள் பிள்ளை நேயமுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்பார்கள். எமது கல்லூரியின் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் யாவரும் மகிழ்ச்சிகரமான கற்றல் சூழலை உருவாக்கித் தந்தவர்கள்; நாளும் மகிழ்வோடு பாடசாலையை நாட வைத்தவர்கள்; உற்சாகமான கற்பித்தலை முன்னெடுத்தவர்கள்; அன்போடு அரவணைத்தவர்கள்; கண்டிக்க வேண்டிய தருணங்களில் கண்டித்தவர்கள்; எம்மோடு நெருக்கமாக இருந்தவர்கள்; நேர் சிந்தனையோடு செயற்பட்டவர்கள்; ஆசிரியப் பணியைத் திருப்தியோடு முன்னெடுத்தவர்கள்; எமக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கியவர்கள்.

திரு. வேலுப்பிள்ளை தனபாலசிங்கம், திருமதி மகாலட்சுமி தளையசிங்கம், திருமதி ரஜனி குமாரவடிவேல் (இராமலிங்கம் ஆசிரியர்) திருமதி நளினி முருகேசபிள்ளை, திருமதி பரமேஸ்வரி சண்முகராசா, திருமதி செல்வகுமாரி விக்னேஸ்வரன் ஆகியோரும், அமரர்கள் திரு.சி.அம்பலப்பிள்ளை, திருமதி நகுலாம்பிகை தம்பு, செல்வி சிதம்பரலட்சமி முத்தையா, திருமதி ரோகிணி இரத்தினவேல், திருமதி தவமணி பொன்னுத்துரை, திருமதி பரமேஸ்வரி குலசேகரம், திருமதி சிவபாக்கியம் ஜெயரட்ணம், (றோசா ஆசிரியர்) திருமதி மரகதவல்லி சர்வானந்தராஜா ஆகியோரும் எமக்கு எழுத்தறிவித்த இறைவர்களாகத் திகழ்ந்துள்ளனர். மாண்புறு ஆசிரியப் பெருந்தகைகளின் ஆசிவேண்டி பணிந்து நாம் நிற்கிறோம்.

### 1.2.2. அமுதான தமிழ்

**“தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்**
**தமிழ் எங்கள் அசதிக்கு சுடர் தந்த தேன்”**
**- பாவேந்தர்**

எமது கல்லூரி நீண்ட இலக்கியப் பாரம்பரியம் கொண்டது. நிறுவுனர் துரையப்பாபிள்ளை அவர்கள் பாவலர். மஹாகவி முதல் கோகிலா மகேந்திரன், சேரன், மகாலிங்கசிவம், பிரவீணன் வரை படைப்பாளிகள் பலரைப் படைத்தளித்த பெருமை எமது கல்லூரிக்கு உண்டு. தமிழ் எம் உயிரில் உணர்வில் கலந்துறையும்படி கற்பித்தவர்கள் எம் ஆசான்கள். தமிழ்ப் பாட ஆசிரியர்கள் மட்டுமன்றி, பிறபாடங்களைக் கற்பித்த ஆசிரியர்களின் மொழி ஆளுமையும் எம்மில் பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியமையை மறுக்க முடியாது.

மொழி ஒருவனின் ஆளுமையில் பெருந்தாக்கத்தைச் செலுத்தும். தமிழ்மொழியை நாம் செய்மையாகக் கையாள்வதற்கு - பேச்சிலும் எழுத்திலும் - எமது ஆசிரியர்கள் வினைத் திறனுடனான கற்பித்தலை முன்னெடுத்தவர்கள். பேச்சுப்போட்டி, எழுத்தாக்கப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்புக்களையும் இவர்கள் வழங்கியிருந்தார்கள். இடைநிலை வகுப்புக்களில் எமது தமிழ்ப்பாட ஆசிரியர்களாக திரு.வல்லிபுரம் செனகரத்தினம், திரு.செல்லப்பா இராஜபுலேந்திரன், திருமதி. பாலசுந்தரி வாமதேவன், திருமதி நல்லநாயகி யோகநாதன், திருமதி இராஜலட்சுமி கெங்காதரன், திருமதி தனபதி பாலசுப்பிரமணியம், திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன், திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம் ஆகியோர் விளங்கியுள்ளனர். இவர்களது மொழிப் புலமையும், கவர்ச்சிகரமான கற்பித்தல் உத்திகளும்

தமிழ்மொழி மீதான எமது ஆர்வம் பெருக அடிப்படைகளாயின. எம்மை வளப்படுத்திய இப்பெருந்தகைகளைப் பணிந்து அவர்தம் ஆசி வேண்டிநிற்கிறோம்.

### 1.2.3. சமயமும் ஒழுக்கமும்

ஒரு மனிதனை வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிப்படுத்துவது சமயம். எமது கல்லூரியைப் பொறுத்தவரை சமயக்கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வியாக அல்லாமல் செயன்முறைக் கல்வியாக வழங்கப்பட வேண்டும் என்பதில் முனைப்பாக இருந்துள்ளது. சைவசமயியாக நாமாற்றவேண்டிய காரியங்கள், கடமைகள் யாவற்றையும் செயற்பாடுகள் ஊடாக நாம் பெற்றுக் கொண்டோம். தமிழ் வேதம் என்று போற்றப்படும் திருமுறைப் பாடல்களைத் தினமும் செவிமடுப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அன்பு, இரக்கம், வாய்மை, அறம் முதலான விழுமியப் பண்புகள் எம்முள் வளர்வதற்கான களமாகக் கல்லூரி அமையப்பெற்றது.

நவராத்திரி விழா, ஆனி உத்தர உற்சவம் பாடசாலையில் களைகட்டும். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், திருக்கேதீஸ்வரம், கீரிமலை நகுலேஸ்வரம் ஆலய பாடசாலைத் திரு விழாக்களில் பங்குபற்றவும் திருமுறைகளை ஓதவும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன. விவே கானந்த சபைப் போட்டி, சைவபரிபாலன சபைப் போட்டி, சிவநெறிக் கழகப் போட்டி முதலான வற்றில் மாணவர்கள் பங்குபற்றிப் பரிசில்கள் பெறவும் அவர்தம் ஆளுமை விருத்தி பெறவும் வாய்ப்பளித்த பெருந்தகைகள் அமரர்கள் திரு.ச.விநாயரத்தினம், திருமதி. கமலானந்த யோகேஸ்வரி செல்வராசா ஆகியோரை இத்தருணத்தில் நன்றியோடு நினைவு கூர்கிறோம்.

### 1.2.4. ஆயகலைகள் :-

மகாஜனக் கல்லூரியை வாணியின் வீடாக உருவகித்தவர் மஹாகவி து. உருத்திர மூர்த்தி. ஆம் என்ன கலை வளரவில்லை இங்கு? இசை, நடனம், சித்திரம், நாடகம், கைப் பணி முதலான நுண்கலைகள் இங்கு போதிக்கப்பட்டன. மாணவர்களின் ஆக்கத்திறன், கற்பனை வளம், ரசனை என்பன இக்கலைகளூடு வளர்த்தெடுக்கப்பட்டன. மனத்திற்கு இன்பத்தையும் மன அமைதியையும் அளிக்கவல்ல இக்கலைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஆசிரியர்கள் எம்மைப் புடமிட்டனர்.

காலை ஆராதனையில் திருமறைகளைப் பண்ணுடன் ஒதுவதற்கும் இனிமையுடன் பாடுவதற்கும் இசையாசிரியர்கள் பயிற்றுவித்தார்கள். உச்சரிப்புத் தெளிவடன், பொருளுணர்ந்து பாடுவதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. மாவிட்டபுரத்தில் ஷண்முகார்ச்சனையின்போது திருப்புகழ்க்கச்சேரி இடம்பெறும். கீரிமலை நகுலேஸ்வரம், திருகேதீச்சரத் திருத்தலங்களில் பண்ணிசை ஓதப்படும். இவற்றை மாணவர் திறம்பட இசைப்பதற்கும் இசைப்போட்டிகளில் பரிசில்களை அள்ளிக் குவிப்பதற்கும் கல்லூரி மேடைகளில் இசை நிகழச்சிகளை நிகழ்த்துவதற்கும் அர்ப்பணிப்போடு வழிகாட்டிய அமரர்கள் செல்வி நாகம்மா கதிர்காமர், திரு அப்புக்குட்டி திலகேஸ்வரன் மற்றும் திருமதி வடிவாம்பாள் நடராஜா ஆகியோரை என்றும் மறவோம்.

மாணவர் நுண்திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்துவது ஓவியம். சித்திரபாட ஆசிரியர் அமரர் செல்லையா தியாகராஜா அவர்கள் கற்பித்தலுக்கப்பால் பாடசாலை விழாக் களின்போது மாணவர் கைவண்ணம் மிளிரத் தக்க வகையில் வழிகாட்டியாக விளங்கியவர்.

நடனம் பாடமாகக் கற்பிக்கப்பட்டது மட்டுமன்றி பாடசாலை விழாக்களில் முதன்மை நிகழ்ச்சிகளாக நடன நிகழ்வுகள் பலமேடையேறின. மாணவியர்தம் நடன ஆற்றுகைகள் பெரிதும் வரவேற்புப் பெறுவதற்கு உழைத்த திருமதி வாசுகி குகநாதன், திருமதி சகுந்தலா ஆகியோரின் அர்ப்பணிப்புமிக்க சேவை என்றும் நினைவு கூரத்தக்கது.

எமது காலப்பகுதியில் நாடகம் ஒரு பாடமாக இருந்திருக்கவில்லை. ஆனால் பல கலை களை உள்ளடக்கிய நாடகக் கலையின் முக்கியத்துவத்தையும் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு அக்கலையின் பக்களிப்பையும் உணர்ந்திருந்த ஆசியர்கள் தாமாக முன்வந்து மாணவர்களை நெறிப்படுத்தினர். ஆசிரியர்களான திருமதி. கோகிலா மகேந்திரன், திரு வல்லிபுரம் செனகரத்தினம் முதலானோர் தமது அயரா உழைப்பினை இத்துறை வளர்ச்சிக்கு ஈந்தவர்கள்.

நுண்கலைகள் பாடமாகப் போதிக்கப்பட்டபோதிலும் ஆற்றுகைகளுக்கான களத்தினை எமது கல்லூரி பெரிதும் அளித்தது. தமது பாடவேளைக்கப்பால் மாணவர்களின் தனித் திறமைகளை இனங்கண்டு அவற்றை வெளிக்கொணர உழைத்த இப்பெருந்தகைகளைப் பணிந்து போற்றி நிற்கிறோம்.

### 1.2.5. விஞ்ஞானமும் கணிதமும்

விஞ்ஞானம், கணிதம் ஆகிய இரு பாடங்களும் கனதியானவையாயினும் மாணவர் ஆர்வத்துடன் விருப்புடனும் கற்பதற்கு உகந்த முறையில் கற்பிப்பதற்கு வாண்மைமிகு ஆசிரியர்கள் எம்பாடசாலையில் இருந்தனர். பாடசாலையில் அமைந்துள்ள பரிசோதனைக் கூடம் மாணவர்கள் செயன்முறையூடாக விஞ்ஞான பாடத்தைக் கற்பதற்கு வாய்ப்பளித்தது. மாணவர்கள் உயர்கல்வியில் மருத்துவத்துறை, பொறியியல்துறை, உயிரியல், பௌதீக வியல் துறைகளை விருப்புடன் கற்பதற்கு வழிகாட்டிகளாக எமது ஆசிரியர்களே இருந்துள் ளனர். திரு.நடராஜா காளிதாசன், திருமதி கோகிலா மகேந்திரன், திரு சின்னத்தம்பி யோகநாதன், திருமதி இராஜேஸ்வரி சண்முகரத்தினம், திருமதி. பத்மஜா லோகநாதன், அமரர் திருமதி கங்கு செல்வமலர் இந்திரசிங்கம் ஆகியோர் விஞ்ஞானபாட ஆசிரியர்களாக வும் திருமதி தங்கம்மா சண்முகநாதன், திரு பாலகிருஷ்ணர் இராஜசேகரம், திரு கார்த்திகேசு சுப்பிரமணியம், திரு. கனகசுந்தரம் புவனசந்திரன், திரு சுப்பிரமணியம் மகாலிங்கம், திரு சிதம்பரம் சிற்றம்பலம் சுப்பிரமணியம், அமரர்களான திரு கந்தையா ஞானசேகரம், திரு கந்தையா குலசேகரம், திரு வசந்தகுமார் ஆகியோர் கணிதபாட ஆசிரியர்களாகவும் வினைத்திறனுடன் கூடிய கற்பித்தலை முன்னெடுத்தவர்கள். இவர்கள் யாவரையும் நன்றியோடு வணங்கி மகிழ்கிறோம்.

### 1.2.6. சுகாதாரமும் விளையாட்டும்

சுகாதாரப் பாடத்துடன் உடற்கல்வியும் இணைந்திருந்தது. திருமதி விமலராணி நாகேந்திரா, திருமதி தர்மாம்பிகை லிங்கோற்பவநாதன், அமர்களான திருமதி கங்கு செல்வமலர் இந்திரசிங்கம், திரு சரவணமுத்து செல்லர் அருட்பிரகாசம் ஆகியோர் இப்பாடத் தினை ஆர்வமூட்டும்வகையில் கற்பித்தார்கள். மாணவர் பலர் விளையாட்டுத்துறையில் தடம் பதிப்பதற்குரிய பயிற்சிகளை வழங்கி அவர்களை இததுறையில் ஊக்கப்படுத்திய அனைத்து ஆசிரியர்களையும் நன்றியொடு நினைவுகூர்கிறோம்.

### 1.2.7. சர்வதேசமொழியாக ஆங்கிலம்

முதன்மொழி தமிழுடன் சர்வதேசமொழியான ஆங்கிலமொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்த எமது ஆசிரியர்கள் மாணவர்கள் விருப்புடன் ஆங்கிலப் பாடத்தைக் கற்பதற்கு உகந்த நுட்பங்களைக் கையாண்டனர். ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டதோடு கலைவிழாக்களின்போது ஆங்கில நாடகங்கள், நடனங்கள் மேடையேற்றப்பட்டன. திரு துரைரட்ணம் இந்திரசிங்கம், திருமதி சந்திராதேவி இரட்ணம், திருமதி இந்திரமதி இராமசந்திரா, திரு தாமோதரம்பிள்ளை, அமரர்கள் சாவித்திரிதேவி துரைச்சாமி, செல்வி ஜெகசோதி செல்லப்பா ஆகியோர் ஆங்கிலபாட ஆசிரியர்களாக அர்ப்பணிப்போடு கற்பித்தவர்கள். இவர்கள் யாவரையும் மனதாரப் பணிந்து வணங்கி மகிழ்கிறோம்.

### 1.2.8. சமூகக்கல்வி மற்றும் தொழிற்பாடங்கள்

எமது வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை அறிவு தொழிற்பாடங்களுடாக வழங்கப்பட்டன. விவசாயம், மனைப்பொருளியல், நெசவு, மரவேலை, வர்த்தகம் மற்றும் சமூகக்கல்வி பாடங்கள் மாணவர்கள் தெரிவுப்பாடங்களாக இருந்தன. செயன்முறைகளுடன் கூடிய இப்பாடங்கள் இத்துறைகள் மீது மாணவர்களின் ஆர்வத்தினை வளர்ப்பனவாக அமைந்தன. திருமதி தேவராஜா, அமரர் சின்னத்தம்பி கயிலைமகான் விவசாயபாட ஆசிரியர்களாகவும் திருமதி அமிர்தநாயகம் துரைரட்ணம், திருமதி சௌபாக்கியகௌரி பத்மநாதன் மனைப்பொருளியல் பாட ஆசிரியர்களாகவும் செல்வி சதீஸ்வரி நெசவுபாட ஆசிரியராகவும் திரு குட்டியர் சண்முகலிங்கம், திரு இராமுப்பிள்ளை செல்வராஜா ஆகியோர் மரவேலைப் பாட ஆசிரியர்களாகவம் திரு கணபதிப்பிள்ளை முத்துலிங்கம், திருமதி அருந்தவச்செல்வி வேலுப்பிள்ளை வர்த்தகபாட ஆசிரியர்களாகவம் கற்பித்தலை முன்னெடுத்தனர். திருமதி அருள்நாயகி சண்முகரட்ணம், திரு நாகலிங்கம் அரியபுத்திரன், திரு நாகரத்தினம் தனபாலசிங்கம், திரு. உ.நவரத்தினம், அமரர் சரஸ்வதி கனகேஸ்வரன் சமூகக்கல்விப் பாட ஆசிரியர்களாக விளங்கியவர்கள்.

பாடவேளைகளுக்குமப்பால் மாணவர்களின் ஆளுமை விருத்திச்செயற்பாடுகளையும் இவர்கள் முன்னெடுத்தமையை மறக்கவியலாது. பாடசாலைக் கலைநிகழ்ச்சிகள், விளையாட்டுப்போட்டிகளின்போது மாணவர்களுக்குப் பக்கபலமாகவிளங்கிய இவர்கள் யாவரையும் பணிவன்போடு போற்றி நிற்கிறோம்.

### 1.2.9 க.பொ.த உயர்தரம்

### 1.2.9.1. கலைப்பிரிவு

க.பொ.த சாதாரண தரம் சித்திபெற்ற மாணவர்களுக்கு உரிய அறிவுரைகள், வழிகாட்டல்களை எங்கள் ஆசிரியர்கள் வழங்குவார்கள். மாணவர்களின் தனி ஆற்றல் களைத் துல்லியமாகக் கணித்து அவர்களுக்கேற்ற துறைகளைத் தெரிவு செய்யவைப்பார்கள். கலைப்பிரிவில் E I, E II என இருவகுப்புகள் இருந்தன. உயர்தரம் கற்க புதிதாக வந்து சேர்ந்த மாணவர்கள் E II வகுப்பில் விடப்பட்டனர். திறமை வாய்ந்த ஆசிரியர் குழுவினர் எமக்குப் போதித்தனர்.

திருமதி.நல்லநாயகி யோகநாதன், திரு.செல்லையா இராஜகுலேந்திரன் இருவரும் தமிழ் மொழியை சிறப்பாகக் கற்பித்தார்கள். அமரர் திருமதி.கமலானந்தயோகேஸ்வரி, செல்வராசா, திருமதி.சீதாதேவி தேவதாசன் ஆகியோர் இந்து நாகரிகத்தையும்,

திருமதி.வடிவாம்பாள் நடராஜா கர்நாடக சங்கீதத்தையும் திருமதி.வாசுகி குகநாதன் பரதநாட்டியத்தையும் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் அரசறிவியல் பாடத்தையும் திருமதி சௌபாக்கியகௌரி பத்மநாதன் மனைப்பொருளியில் பாடத்தையும் அக்கறையோடும் ஆவர்த்தோடும் கற்பித்தார்கள். இவர்கள் யாவரையும் மகிழ்வோடு வணங்கி நிற்கிறோம்.

### 1.2.9.2.வர்த்தகப் பிரிவு

வர்த்தக வகுப்புக்கள் D I, D II என இரண்டாக பிரிக்கப்பட்டிருந்தன. மாணவர்கள் பலர் இத்துறையை விருப்புடன் தேர்ந்தெடுத்தனர். திரு.நாகமுத்து வேல்நாயகம் கணக்கியல் பாடத்தையும் திரு.ஜெயமனோகர் இராஜரட்ணம் வர்த்தக பாடத்தையும் மிகுந்த ஆற்றலுடன் கற்பித்தார்கள். இவர்களை நன்றியோடு பணிந்து நிற்கிறோம்.

### 1.2.9.3 கலையும் வர்த்தகமும்

பொருளியல், அளவையியலும் விஞ்ஞானமுறையும் ஆகிய இரு பாடங்களும் கலைத்துறை மாணவர்களுக்கும் வர்த்தகத்துறை மாணவர்களுக்கும் பொதுவானவை துறைபோந்த ஆசிரியர் குழாம் எம்மை நெறிப்படுத்தியது. திருமதி.செல்வகுமாரி துரைசிங்கம், திரு.வைத்திலிங்கம் குணரத்தினம், திருமதி.இராஜலட்சுமி கெங்காதரன், அமரர் திரு.சுப்பிரமணியம் சரவணபவன் ஆகியோர் பொருளியல் பாடத்தையும் திரு.கனகசபை காராளசிங்கம், திரு.சுப்பிரமணியம் சயந்தன், திருமதி. ஆனந்தராணி மகேந்திரராஜா, திரு.இரத்தினேஸ்வரஐயர் பிரதாபசர்மா, அமரர் செல்வி.ஜெகசோதி செல்லப்பா ஆகியோர் அளவையியல் பாடத்தையும் சிறப்பாகக் கற்பித்தார்கள். பெருமதிப்போடு இவர்கள் யாவரையும் வணங்கி மகிழ்கிறோம்.

### 1.2.9.4. கணித விஞ்ஞானத் துறைகள் :-

கணித விஞ்ஞானத்துறையில் மாணவர்கள் பிரகாசிப்பதற்கு அர்ப்பணிப்புடன் ஆசிரியர்கள் கற்பித்தார்கள். திருமதி.திரிபுரசுந்தரி சிவசுப்பிரமணியம் விலங்கியல் பாடத்தையும் திருமதி.சிவமலர் அனந்தசயனன், திரு.செல்வநாயகம் நவரட்ணம் ஆகியோர் தாவரவியல் பாடத்தையும் திரு.பொன்னையா சுந்தரலிங்கம் இரசாயனவியல் பாடத்தையும் திரு.யோகலிங்கம், திரு.சண்முகலிங்கம் தயாபரன் (காந்தன்) அமரர் இளையதம்பி பஞ்சநாதன் ஆகியோர் பௌதிகவியல் பாடத்தையும் கற்பித்தனர். திரு செல்லத்துரை சத்தியமூர்த்தி அவர்கள் தூயகணிதம், பிரயோககணிதம் பாடங்களைப் போதித்தார். மிக நெருக்கடியான சூழலில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடாது என்ற வைராக்கியத் துடன், மேலதிக வகுப்புகளை நடத்தி, பாடத்திட்டங்களைப் பூர்த்திசெய்து. பரீட்சைக்கு எம்மைத் தயார்ப்படுத்திய இப்பேராசான்களை வாழ்வில் மறவோம். எமது உயர்ச்சி ஒன்றையே பிரதிபலனாக எதிர்பார்க்கும் எங்கள் தெய்வங்களான ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரினதும் தாள்கள் பணிந்து. வணங்கி மனநிறைவெய்துகிறோம்.

### 1.3. குருளைச்சாரணர் சாரணர், பெண் வழிகாட்டி, முதலுதவிப்படை.

எமது கல்லூரிக் காலப்பகுதியில் மாணவர்கள் பலர் குருளைச் சாரணர்களாக, சாரணர்களாக, பெண்வழிகாட்டிகளாக, முதலுதவிப் படையினராகப் பயிற்சி பெற்றார்கள். தலைமைத்துவம், கூட்டுறவு, உதவும் மனப்பாங்கு, நேரமுகாமைத்துவம், கட்டுப்பாடு முதலான பண்புகள் இவற்றினூடு அளிக்கப்பட்டன. அர்ப்பணிப்பும் தூரநோக்குச்

சிந்தனையும் கொண்ட ஆசிரியர்கள் இவற்றுக்குப் பொறுப்பாசிரியர்களாகச் செயற்பட்டு எம்மை வழிப்படுத்தினார்கள். அமரர்கள் திருமதி ரோகிணி இரத்தினவேல், செல்வி சிதம்பரலட்சுமி முத்தையா ஆகியோர் குருளைச் சாரணர்களுக்குப் பொறுப்பாகச் செயற்பட்டார்கள். அமரர் திரு செல்லையா தியாகராஜா ஆசிரியர் சாரணர்களுக்குப் பொறுப்பாகவிருந்தார். பெண் வழிகாட்டிகளுக்குப் பொறுப்பாசிரியராக திருமதி அமிர்தநாயகம் துரைரட்ணம் அவர்கள் விளங்கினார். திருமதி தனபதி பாலசுப்பிரமணியம் அவர்கள் முதலுதவிப்படையினருக்குப் பொறுப்பாசிரியராக இருந்தார். பாடங்களைக் கற்பிப்பதற்குமப்பால் இவற்றை மேலதிக சுமை எனக் கருதாமல் ஆர்வத்துடனும் அக்கறையுடனும் தாமாக முன்வந்து எம்மை சகல வழிகளிலும் புடமிட்ட ஆசிரியப் பெருந்தகைகளை மனதார வணங்கி நிற்கிறோம்.

இன்னும் மன்றங்களின் பொறுப்பாசிரியர்களாக, ஒழுக்காற்றுப் பொறுப்பாசிரியர்களாக இருந்து எம்மை வழிநடத்திய அத்தனை ஆசிரியர்களுக்கும் என்றும் நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆவர்கள் அனைவரையும் வணங்கி மகிழ்கிறோம்.

பாடசாலைக்காலத்தை மீட்கும்போது அதிபர்களின் உதவியாளராக நீண்ட காலம் பணிபுரிந்த திரு. கனகேஸ்வரன் (கனகி) அவர்களையும் விஞ்ஞான ஆய்வுகூட உதவியாளர் அமரர் திரு சுந்தரமூர்த்தி அவர்களையும் கன்ரீன் அமரர் திரு சங்கரப்பிள்ளை அவர்களையும் புத்தகசாலை திரு கிருஸ்ணமூர்த்தி அவர்களையும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

அறுவடையாய் நமை ஈந்தோம்


இன்று நாம் வாழும் வாழ்க்கைக்கு வித்திட்ட, எழுத்தறிவித்த இறைவர்களான எங்கள் மதிப்புக்கும் பேரன்புக்குமுரிய ஆசான்களுக்கு வார்த்தைகளால் நன்றி சொல்லி மாளாது. இவர்கள் என்றும் எங்கள் நெஞ்சில் நீங்காது நிலைத்திருப்பவர்கள். வாழ்நாள் முழுவதும் இவர்கள் யாவரையும் நன்றியோடு நினைந்திருப்போம்.

**பைந்தமிழர் பெருநிலத்தில் பதிகொண்ட மகாஜனாவில்**
**பண்பதுவாய்த் தாமுறைந்து பணியதுவாய்த் தமைவருத்தி**
**பத்தியங்கள் பலவிருந்து பக்குவமாய்ப் படிப்புணர்த்தி**
**பைந்தமிழைப் பருக வைத்து பயில் கணக்கில் பெருக்கிவிட்டு**
**பல்கலைகள் பயிற்றுவித்து பள்ளியிலே பயிர் விளைத்தீர்!**
**பயன்கருதாப் பணியாளரே! நம்மைஅறுவடையாய் நுமக்கீந்தோம்!**

# 1.1 எமது கல்லூரிக்கால பள்ளி முதல்வர்கள்



**திரு. P. கனகசபாபதி**
1976 - 1979



**திரு. P. இராமசாமி**
1979



**திரு. P. இரட்னேஸ்வர ஐயர்**
1979 - 1980



**அமரர். திரு. பொன். சோமசுந்தரம்**
1980 - 1983



**அமரர். திரு.த.சண்முகசுந்தரம்**
1983 - 1984



**அமரர். திரு.வே.கந்தையா**
1984- 1985




**அமரர். திரு.க.நாகராஜா**
1985 - 1998

## 1.2 சிலைகளைச் செதுக்கிய சிற்பிகள் ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள்



**திரு.வேலுப்பிள்ளை தனபாலசிங்கம்**
சுன்னாகம்



**திருமதி தளையசிங்கம் மகாலட்சுமி**
கனடா



**திருமதி. நளினி முருகேசபிள்ளை**
அவுஸ்ரேலியா



**திருமதி. பரமேஸ்வரி சண்முகராஜா**
கனடா



**திருமதி. இராஜரட்ணேஸ் விக்னேஸ்வரன்**
கொல்லங்கலட்டி



**திருமதி.ராஜினி குமாரவேல்**
(இராமலிங்கம் ஆசிரியர்)
கல்வியங்காடு


# இடைநிலைப்பிரிவு ஆசிரியர்கள்



**திருமதி. அருள்நாயகி சண்முகரட்ணம்**
சமூகக்கல்வி
கொல்லங்கலட்டி



**திருமதி. தங்கம்மா சண்முகநாதன்**
கணிதம்
விழிசிட்டி



**திரு. நடராஜா காளிதாசன்**
விஞ்ஞானம்
குரும்பசிட்டி



**திருமதி. அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்**
தமிழ்
கொல்லங்கலட்டி



**திருமதி. கோகிலா மகேந்திரன்**
விஞ்ஞானம்
விழிசிட்டி



**திருமதி. இந்திரமதி இராமச்சந்திரா**
ஆங்கிலம்
உடுவில்




**திரு. இராமுப்பிள்ளை செல்வராஜா**
மரவேலை
அளவெட்டி



**திருமதி. சௌபாக்கியகௌரி பத்மநாதன்**
மனைப்பொருளியல்
அளவெட்டி



**திரு. சின்னத்தம்பி யோகநாதன்**
விஞ்ஞானம்
கரவெட்டி



**திரு. பாலகிருஷ்ணர் இராஜசேகரம்**
கணிதம்
தெல்லிப்பழை




**திரு. நாகலிங்கம் அரியபுத்திரன்**
சமூகக்கல்வி
பன்னாலை



**திரு. துரைரட்ணம் இந்திரசிங்கம்**
ஆங்கிலம்
தெல்லிப்பழை



**திரு. நாகரத்தினம்**
**தனபாலசிங்கம்**
சமூகக்கல்வி
பன்னாலை



**திரு. கார்த்திகேசு**
**சுப்பிரமணியம்**
கணிதம்
பன்னாலை



**திருமதி. சந்திராதேவி**
**இரட்ணம்**
ஆங்கிலம்
கொழும்பு, அவுஸ்திரேலியா



**திருமதி. தர்மாம்பிகை**
**லிங்கோற்பவநாதர்**
சுகாதாரம் - சுன்னாகம்



**திரு. கனகசுந்தரம்**
**புவனச்சந்திரன்**
கணிதம்
கனடா



**திரு. உலகநாதன்**
**நவரத்தினம்**
சமூகக்கல்வி
கொழும்பு



**திருமதி. அமிர்தநாயகம்**
**துரைரட்ணம்**
மனைப்பொருளியல்



**திரு. சிதம்பரம்**
**சிற்றம்பலம்**
**சுப்பிரமணியம்**
கணிதம் - கொழும்பு



**திருமதி. இராஜேஸ்வரி**
**சண்முகரத்தினம்**
விஞ்ஞானம்
இங்கிலாந்து



**திருமதி. பத்மஜா**
**லோகநாதன்**
விஞ்ஞானம்
தெல்லிப்பளை



**திரு. குட்டியர்**
**சண்முகலிங்கம்**
மரவேலை
இங்கிலாந்து



**திரு.கனகசபாபதி**
**தாமோதரம்பிள்ளை**
ஆங்கிலம்
தெல்லிப்பழை



**திருமதி.**
**G.Y.வேலுப்பிள்ளை**
ஆங்கிலம்
கனடா



**திருமதி. விமலராணி**
**நாகேந்திரா**
சுகாதாரம்
கொழும்பு



**திருமதி. சதீஸ்வரி**
**தவத்துரை**
தெல்லிப்பழை
நெசவு



**திருமதி. பாலசுந்தரி**
**வாமதேவன்**
தமிழ் - அளவெட்டி



**திரு. வல்லிபுரம் செனகரத்தினம்**
தமிழ் - வல்லுவத்தை



**திரு. செல்லையா இராஜகுலேந்திரன்**
தமிழ் - அளவெட்டி



**திருமதி. இராஜலட்சுமி கங்காதரன்**
தமிழ் - கொழும்பு



**திருமதி. நல்லநாயகி யோகநாதன்**
தமிழ் - கரவெட்டி



**திரு. கணபதிப்பிள்ளை முத்துலிங்கம்**
வர்த்தகம் - பன்னாலை



**திருமதி. பரமேஸ்வரி பாலசிங்கம்**
தமிழ் - கனடா



**திருமதி. வாசுகி குகநாதன்**
நடனம் - அமெரிக்கா



**திருமதி. தனபதி பாலசுப்பிரமணியம்**
தமிழ் - இங்கிலாந்து

## உயர்தரப்பிரிவு ஆசிரியர்கள்



**திருமதி. திரிபுரசுந்தரி சிவசுப்பிரமணியம்**
விலங்கியல்- வடமராட்சி



**திரு. பொன்னையா சுந்தரலிங்கம்**
இரசாயனவியல் - அளவெட்டி



**திருமதி. சிவமலர் அனந்தசயனன்**
தாவரவியல் - அளவெட்டி



**திருமதி. ஆனந்தி சிவஞானசுந்தரம்**
அரசியல் - அளவெட்டி



**திருமதி. செல்வகுமாரி துரைசிங்கம்**
பொருளியல் - கொல்லங்கலட்டி




**திரு. கனகசபை காராளசிங்கம்**
அளவையியல் - பன்னாலை



**திருமதி. சீதாதேவி தேவதாசன்**
இந்துநாகரிகம் - தெல்லிப்பழை



**திரு. நாகமுத்து வேல்நாயகம்**
கணக்கியல் - கனடா




**திரு. வைத்திலிங்கம்**
**குணரத்தினம்**
பொருளியல்
இங்கிலாந்து



**திரு. செல்லத்துரை**
**சத்தியமூர்த்தி**
இணைந்த கணிதம்
இங்கிலாந்து



**திரு. செல்வநாயகம்**
**நவரட்ணம்**
தாவரவியல்
இங்கிலாந்து



**திரு. கந்தையா**
**யோகலிங்கம்**
பௌதீகவியல்
அளவெட்டி



**திரு.சுப்பிரமணியம்**
**சயந்தன்**
அளவையியல்
பன்னாலை




**திருமதி. செல்வகுமாரி**
**கனகசபாபதி**
வர்த்தகம்
விழிசிட்டி




**திரு. இ. பிரதாபசர்மா**
அளவையியல்
சங்கானை



**திரு. சண்முகலிங்கம்**
**தயாபரன்**
பௌதீகவியல்
நியூசிலாந்து




**திரு.ஜெயமனோகர்**
**இராஜரட்ணம்**
வர்த்தகம்
கொழும்பு



**திரு. சுப்பிரமணியம்**
**மகாலிங்கம்**
கணிதம்
இங்கிலாந்து

# அமரர்களான ஆசிரியர்கள்



**அமரர். சின்னத்தம்பி அம்பலப்பிள்ளை**
ஆரம்பபிரிவு உபஅதிபர்



**அமரர். செல்லையா தியாகராஜா**
சித்திரம்



**அமரர். திரு. கந்தையா குலசேகரம்**
கணிதம்



**அமரர். திருமதி. நகுலாம்பிகை தம்பு**
ஆரம்பப்பிரிவு




**அமரர். செல்வி. சிதம்பரலட்சுமி முத்தையா**
ஆரம்பப்பிரிவு



**அமரர். திருமதி. ரோகினி இரத்னவேல்**
ஆரம்பப்பிரிவு



**அமரர். திருமதி. தவமணி பொன்னுத்துரை**
ஆரம்பப்பிரிவு



**அமரர். திருமதி. பரமேஸ்வரி குலசேகரம்**
ஆரம்பப்பிரிவு



**அமரர். திருமதி. சரஸ்வதி கனகேஸ்வரன்**
சமூகக்கல்வி



**அமரர். திருமதி. கங்கு செல்வமலர் இந்திரசிங்கம்** - விஞ்ஞானம்



**அமரர்.திரு.சரவணமுத்து விநாயகரத்தினம்**
சைவநெறி



**அமரர். திரு.கந்தையா ஞானசேகரன்**
கணிதம்



**அமரர். செல்வி. நாகம்மா கதிர்காமர்**
சங்கீதம்




**அமரர். திரு.அப்புக்குட்டி திலகேஸ்வரன்**
சங்கீதம்



**அமரர். திரு.சின்னத்தம்பி கயிலைமகான்**
விவசாயம்



**அமரர். திருமதி. சாவித்திரிதேவி துரைச்சாமி** - கணிதம்



அமரர்.
திரு.சரவணமுத்து
செல்லர் அருட்பிரகாசம்
உடற்கல்வி



அமரர்.
திரு.சுப்பிரமணியம்
சரவணபவன்
பொருளியல்



அமரர். திருமதி.
கமலானந்தயோகேஸ்வரி
செல்வராஜா
இந்துநாகரிகம்



அமரர்.
திரு. இளையதம்பி
பஞ்சநாதன்
பௌதீகவியல்




அமரர். செல்வி.
ஜெகசோதி செல்லப்பா
ஆங்கிலம்



அமரர். திருமதி.
சிவபாக்கியம் ஜெயரட்ணம்
(றோஜா ஆசிரியர்)
ஆரம்பப்பிரிவு



அமரர். திருமதி.
மரகதவல்லி
சர்வானந்தராஜா
ஆரம்பப்பிரிவு



அமரர். கந்தையா
சண்முகரட்ணம்
பௌதீகவியல்




அமரர். இராஜமலர்
சத்தியமூர்த்தி
விவசாயம்



அமரர். செல்லத்துரை
இடைநிலை
கணிதம்



அமரர். குலநாதன்
கணிதம்



அமரர். வசந்தகுமார்
கணிதம்



அமரர்.விமலாவதி டுவயிட்
ஆங்கிலம்



அமரர். துரைராஜா
ஆங்கிலம்

# இயல் - 02

## 87 சாதாரணதர, 90 உயர்தர மகாஜனன்கள்

# மகாஜனாவில் நாங்கள்....

1978ஆம் வருடம் தை மாதம் முதல் பாடசாலை நாளது. அம்மா அப்பாவின் கையைப் பற்றிய வண்ணம் வீதியின் மறுபக்கத்திலே கண்ணுக்கெட்டிய தூரம்வரை பச்சைப்சேலென தெரிந்த வயலை ரசித்த வண்ணம் பாடசாலையில் கால் பதித்தோம். கம்பீரமாக நின்ற பாவலர் துரையப்பாவின் சிலையையும் உயர்ந்த கட்டிடத்தையும் இருபாதை ஓரமும் வரிசையாக நின்று சாமரம் வீசி வரவேற்ற அசோக மரங்களையும் பார்த்தவுடன் நாம் பெரிய கல்லூரியில் தான் கல்வி கற்கப்போகிறோம் என்ற சிறு இறுமாப்புடன்தான் எமது பாடசாலை வாழ்க்கையை ஆரம்பித்தோம். அன்று எமது பாடசாலை அதிபராக கனகசபாபதி ஆசிரியரே இருந்தார்.

மகாஜனக்கல்லூரி மிகவும் அழகான பாடசாலை. பாடசாலை உள்நுழைவதற்கு ஒரு வாயிற்புறமும் வெளியேறுவதற்கு இன்னொரு பாதையும் கொண்டது. எந்த வகுப்பறையிலிருந்து பார்த்தாலும் தெரிகின்ற மைதானம் ஓங்கி உயர்ந்த நிழல் கொடுக்கும் மரங்கள் காய்த்துத்தொங்கும் மாமரங்கள் என பல இயற்கையும் தன்னகத்தே அமையப்பெற்றது என்றே சொல்லலாம். துரையப்பாபிள்ளை மண்டபம் ஜெயரத்தினம் மண்டபம் என இருமண்டபங்களையும் கொண்டுள்ளது.

எமது வகுப்பு A, B என இரு பிரிவாக பிரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. வகுப்பறை வாசலிலிருந்து அன்போடு அழைத்துச் சென்ற எமது முதல் ஆசிரியர்கள் பரமேஸ்வரி ஆசிரியரும் முத்தையா ஆசிரியரும்: என்றுமே மறக்கமுடியாதவர்கள்தானே. சிலரது செல்லச்சிணுங்கல்கள், சிலரது புன்முறுவல்கள், தெரிந்தும் தெரியாமலும் பல விதமான முகங்கள் என்று நாம் வகுப்பறையின் கால் தடம் பதித்த முதல் நாள். அப்பொழுது ஆரம்ப பாடசாலை அதிபராக அம்பலப்பிள்ளை ஆசிரியரும் பின்பு தனபாலசிங்கம் ஆசிரியரும் இருந்தார்கள்.

பாடசாலையில் வீற்றிருக்கும் ஆனந்த நடராஜர் கோவில் இன்னுமோர் சிறப்பு. தினமும் காலை நேரத்தில் நடக்கும் பூஜையை இராக்குருக்கள் பரம்பரையினர் ஆற்றி வந்தனர். நாகம்மா ஆசிரியரின் தேவாரத்துடன் பூசை நிறைவுபெறும். முதல் மணியோசையோடு ஆரம்பமாகும் வகுப்பறை பாடங்கள் என மிகவும் உற்சாகமாக ஆரம்பித்த நேரத்தில் மெதுவாகப் புதுப்புது நட்பும் துளிர்விடத்தொடங்கியது.

கனக்கியண்ணை வரவுப் பதிவேடு கொண்டு வந்து ஆசிரியரிடம் கொடுப்பார். எங்கள் பெயர் கூப்பிட்டவுடன் எல்லோருடைய பெயர்களையும் நினைவில் நிறுத்த ஆரம்பித்துவிடுவோம். இடைவேளை நேரத்தில் கிடைக்கும் பிஸ்கட் எத்தனை உடையாமல் கிடைத்தது என்று எங்களுக்குள் போட்டியே நடக்கும். நண்பர்களுடன் கூடிப் பகிர்ந்துண்ணல் முறையை ஆரம்பித்ததும் இங்கிருந்துதான். வரிசையாக நிற்கும் மரங்களில் இருந்து பூக்களைக் கைகளில் ஏந்தினால் அதிஷ்டம் என்று கூறி ஆர்வமாகப் பிடித்து மகிழ்வதுண்டு.
2ம் வகுப்பு படிக்கும்போது முதன் முறையாக வகுப்புமாணவர்கள் எல்லோரும் ஔவையார் திரைப்படமும் ஞானக்குழந்தை திரைப்படமும் வகுப்பாசிரியர்களுடன் சென்று வெள்ளித் திரையில் பாாத்து மகிழ்ந்தோம்.

3ஆம் வகுப்பில் றோசா ஆசிரியரும் முத்தையா ஆசிரியரும் கற்பித்தார்கள். பின்பக்கமாக இருந்த சிறிய மைதானத்துடன் கூடிய 2 வகுப்பறைகள் மட்டுமே உள்ள இடத்தில் தான் வகுப்பு நடைபெற்றது. ஆங்கிலப் பாடம் நளினி ஆசிரியரிடம் கற்றோம்.

4ஆம் வகுப்பில் றோகினி ஆசிரியரும் தளையசிங்கம் ஆசிரியரும் வகுப்பாசிரியர் களானார்கள். மரகதவல்லி ஆசிரியரும் திருமதி பொன்னுத்துரை ஆசிரியரும் கூட எமக்குக் கற்பித்த ஆசிரியர்களே.

4அம் வகுப்பில் நாம் சுற்றுலா சென்று இருந்தோம் அதுவே எங்கள் முதல் சுற்றுலா என்பதால் எல்லோருமே உற்சாகத்துடன் சென்று வந்தோம். சீமெந்துத் தொழிற்சாலை, துறைமுகம், பூங்கா, புகையிரத நிலையம், பலாலி விமான நிலையம் மயிலிட்டி மீன்பதப் படுத்தும் தொழிற்சாலை, நெல்லிரசம் தயாரிக்கும் இடம், நெசவுஆலை, மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை .என்று நிறைய அனுபவங்கள் பெற்றோம்

விநாயகரட்ணம் ஆசிரியரின் வழிகாட்டுதலில் சிவநெறிக்கழகப் போட்டிகள் மற்றும் விவேகானந்த சபைப் பரீட்சைகள் என்பவற்றிலும் நாம் பங்குபற்றி பரிசில்கள் பல பெற்றோம். மேலும் சிவராத்திரி காலங்களில் இடம் பெறும் சிவநெறிக்கழகப் போட்டிகள் எல்லாவற்றிலும் எமது பாடசாலை முன்னிலை வகிக்கும்.

காலையில் நடக்கும் உடற்பயிற்சி மிகவும் சுவாரஸ்யமாக இருக்கும். இடைவேளை வந்து விட்டால் குழுக்களாக பிரிந்து கிளித்தட்டு, எட்டுப்பெட்டி, நாயும் இறைச்சித்துண்டும் என பல விளையாட்டுக்களை விளையாடி மகிழ்வோம்.

பாடசாலை வளாகத்திலிருக்கும் புத்தகசாலை (கிருஸ்ணமூர்த்தி அவர்கள்தான் அதிககாலம் அங்கு கோலோச்சி இருந்தார் என்றே சொல்லலாம்) மற்றும் சங்கரப்பிள்ளை அண்ணையின் தேநீர்ச்சாலை குறிப்பிடத்தக்க விடயமாகும். துவிச்சக்கரவண்டி நிறுத்துமிடம் கூட மிகவிசாலமானதே.

இணைத்துறைகளான சங்கீத, நடன வகுப்பறை, மரவேலை, சித்திரக் கூடம், மனையியல் அறை, நெசவுகூடம், விவசாயம், விஞ்ஞானபரிசோதனைக்கூடம் என பல சிறப்பம்சங்களை கொண்டது எமது பாடசாலை. நீண்டகாலமாக மகாஜனாக் கல்லூரியில் தான் ஆண்கள் விடுதி அமையப்பெற்றிருந்தது. பின்நாட்களில் இடம்பெற்ற இடப்பெயர்வுகளின் காரணமாகவே விடுதிவசதி இல்லாதுபோனது.

5அம் வகுப்பில் எம்மைப் புலமைப்பரிசில்பரீட்சைக்குத் தயார் செய்யும் நோக்குடன் தம்பு ஆசிரியரும் பரமேஸ்வரி சண்முகராஜா ஆசிரியரும் கற்பித்தனர். ஆயினும் இங்கு பலர் பரீட்சைக்குத் தோற்றவில்லை. அரசாங்கத்தில் தொழில் புரிபவர்களின் பிள்ளைகள் பரீட்சை எடுக்கமுடியாத நிலை அன்று இருந்தது.

1983 ஆம் வருடம் எமது 2ஆவது பரிமாணத்திற்கு முன்னேறினோம். அதாவது 6ஆம் வகுப்பை நாம் தகரக்கொட்டிலில் இருந்துதான் ஆரம்பித்தோம். A,B,C,D E என வகுப்பறைகள் நீண்டது போல பலர் வேறு பாடசாலைகளிருந்து வந்து நண்பர்களாக இணைந்தனர். பாடப்புத்தகங்களின் தொகையும் அதிகரித்துச் சென்றது பல ஆசியர்களிடம் கல்வி கல்வி கற்றோம். (விபரம் இணைக்கப்பட்டுள்ளது)

1984, 1985 காலப்பகுதியில் எமது பாடசாலையில் நடைபெற்ற பாரிய பொருட்காட்சி இன்னும் நினைவில் நிறைந்துள்ளது.

விளையாட்டுப் போட்டி என்று வந்து விட்டால் ஐந்து இல்லங்களான துரையப்பா, ஜெய ரட்ணம், அருளம்பலம், சின்னையா, சின்னப்பா எனப் பிரிந்து போட்டிகள் களைகட்டிவிடும். வீரர்கள் ஒருபுறம், வெற்றிக்களிப்பை கொண்டாடும் கூட்டம் மறுபுறம். இல்ல விளையாட்டுப் போட்டிகளில் மிக ஆர்வமாகப் பங்கு பற்றி பரிசில்களைத் தட்டிச் சென்றோம். கொடியேறும் போது இடம்பெறும் “கொடிபறக்குது கொடிபறக்குது பாரடா” என்ற பாடல் அனைவரையும் மெய்சிலிர்க்க வைக்கும். அத்துடன் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றி பரிசில்களை வென்றோம். இவை மட்டுமல்லாது கிரிக்கட், வலைப் பந்தாட்டம், கால்பந்தாட்டம் என்பவற்றில் எமது பாடசாலை வீறுநடை போட்டது.

பெண் சாரணர் குழு முகாம்,முதலுதவி சிகிச்சை முறைமைகளைக் கற்றறிந்ததும் இங்குதான். அனர்த்த சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காககுழுக்களாகப் பிரிந்து வீடு வீடாகச் சென்று, உடைகளைச் சேகரித்து, அவற்றைத் தரம் பிரித்து உரியவர்களிடம் சேர்ப்பித்தோம். அதே போன்று கோவில் திருவிழா காலங்களில் உண்டியல் மூலம் நிதி திரட்டி வழங்கினோம் நிறைய மகிழ்வான தருணங்கள் கோபம் சண்டைகள் நேசமான உறவுகள் விளையாட்டுக்கள் விழாக்கள் என பாடசாலையைவிட வேறெங்கும் அனுபவிக்க முடியாத, என்றும் எம்மால் மறக்க முடியாத நினைவலைகளே எம்மை இன்றுவரை மகிழ்ச்சிப் படுத்துகிறது.


மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் 17வது திருவிழா எங்கள் பாடசாலை திருவிழா. அதனால் மாவிளக்கிட்டு மகிழ்ந்தோம். நவராத்திரி காலம் எப்போதுமே சிறப்பானது. போட்டி போட்டுக்கொண்டு கோலம் இடுவோம். வீடுகளிலிருந்து அவல், கடலை, பழவகை என எடுத்துச்செல்வோம். திருக்கேதீஸ்வரத்திற்குச் சென்று பாலாவியில் நீராடி குடத்திலே நீர் கொண்டு சென்று பூஜை வழிபாடு செய்திருந்தோம். பரிசளிப்பு விழாக்களில் ஆடிய நடனங்களும் பாடிய பாடல்களும் நாடகங்களும் கூட சுவாரஸ்யமானவையே.

எமது பாடசாலை வாழ்க்கை சற்றே மாறுபாடனதுதான் பல இடபெயர்வுகள் பல மாற்றங்கள். 1987ஆம் ஆண்டு க பொ த சாதாரணதரப்பரீட்சை எழுத வேண்டிய நாம் 1988 இல்தான் பரீட்சைக்கு தோற்றினோம்.

உயர்தரக் கல்வி எமக்கு ஒரு புது அனுபவத்தைக் கொடுத்தது என்றே சொல்லவேண்டும். நாம் சற்றே பெரியவர்களாகி விட்டோம் என்றே சொல்ல வேண்டும். வர்த்தகப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, கணிதப் பிரிவு, கலைப்பிரிவு என நாம் பிரிந்து சென்றோம். மாணவ தலைவர் தெரிவு ,இல்லத் தலைவர் தெரிவு என எங்கள் முதிர்ச்சியை பறைசாற்றிய இடம். பலர் வேறுபாடசாலைகளில் கல்விக்காக பிரிந்து சென்றுவிட்டாலும் மகாஜனன் என்ற தாரக மந்திரம் எல்லோரையும் கட்டிப்போட்டுவிடும் என்றே சொல்லலாம். இல்ல விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் நடைபெறும்போது தவறாது எங்களுடன் இணைந்து விடுவார்கள்.

அதே போன்று க.பொ.த உயர்தரப்பரீட்சை 1990ஆம் ஆண்டு நடக்கவேண்டிய பரீட்சை 1991இல் தான் நடைபெற்றது ஆனால் பலர் பரீட்சை எடுக்கமுடியாத நிலைமையினால் புலம்பெயரந்து வெளிநாடுகளிற்கு சென்றுவிட எஞ்சிய சிலபேர் மட்டுமே பரீட்சை எழுதமுடிந்தது. பாடசாலை கூட இடம்பெயரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இன்று நாம் நண்பர்கள், மகாஜனன்களாக மீண்டும் எம் நினைவுகள் சங்கமிக்கக் கூடுவது மிகப்பெரும் ஆனந்தத்தை அளிக்கிறது. காலமுள்ளவரை மகாஜனா எம் உயிருடன் இரண்டறக் கலந்திருக்கும்.

# மகாஜனாவின் 87 O/L, 90 A/L அணி நபர்கள்


திரு.கதிர்காமநாதகைலைநாதர்
நிரஞ்சன்
கனடா 1-Jan


திரு.சிவபாதரத்தினம்
சிவசிவா
அளவெட்டி 3 -Jan


திருமதி.கிருபவதனி
சிவமோகன்
கோண்டாவில் 3-Jan


திருமதி.மிருணாளினி
ஜவேஷ்வரா ரூபன்
கனடா 4-Jan


திருமதி.மதிவதனி
கிருஸ்ணமூர்த்தி
பன்னாலை 5-Jan


திருமதி.சுகிர்தா
சுகுமார்
சுன்னாகம் 7-Jan



திரு.தர்மலிங்கம்
பரமசிவம்
கனடா 10-Jan


திருமதி.கபிலை
சிவராசா
அளவெட்டி 15-Jan


திருமதி.ஜெயராணி
சக்திவேல்
பிரான்ஸ் 18-Jan


திருமதி.மஞ்சுளா
சந்திரகுமார்
ஜேர்மனி 18-Jan


திருமதி.சுமதி
யசோதரன்
இங்கிலாந்து 19-Jan


திரு.பொன்னம்பலம்
பார்த்தீபன்
பிரான்ஸ் 20-Jan


திருமதி.மீரா
வேல்ழகன
டென்மார்க 24-Jan


திருமதி.கோமதி
மாயகிருஸ்ணன்
பன்னாலை 28-Jan


திரு.பரதராஜா
ரமேஷ்குமார்
பிரான்ஸ் 30-Jan


திரு.க.ஆனந்தவேல்
யாழ்ப்பாணம்
1-Feb



திரு.சுந்தரலிங்கம்
சுரேந்திரன்
இங்கிலாந்து 2-Feb



திரு.சிவபாதம்
சிவரூபன்
இங்கிலாந்து 2-Feb



திருமதி.கலாதேவி
சிவகுமரன்
கனடா 5-Feb



திரு.மகாலிங்கம்
மதிவாணன்
கொழும்பு 12-Feb



திரு.யுவராஜா
சிவன்ராஜ்
அளவெட்டி 23-Feb



திரு.சிவசங்கரப்பிள்ளை
சிவகுமார்
கனடா 28-Feb



Dr.மேகலா
சுதாகரன் கொழும்பு
2-Mar



திரு.குழந்தைவேலு
பார்த்தீபன்
சுன்னாகம் 6-Mar




திரு.தனபாலசிங்கம்
சசிதரன்
வடமராட்சி 10-Mar



திரு.கதிரவேல்
உதயசிறி
திருகோணமலை 10-Mar



திருமதி.இராசமலர்
குகபாலன்
இங்கிலாந்து 14-Mar



திரு.சிவகுருநாதன்
மதியழகன்
சுவிற்சர்லாந்து 17-Mar



திரு.முத்துக்குமார்
வேணுகுமார்
நெதர்லாந்து 18-Mar



திரு.அபிமன்னன்
பங்கயச்செல்வன்
வித்தகபுரம் 20-Mar



திரு.கனகசபை
கருணாநிதி
உரும்பிராய் 22-Mar



திரு.கணேசு ராயு
இங்கிலாந்து
22-Mar



திரு.வரப்புரசிங்கம்
சந்திரமோகன்
கொல்லங்கலட்டி 24-Mar



திருமதி.செந்தில்வாணி
செல்வகுமார்
25-Mar



திருமதி.கலைச்செல்வி
கணபதிப்பிள்ளை
இங்கிலாந்து 26-Mar




திருமதி.பூங்குயில்
ஜெகதீஸ்வரன்
கனடா 26-Mar



திருமதி.தவராணி
திருக்கேதீஸ்வரச்செல்வன்
கொல்லங்கலட்டி 26-Mar



திருமதி.சாந்தாதேவி
தயாளலிங்கம்
கனடா 26-Mar



திரு.சிறிவாமதேவன்
குருபரன்
வவுனியா 27-Mar



திருமதி.ஜெயகௌரி
சபேசன்
கனடா 28-Mar



திருமதி.சுபாஷினி
நிமலசிங்கம்
ஜேர்மனி 31-Mar



திரு.பழநிநாதன்
சர்வேஸ்வரன்
விழிசிட்டி 5-Apr



திரு.நற்றுணை
மணிசேகர்
பிரான்ஸ் 8-Apr



திருமதி.உமாராணி
ஹரிகரன்
இங்கிலாந்து 9-Apr



Dr.சிவரூபி
செல்வநாதன்
கொழும்பு 14-Apr



திரு.சிவசுப்பிரமணியம்
பார்த்தீபன்
உரும்பிராய் 19-Apr



திருமதி.கௌசல்யா
விமலதாசன்
மாசியப்பிட்டி 19-Apr



திரு.தம்பையா
கணேஸ்குமார்
இங்கிலாந்து 20-Apr



திரு.ஹரிச்சந்திரா
தனுசன்
இங்கிலாந்து 23-Apr



திரு.இலங்கநாதன்
குகநாதன்
இங்கிலாந்து 30-Apr




திருமதி.சசிகலா
சிவநடராசா
தெல்லிப்பழை 1-May



திருமதி.திலகமலர்
இலங்கநாதன்
தெல்லிப்பழை 3-May



திருமதி.புவனேஸ்வரி
கிருஸ்ணலிங்கம்
கொல்லங்கலட்டி 7-May



திரு.ஆசைப்பிள்ளை
உதயராசா
வடமராட்சி 12-May



திருமதி.வாசுகி
ஜெயரூபன்
சண்டிலிப்பாய் 13-May



திருமதி.சர்மிலா
பகீஸ்வரன்
உரும்பிராய் 18-May



திருமதி.மனோமாலினி
சிறிகரன்
சுன்னாகம் 19-May



திரு.சோமசுந்தரம்
நெவின்ஸ்ராஜ்
இங்கிலாந்து 19-May



திருமதி.சுகந்தி
சிவகுமரன்
அவுஸ்ரேலியா 24-May



திருமதி.சபிதா
பார்த்தீபன்
இங்கிலாந்து 25-May




திரு.நடராஜா
செல்வநாதன்
கொழும்பு 26-May



செல்வி.கீதா
சோமசுந்தரம்
கொழும்பு 27-May



திருமதி.யாழினி ரோயல்
சிறிகரன்
பிரான்ஸ் 28-May



திரு.சந்திரசேகரம்
துசியந்தன்
பிரான்ஸ் 30-May


திருமதி.கலாரஞ்சினி
விஜேந்திரன்
இளவாலை 5-Jun


திரு.நடராஜா
வரதராஜன்
இங்கிலாந்து 7-Jun


திரு.சின்னத்தம்பி நரேஸ்
கனடா
7-Jun


திருமதி.சந்திரகலா
அருள்சோதி.
கொல்லங்கலட்டி 9-Jun


திரு.பொன்னம்பலம்
ஜெயரூபன்
அளவெட்டி 9-Jun


திரு.நாகலிங்கம்
முகுந்தன்
அளவெட்டி 12-Jun


திருமதி.அனுஜா
சத்தியகுமார்
மானிப்பாய் 12-Jun


திரு.கயிலைநாதன்
சதுர்முகன்
இங்கிலாந்து 14-Jun


திரு.நடராஜர்
காண்டீபன்
கொழும்பு 15-Jun


திரு.செல்லத்துரை
சரத்சந்தர்
வட்டுக்கோட்டை 17-Jun


திருமதி.கேமமாலினி
சிவலிங்கம்
பிரான்ஸ் 24-Jun



திரு.நடராஜா
ஜெயராஜ்
இங்கிலாந்து 25-Jun


திரு.தனபாலசிங்கம்
புவனசிங்கம்
கனடா 26-Jun


திருமதி.கௌரி
சுஜாதரன்
இங்கிலாந்து 01-Jul



திரு.நவரத்தினம்
கோடீஸ்வரன்
கீரிமலை 01-Jul


திருமதி.சசிதேவி
சண்முகசுந்தரம்
கொழும்பு 06-Jul


திரு.தவராஜா
ஜெயக்குமார்
பிரான்ஸ் 07-Jul



திரு.சுப்பிரமணியம்
சுரேஸ்குமார்
தெல்லிப்பழை 08-Jul



திருமதி.சிறிராமச்சந்திரன்
வாசுகி
பன்னாலை 08-Jul


திரு.சிவலிங்கம்
ரமேஸ்
கனடா 12-Jul


திரு.கனகரத்தினம்
செல்வேள்குமரன்
ஜேர்மனி 13-Jul


திருமதி.சிந்துஜா
டானியல்
ஜேர்மனி 13-Jul


திரு.கிருபலிங்கம்
சுதர்சன்
கனடா 15-Jul


திரு.முத்துக்குமாரு
சிவதாசன்
கனடா 19-Jul


திரு.கணபதிப்பிள்ளை
நித்தியானந்தன்
கல்வியங்காடு 19-Jul


திரு.குணரத்தினம்
பத்மராசா
பிரான்ஸ் 20-Jul


திரு.இராசேந்தரம்
இளங்குமரன்
வடமராட்சி 27-Jul


திரு.அருமைத்துரை
சிறிதரன்
பிரான்ஸ் 28-Jul


திருமதி.வற்சலா
கருணாகரன்
யாழ்ப்பாணம் 28-Jul


திருமதி.ஜெயந்தி
கெங்காதரன்
கனடா 3-Aug


திருமதி.பிறேமினி
பிரதாபன்
கனடா 4-Aug



செல்வி.மனோன்மணி
சின்னத்தம்பி
கருகம்பனை 4-Aug




திருமதி.அமுதினி
கதிர்காந்தன்
கனடா 7-Aug




திருமதி.சுகந்தி
ஞானகணேஷ்
கனடா 11-Aug



திரு.தங்கவடிவேல்
அரவிந்தன்
இங்கிலாந்து 12-Aug



திரு.வெற்றிவேல்
அஜித்
கனடா 14-Aug



Dr.பாலச்சந்திரன்
கேதீசன்
தாவடி தெற்கு 18-Aug



திரு.தங்கராசா
அகிலன்
வட்டுக்கோட்டை 20-Aug



திருமதி.ஜெயவதனி
செல்வநந்தன்
சுவிற்சர்லாந்து 23-Aug



திரு.இராசரத்தினம்
புனிதன்
பிரான்ஸ் 23-Aug



திருமதி.இராஜகௌரி
குமரேசன்
விராங்கொடை
தெல்லிப்பழை 24-Aug




திருமதி.கருணாவதி
தேவதாசன்
தெல்லிப்பழை 26-Aug



செல்வி.உமா
கருணாநிதி
தெல்லிப்பழை 27-Aug



சிவஸ்ரீ.சிவானந்த ஐயர்
சோதிரட்ணசர்மா
கொழும்பு 27-Aug



திரு.முருகையா
முரளீதரன்
இங்கிலாந்து 31-Aug




திருமதி.பாமினி
ஜெயநாதன்
கனடா 31-Aug



திருமதி.ஆஷா
சந்திரகுமார்
சுவிற்சர்லாந்து 11-Sep



திரு.சுந்தரமூர்த்தி
திருமால்
பிரான்ஸ் 16-Sep



திரு.இரத்தினம்
சசிகரன்
கனடா 18-Sep



திரு.குகானந்தன்
சீராளன்
கொழும்பு 21-Sep



திருமதி.அபிராமிச்செல்வி
தர்மராஜா
இங்கிலாந்து 3-Oct



திரு.இராமலிங்கம்
மதன்லால்
ஜேர்மனி 8-Oct



திருமதி.பரஞ்சோதி
சிவகரன்
பன்னாலை 10-Oct



Dr.கலைச்செல்வி
விஜயசிங்கம்
இங்கிலாந்து 12-Oct



திருமதி.சிவாஜினி
விக்னேஸ்வரன்
அளவெட்டி 15-Oct



திரு.அன்னலிங்கம்
பிரதீபன்
கனடா 17-Oct



திருமதி.வத்சலா
ரஞ்சிதன்
கனடா 17-Oct



திருமதி.தயாளினி
கமலாகரன்
சுவிற்சர்லாந்து 18-Oct



திரு.சிவராமலிங்கம்
சிவதாஸ்
பிரான்ஸ் 19-Oct



புவனேஸ்வரி
லோகநாதன்
சுவிற்சர்லாந்து 20-Oct



திருமதி.லிங்கேஸ்வரி
சுந்தரமூர்த்தி
அளவெட்டி 26-Oct



திருமதி.தயாவதி
சிறிகந்தராஜா
பன்னாலை 30-Oct



திருமதி.விஜிதா
சர்வானந்தன்
சுவிற்சர்லாந்து 01-Nov



திரு.தர்மலிங்கம்
சிவசுதன்
அவுஸ்ரேலியா 02-Nov



திரு.இராஜரத்தினம்
தயாபரன்
இங்கிலாந்து 03-Nov



திருமதி.தேவகி
தவராஜா
கனடா 01-Nov



திருமதி.வானதி
காண்டீபன்
கொழும்பு 05-Nov



திரு.வைரமுத்து
இலங்கநாதன்
தெல்லிப்பழை 03-Nov




திரு.சபாபதி
கிரிதரன்
பன்னாலை 8-Nov



திருமதி.யசோதை
செந்தில்செல்வன்
பிரான்ஸ் 12-Nov



திருமதி.சசிதா
ரமேஷ்குமார்
பிரான்ஸ் 22-Nov



திரு.செல்வராஜா
ஜெயபவன்
பன்னாலை 23-Nov



திருமதி.வளர்மதி
ரவீந்திரன்
திருகோணமலை 25-Nov



திருமதி.ஜெயராணி
சிவமூர்த்தி
கனடா 26-Nov



திரு. நாகராஜா
கண்ணதாசன்
கொழும்பு 24-Jan



திருமதி.நந்தினி
சத்தியதேவன்
பிரான்ஸ் 30-Nov



திரு.செல்லத்துரை
நாவலன்
கனடா 4-Dec



திருமதி.அகிலா
சுதேந்திரன்
நியூசிலாந்து 4-Dec



திரு.வி.பகீரதன்
கனடா
8-Dec



திருமதி.பாமினி
யோகநாதன்
நோர்வே 9-Dec



திருமதி.மகாலட்சுமி
நகுலேஸ்வரன்
அம்பனை 11-Dec



Dr.றதிக்கா
யோகலிங்கம்
இங்கிலாந்து 14-Dec



திருமதி.தேவகி
யோகச்சந்திரன்
இங்கிலாந்து 15-Dec



திருமதி.நளாயினி
ஜெயவீரசிங்கம்
இங்கிலாந்து 21-Dec



திருமதி.பவானி
யோகரட்ணம்
இந்தியா 21-Dec



திருமதி.மேகலா
இராஜ்குமார்
இங்கிலாந்து 23-Dec



திருமதி.வனிதா
அசோக்குமார்
கொழும்பு 23-Dec



திருமதி.ரதி
தெய்வேந்திரன்
கொல்லங்கலட்டி 24-Dec



திருமதி.ரேவதி
நவரட்ணம்
கனடா 26-Dec



திருமதி.இராஜேஸ்வரி
நடராஜா
வல்லுவத்தை 26 Dec



திருமதி.அமுதா
குகநேசன்
சுவிற்சர்லாந்து 29-Dec



திரு.வீரவாகு
கிருஸ்ணராஜா
குப்பிளான் 30-Dec



திருமதி.ஆனந்தபவானி
சிவகுணபாலன்
இங்கிலாந்து 8-Apr



திருமதி.குமுதினி
சண்முகராசா
நியூசிலாந்து 23-May



திருமதி.குமுதா
அமிர்தநாயகம்
கனடா



திரு.பசுபதிநாதன்
மகேசன்
அளவெட்டி 7-Oct


திரு.பாலகிருஸ்ணன்
குகன்
அளவெட்டி 16-Mar


திருமதி.வதனமாலினி
நித்தியானந்தம்
திருகோணமலை 4-Jul


திரு.செல்வரட்ணம்
பிரகாஷ்
25-Apr


திரு.வேலுப்பிள்ளை
அனுரா
01-Aug


திருமதி இராஜேஸ்வரி
குமாரசாமி
09-Aug


திருமதி செல்லராணி
ஜெகதீஸ்வரன்
கனடா 09-Aug


திருமதி.சுபேதன் வனிதா
விராங்கொடை
தெல்லிப்பழை 15-Mar


திருமதி. மோகனவதனி
பாக்கியலிங்கம்
நோர்வே 18-Apr


திருமதி. ஞானதேவி
சந்திரகுமார்
தையிட்டி 30-June


திருமதி. ஞானேஸ்வரி
பிருந்தாபன்
இங்கிலாந்து 08-Aug


திரு.இராமநாதன்
இன்பதாஸ்
கிளிநொச்சி


திரு.துரைரட்ணம்
முரளிதாசன்
பன்னாலை 27-Nov


திரு.தியாகராஜா
சிவசுப்பிரமணியம்
பன்னாலை 27-Nov


திரு.வைத்தியலிங்கம்
தவராசா
கருகம்பனை 28-Nov


திரு.பாலசிங்கம்
குலசிங்கம்
சடச்சப்பை 17-May


திருமதி.பத்மாவதி
பாலகிருஷ்ணன்
நவாலி



திரு. நாகலிங்கம்
குணபாலசிங்கம்
பன்னாலை 11-May



திருமதி. சீவரத்தினம்
லலிதாதேவி
கட்டுவன்

திருமதி.லலிதா கருணகாகரன்
- பிரான்ஸ் - 10-Feb
திரு.சிவேந்திரன்
திரு.நடராசா கிருபாகரன்
- விழிசிட்டி – 19-Oct
திரு. கதிரேசு சிவனேந்திரன்
- கீரிமலை – 02-Jul

# அமரர்களான நண்பர்கள்



அமரர்.விஜயலட்சுமி
இளமுருகன



அமரர்.சர்வாஜினி
சுரேஷ்



அமரர்.புஷ்பலதா
பாலச்சந்திரன்



அமரர் கமலாகரன்
பிரபாகரன்



அமரர்.பரமானந்தம்
அச்சுதன்



அமரர்.வேலாயுதம்
ஜெயகாந்தன்



அமரர்.தம்பிராசா
ரகுலதரன்



அமரர் குணரத்தினம்
குணதாசன்



அமரர் இரத்தினம் இரவிச்சந்திரன்



அமரர்.சத்தியசீலன்



அமரர்.ஐங்கரன்



அமரர்.சுபேந்திரன்



அமரர்.சிற்றம்பலம் அன்னலிங்கம்



அமரர். ஜெயசக்தி சண்முகலிங்கம்



அமரர்.ராஜேஸ்கண்ணா வன்னியசிங்கம்



அமரர். நிமலசோதி

1. அமரர்.சசிதரன்
2. அமரர்.முகுந்தன்
3. அமரர்.மகிந்தன்
4. அமரர்.ஜீவன்

# இயல் - 03

## எங்கள் நினைவுகளில் மகாஜனா

01

# எனது முதல் மகாஜனா கல்லூரி ஆசிரியர்...

Dr. கலைச்செல்வி விஜயசிங்கம்

ஏழுவயதில் முதலாம் வகுப்பில் அமர்கின்றேன்
ஆரவாரத்துடன் ஆரம்பிக்கின்றது அந்த வகுப்பு.
ஆசிரியர் பரமேஸ்வரி குலசேகரம் அவர்கள்
அழகான சேலையுடன் மேசையின் முன்னே

அன்பான பிள்ளைகளே என்றழைத்தார் எம்மை
அவரிடம் இருந்தது அன்பும் அரவணைப்பும்
எல்லா மாணவர்களிடமும் அன்பு காட்டினார்
எங்களுக்கு எழுத்தறிவித்து அறிவுரையும் சொன்னார்.

எமது காலப்பகுதியில் சென்றார் தொடர் லீவில்
அக்காலப்பகுதி எனக்கொரு வெற்றிடம்.
எம்மைவிட்டு பிரிந்தாலும் வழிகாட்டியவர்களில்
என்றும் மறக்கமுடியாத ஆசிரியர்களிலொருவர்



# 02

# எழுத்து அறிவித்தவன் இறைவனாகும்

- வி.இ.குகநாதன்

"எழுத்தறி வித்தவ னிறைவ னாகும்" என்ற சொற்றொடரானது அதிவீரராம பாண்டியர் எனும் பிற்கால பாண்டிய அரசனால் பாடப்பட்ட குறுந்தொகை எனும் நூலில் இடம்பெற்றுள்ளது. இந்தச் சொற்றொடரின் பொருள் என்பது "எழுத்து - எழுத்துக்களை, அறிவித்தவன் - கற்பித்த ஆசிரியன், இறைவன் ஆகும் - கடவுள் ஆவான். ஒருவனுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியன் அவனுக்குத் தெய்வமாவான்" என இதன் பொருள் அமையும். அந்தவகையில் எமது பள்ளியில் கற்பித்த ஆசிரியர்கள் யாவருமே எமக்குத் தெய்வம் போன்றவர்கள் என்பதில் ஐயமில்லை. "இவனோர் இள மாணாக்கன்" என்று முதலாம் வகுப்பில் எம்மைப் பள்ளியில் பெற்றோர்கள் சேர்த்து விட்டார்கள். அப்போது எமக்குப் பெரிதாக எதுவுமே தெரியாது. பல்வேறு ஐயங்களுடனும் குற்றங்களுடனும் 1977ம் ஆண்டில் பள்ளியில் சேர்க்கப்பட்டிருந்தோம் . அங்குதான் எமக்கு ஆசிரியர்கள் அறிமுகமாகின்றனர்.

ஆசு + இரியர் = ஆசிரியர்

"ஆசு" என்றால் குற்றம், "இரியர்" என்றால் களைதல், எனவே எம்மிடமிருந்த குற்றங்களைக் களைந்து, ஐயங்களைப் போக்கி, எம்மை ஆளாக்கியவர்களே எமது ஆசிரியப் பெருந்தகைகள். இன்று நாம் எல்லோரும் பல்வேறு துறைகளில் பெருமை பெற்று விளங்குகின்றோம் என்றால் அந்த மாண்பினை எம்மிடம் தோற்றுவித்தவர்கள் இந்த ஆசிரியர்களே!

மாண்பு + அவன் = மாணவன்

மாண்பு (பெருமை) உள்ளவன் "மாணவன்" ஆவான், இதற்கான பெண்பாற் சொல் "மாணவி". "இவனோர் இளமாணாக்கன்" எனக் குறுந்தொகை (குறு.தொகை33) பாடும். இந்த வகையில் எம்மிடம் இந்த மாண்பினை ஏற்படுத்தியவர்கள் ஆசிரியர்களே! எம்மில் பலரும் இன்று மருத்துவர்களாக, பொறியிலாளர்களாக, கணக்காளர்களாக, வழக்கறிஞர் களாக, ஆசிரியர்களாக, தொழில் முனைவோராக இன்னமும் என்ன என்னவாகவோ பல்வேறு துறைகளில் உலகின் பல்வேறு நாடுகளில் பணியாற்றிக் கொண்டுள்ளோம் எனில் அதற்கான அடித்தளத்தினை இட்டவர்கள் எமது ஆசிரியர்களே!

எமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் ஒவ்வொருவருமே எமக்கு முதன்மையான வர்கள்தான், அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் இங்கு குறிப்பிட்டால் பதிவு நீளும், அது பொருத்தமில்லாதது எனினும் ஒரு சில ஆசிரியர்களை மட்டுமே நான் இங்கு குறிப்பிடப் போகின்றேன். பள்ளியில் நான் இணைவதற்கு முன்பே எனக்கு மிகவும் பழக்கமான ஆசிரியராக திருமதி தம்பு ஆசிரியை (தம்பு ரீச்சர்) திகழ்ந்தார். இன்னமும் சொன்னால் எனது குழந்தைப் பருவத்தில் நான் அவரது வீட்டில்தான் பெருமளவு நேரம் இருப்பேன். அந்தவகையில் எனது முதல் ஆசிரியை அவர்தான். எனக்குப் பல்வேறு பாடங்களைக்

கற்பித்ததுடன், நான் சிறு வயதில் பள்ளி சென்று வருவதும் அவருடன்தான். என்னைச் செதுக்கிய முதற் சிற்பி அவர்தான். “தம்பு ரீச்சர்” என்றாலே பள்ளியே அஞ்சும், எனினும் எனக்கு எந்தவித அச்சமும் இருந்ததில்லை, ஒரு நட்புக் கலந்த மரியாதை உணர்வே அவர் மீதிருந்தது. பின்னர் ஐந்தாம் வகுப்பில் அவரே எமது வகுப்பு ஆசிரியராக அமைந்தார். முதலாம் வகுப்பில் எமக்கு வகுப்பு ஆசிரியராக முத்தையா ஆசிரியை (முத்தையா ரீச்சர்) வந்திருந்தார். அவரும் எமது குடும்ப நண்பர், ஆதலால் எனக்குப் பள்ளி செல்லும் போது அச்சம் எதுவும் பெரிதாகவில்லை. எம்முடன் சேர்ந்து அவரும் முதல் மூன்று வகுப்புகளுக்கும் வகுப்பேற்றப்பட்டார்! ஆம், எமக்கு முதல் மூன்று வகுப்புகளிலும் “வகுப்பு ஆசிரியர்” அவரே! அடுத்ததாக என்னிடம் ஒளிந்திருந்த தமிழாற்றலைக் கண்டுகொண்ட ஒரு ஆசிரியை பற்றியும் குறிப்பிட வேண்டும், அது திருமதி செல்வராசா ஆசிரியை. பலரும் மனப்பாடம் செய்ததையே கட்டுரைகளை எழுதிய அக்காலத்தில், நானாக வேறுபட்ட முறையில் கர்ணனையும், கும்ப கர்ணனையும் ஒப்பிட்டு எழுதிய கட்டுரையினைத் திருத்தும்போது படித்த அவர் என் னைக் கூப்பிட்டு “நீ ஒரு எழுத்தாளனாக வருவாய்” எனக் கூறியது இன்றும் பசுமையாகவுள் ளது. அப் போது நான் கனவில் கூட அவ்வாறு நடக்கும் என எண்ணியதில்லை, ஆனால் அது நடந்தது.

“ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்”.

மேலுள்ள திருக்குறள் ஆசிரியை எம்மிடம் தனிப்பட்ட உரையாடலின்போது சொல்வது (திருக்குறள் பாடத் திட்டத்திலில்லை) அதுவே நடந்தது. இந்த மூன்று ஆசிரியைகளும் இப்போது உயிரிடனில்லை, எனினும் அவர்களது நினைவுகள் என்றென்றும் எம்முடன் இருக்கும்.

முதலாம் வகுப்பு ஆசிரியரில் தொடங்கிய நான் எமது இறுதி வகுப்பு (12ம் வகுப்பு) ஆசிரியரையும் சொல்ல வேண்டும், அது ஜெயமனோகரன் ஆசிரியர். இன்றும் என்னைத் தமிழ் சார்ந்து எழுதிவரத் தூண்டும் ஒருவர், ஆத்திரேலியாவில் வாழ்ந்து வருகின்றார். இன்னொரு சுவைமிக்க நிகழ்வினையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். நடிகர் பிரபு போலக் காணப்படுவதால் “பிரபு சேர்” என எம்மால் செல்லமாக அழைக்கப்பட்டு வந்த திரு தனபாலசிங்கம் ஆசிரியர் அவர்கள், ஒருநாள் சமூகக்கல்விப் பாட வீட்டு வேலையினைச் செய்யாதவர்களை எழுந்து நிற்கச் சொல்லிவிட்டு, ஒவ்வொருவராகக் காரணங்களைக் கேட்டுவந்தார். காரணத்துக்கேற்ப பிரம்பால் கையில் அடியும் விழுந்தது. வீட்டுப்பாடம் செய்யாத பலரும் காய்ச்சல், தலையிடி என ஒவ்வொரு சாட்டுச் சொன்னார்கள். நானும் வீட்டுப் பாடம் செய்யாததால் எழுந்து நின்றேன். எனது முறை வந்தது, அவரும் ஏன் செய்யவில்லை எனக் கேட்கவில்லை, நானும் ஒன்றும் பேசாமல் கை நீட்டினேன், எனக்குத்தான் அடி அதிகம். ஏன் அவர் என்னைக் கேள்வி கேட்கவில்லை எனவும் நான் ஏன் சாட்டு ஒன்றும் சொல்லவில்லை எனவும் வகுப்பில் பலருக்கும் வியப்பு. காரணம் எங்கள் இருவருக்கும் மட்டுமே தெரியும் ஏனெனில் அதற்கு முதல் நாள் இரவு ஆசிரியரின் வீட்டுக்கு அருகேயுள்ள உறவினர் வீடு ஒன்றுக்கு வந்த அவரும், நானும், இன்னமும் இருவருமாகச் சேர்ந்து, 304 எனும் சீட்டுக்கட்டு (Cards) ஆட்டம் ஆடிக் கொண்டிருந்திருந்தோம். பின்பு அவர் என்ன கேட்பது, நான் என்ன சாட்டுச் சொல்வது! அன்று விழுந்த அடியினை இன்றைக்கும் நினைத்தால் இப்போதும் வலிக்கும், அப்படிப்பட்ட அடி.

எமது பள்ளியில் கிழமை தோறும் நடக்கும் “அசம்பிளி” எனப்படும் ஒன்றுகூடல் நிகழ்வு எமக்கு மிகவும் பலனுள்ளதாகவிருக்கும். அதில் முத்து முத்தான பல கருத்துகளை அல்லது

கதைகளை பல்வேறு ஆசிரியர்கள் கூறுவர். அதில் குறிப்பாக, கோகிலா மகேந்திரன் ஆசிரியை அவர்களின் சொற்பொழிவு மிக அருமையாக இருக்கும். அதேபோன்று உயர் வகுப்புகளில் நான் கற்றபோது நான் கல்வியில் போதிய அக்கறை காட்டவில்லை எனக் குறை கூறி, என்னை அயராது ஊக்கப்படுத்திய இரு ஆசிரியர்களையும் நான் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். இருவருமே பொருளியல் கற்பித்த ஆசிரியர்கள், முதலாமவர் குணரத்தினம் ஆசிரியர், மற்றையவர் திருமதி செல்வகுமாரி துரைசிங்கம் ஆசிரியை.

கட்டுரையின் விரிவஞ்சி நான் இத்துடன் ஆசிரியர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் கூறுவதனை நிறுத்துகின்றேன். இங்கு பல ஆசிரியர்களின் பெயர்களை நான் இங்கு குறிப்பிடாதபோதும், எம்மைச் செதுக்கியதில் ஒவ்வொருவரதும் பங்களிப்பு அளப்பரியது.

சுருக்கமாகச் சொல்வதானால் எமது வகுப்பில் கல்வி கற்றுப் பல்வேறு துறைகளில் எமது பள்ளியிலிருந்து பல்கலைக்கழகம் செல்வதற்குத் தகுதி பெற்ற மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து, எமக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றி சொல்லும் நிகழ்வு ஒன்றினைச் செய்திருந் தோம், அந்த நிகழ்வில் நான் கூறிய ஒரு கூற்றே இக் கட்டுரையின் பிழிவாக அமையும், அக் கூற்று: “முதலாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை எமக்குக் கற்பித்த ஒவ்வொரு ஆசிரியரும் எமது முன்னேற்றத்துக்கான ஒவ்வொரு படிக்கட்டுகளாக இருந்துள்ளனர்”.

குறிப்பு 1) பல ஆசிரியர்களின் பெயர்களை நான் விரிவஞ்சி இங்கு குறிப்பிடவில்லை, அவர்கள் ஒவ்வொருவரது பங்களிப்பும் சிறப்பானது.

குறிப்பு 2) கட்டுரையின் இறுதியில் குறிப்பிட்ட நிகழ்வின் புகைப்படம் இணைக்கப்பட் டுள்ளது. இந்த நிகழ்வு எமது பள்ளி இடம்பெயர்ந்து இணுவிலில் இயங்கிய போது 1992 இல் நடைபெற்றது. எழுத்தறிவித்த இறைவன்களுக்கும் இறைவிகளுக்கும் எமது நனி நன்றிகள் உரித்தாகுக. உங்கள் அனைவரையும் வணங்கி நிற்கின்றோம்.





03

# மகாஜனாவும் மாணவரும்

**- பிறேமினி பிரதாபன்**



மகாஜனா என்றாலே
மகத்துவம் என்பாரே!

மாண்புமிகு மாணவர்
காலடி வைத்தனரே!

அருமையான அதிபருடன்
அன்பான ஆசிரியர்கள்!

ஆண் பெண் என்றே
சமத்துவம் கண்டனரே!

கல்வியில் சிறந்தனரே
அதற்கேற்பத் திகழ்பவரே!

நன்மைகள் புரிபவரே
நற்பெயரும் கொண்டவரே!

காலங்கள் கடந்தனவே
திசைமாறிச் சென்றனரே!

ஆனாலும் சிந்தையிலே
இவர்கள்தான் நிரந்தரமே!



மறந்திடவே முடியுமா
கற்பனைகள் ஆயிரமே!

சாதிக்க முடியாது
கடல் கடந்து வந்தாரே!

கொண்ட தாகத்தினால்
முயற்சிகள் புரிந்தனரே!

திறமையின் நிமித்தமாய்
நிரூபித்துக் காட்டினரே!

மேல்நாட்டில் மட்டுமன்றி
தாயகத்திலும் சாதித்தனரே!

மறுஜென்மம் வந்திடினும்
மீண்டும் மகாஜனாவே!

04

# நெஞ்சில் ஓர் ஆலயம்

- வானதி காண்டீபன்



செம்மண்வயற் பரப்பில் பச்சைப் பசேலென செழிப்போடு தலைகாட்டும் பயிர்க்கூட்டம், வானுயர வளர்ந்தோங்கிய பனங்கூடல்கள், தாளுண்டநீரைத் தலையாலே தரும் தென்னந்தோப்புகள், எப்போதும் பூத்துச் சொரியும் பூஞ்சோலைகள், மா, பலா, வாழை முக்கனிகள் சொரியும் பழமரங்கள், பழமரங்களை நாடும் பறவையினங்கள் என்று இயற்கை எழிலும் வளமும் மிகுந்த வலிகாமம் வடக்கில் அம்பனைக்கு முன்னால் வீறுடன் நிமிர்ந்து நிற்கிறது எங்கள் மகாஜனக் கல்லூரியாம் அறிவாலயம்.

வெள்ளைச்சீருடை, கழுத்துப்பட்டி, வெள்ளைச் சப்பாத்து, துணியாலான தோளில் தொங்கும் புத்தகப்பையுடன் பாலர் வகுப்பிற்குள் நுழைந்தது முதல் யுத்தசூழலில் இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் இயங்கிய எமது பாடசாலையில் க.பொ.த உயர்தரம் கற்று முடித்ததுவரை எத்தனை எத்தனை நினைவுகள் நெஞ்சில் நிறைந்துள்ளன. ஆசிரியர்கள், நண்பர்கள், சக மாணவர்கள், ஏன் வகுப்பறைகள், மண்டபங்கள், கட்டிடங்கள், மைதானம், கோயில் இவற்றோடும் ஊடாடிய அந்த நாட்களை மீட்பதிலேதான் எத்தனை சுகம்.

மகாஜனக் கல்லூரியில் கற்ற மூன்றாவது தலைமுறையைச் சேர்ந்தவள் நான். எனது அம்மப்பா ஆ.கனகசபை, எனது தாயார் பாக்கியலட்சுமி, தந்தையார் சு.ஏழுர்நாயகம் யாவரும் மகாஜனன்கள். நான்காம் தலைமுறையாக எனது தங்கையின் பிள்ளைகள் மகாஜனாவில் கற்கிறார்கள்.

பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் செல்லும் வரை மகாஜனக் கல்லூரியிலேயே கற்கும்பேறு பெற்றவள் நான். பிஞ்சு விரல்களைப் பற்றியபடி எனது அப்பா என்னை முதல் நாள் பாடசாலைக்கு அழைத்துச் சென்றதும் துரையப்பா மண்டபத்தில் அவரருகில் அமர்ந்தபடி யாவற்றையும் ஒருவித மிரட்சியோடு அவதானித்தபடி இருந்ததும் இன்றும் பசுமையாக மனத்திரையில் ஓடுகின்றது.

பரமேஸ்வரி ரீச்சரின் வகுப்பறையில் தவழத்தொடங்கிய நாம் ரோகிணி ரீச்சர், நளினி ரீச்சர், தளையசிங்கம் ரீச்சர், தம்பு ரீச்சர் முதலானோரிடத்து தளர்நடை பயிலத்தொடங்கினோம். நானும் சிவரூபியும் (வைத்திய கலாநிதி) அயலவர்கள். இருவரும் ஒன்றாகவே நடந்து ஒரே மாதிரிப் புத்தகப்பையுடன் செல்கையில் இரட்டையரோ என பலரும் நோக்கியதையும் மறக்கமுடியாது.

ஆரம்ப வகுப்புகளில் ஆசிரியர்களின் அன்புடன் கூடிய கண்டிப்பும் அரவணைப்பும் நேர் மனப்பாங்குடன் எங்களை வளர்த்தன. கூட்டாக விளையாடுவது, ஒருவருக்கொருவர் உதவி செய்வது, பகிர்ந்துண்பது, கதைப்புத்தகங்களை பகிர்ந்து வாசிப்பது, கலைநிகழ்ச்சிகள், போட்டிகளில் பங்கேற்பது என்றமைந்த வாய்ப்புகள் எமக்கு, எமது கல்லூரியுடனான பிணைப்பு இறுகுவதற்கு அத்திவாரமாக அமைந்தன.

ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான காலைக்கூட்டம் மைதானத்தின் வடகிழக்கு மூலையில் நடைபெறும். ஒவ்வொரு வகுப்பும் அணிவகுத்து நிரைநிரையாக நிற்கவேண்டும். மாணவ தலைவர்களும் ஆசிரியர்களும் கூட்டத்தை வழிநடத்துவார்கள். அறிவுரைகள், விசேட பேச்சுக்கள் எல்லாம் அச்சந்தர்ப்பத்தில் இடம்பெறும். வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனையாக சிவபுராணம் படிப்போம். எமது ஒழுங்கு அங்கு கண்காணிக்கப்படும். வரிசையாக நிற்பது, அமைதி, பொறுமை, பணிவு, மரியாதை, கேட்டுக் கிரகித்தல், அவதானம், மனஒருமைப்பாடு இவற்றை வளர்ப்பதற்கான பயிற்சிக்களமாக அத்தகு கூட்டங்கள் அமைந்திருந்தன என்பதை இன்று ஒரு கல்வித்துறைசார்ந்தவளாக உணர முடிகின்றது.

கலவன் பாடசாலை என்பதால் ஆண்பிள்ளைகளின் சேட்டை இருக்கும். ஆனால் ஆசிரியர்கள் அவர்களது நடத்தைகளையும் சீர்ப்படுத்த சில நுட்பங்களைக் கையாண்டார்கள். எனக்கு இன்னும் நன்றாக நினைவில் உள்ளது. ஆரம்ப வகுப்புகளில் நாம் வகுப்பறையில் குழுக்காக அமரும்போது ஆண், பெண், ஆண், பெண் என்று கலந்து இருக்க விடுவார்கள். குழப்படியும் மிகக்குறைந்துவிடும். பெண்பிள்ளைகள் முன் அவமானப்பட விரும்பாத ஆண்பிள்ளைகள் அமைதிகாப்பர். எதையும் பொருட்படுத்தாது குழப்படியால் பெயர் பெற்றவர்களும் உண்டு. அவர்கள் எல்லோரும் இன்று நல்லநிலையில் இருக்கிறார்கள்.

கற்றல் அனுபவம் மிகவும் மகிழ்ச்சிகரமானதாக அமைந்திருந்தது. பரீட்சைகளுக்கான அழுத்தம் இருக்கவில்லை. பாடங்களும் மிக எளிமையாக / திணிப்பற்றவையாக இருந்தன.

“தோட்டத்தில் மேயுது வெள்ளைப்பசு – அங்கே
    துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப்பசு – அதன்
    அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி”
“பட்டம் விடுவோம் பட்டம் விடுவோம் பாலா ஓடிவா…”
“அம்மா நான் விளையாடப் போறேன்…”

என்று பாடிய பாடல்களும் படங்களோடு கூடிய பாடங்களும் பசுமரத்தாணியாய் நெஞ்சில் பதிந்து போயுள்ளன.

ஆரம்பவகுப்புப் பரிசளிப்புவிழாவும் கலை நிகழ்ச்சிகளும் ஜெயரத்தினம் மண்டபத்தில் நடைபெறும். இயல்பாகவே ஆடலிலும் பாடலிலும் எனக்கிருந்த ஈடுபாட்டினால் கல்லூரி மேடைகளில் ஏறும் வாய்ப்பு அதிகம் கிட்டியது. “தைத்திருநாள் இல்லமெல்லாம் தழைத்திடும்

தைப்பொங்கல்…” என்ற பாடலுக்கும், “அகத்தியர் என்பவர் குறுமுனிவர்” என்ற கதைப் பாடலுக்கும் தோழியருடன் அபிநயித்து ஆடியது மகிழ்ச்சிகரமான தருணங்கள். ஆசிரியர்கள் எம்மைப் பயிற்றுவித்ததும் பெற்றோர் எமக்குத் தேவையான ஆடை அணிகளைப் போட்டு அழகுபார்த்ததும் நினைவில் நிழலாடும் சம்பவங்கள்.

இன்றுபோல் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு அன்றைய நாட்களில் இருக்கவில்லை. பாடசாலையை - அதிபர், ஆசிரியர்களை - முழுமையாக நம்பி மாணவர்களை ஒப்படைத்தவர்கள் அன்றைய பெற்றோர்கள். அவர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக அன்றைய பாடசாலைச் சமூகம் இருந்தது. மாணவர்கள்மேல் ஆசிரியர்கள் கொண்டிருந்த அக்கறையும் அர்ப்பணிப்புடன் கூடிய கற்பித்தலும் எங்களை நெறிப்படுத்தின. எமது ஆளுமை வளர்ச்சிக்கு முற்றிலும் காரணமாயமைந்தது பாடசாலை ஒன்றே எனத் துணிந்து கூறுவேன்.

தரம் 5 படிக்கும்போது எமது வாசிப்புத்திறனை மேலும் அதிகரிக்குமுகமாக தம்பு ரீச்சர் ஓர் உபாயத்தைக் கையாண்டார். ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து ஒவ்வொரு கதைப்புத்தகத்தைக் கொண்டு வருமாறு கூறினார். புத்தகங்களை மாறி மாறி வாசிப்பதற்கு வழிசமைத்தார். இப்பழக்கம் க.பொ.த சாதாரண தரம்வரை தொடர்ந்தது. பரீட்சைக்காலங்களில் கூட கதைப்புத்தகங்களை நான் விழுந்துவிழுந்து படித்ததுண்டு.

தரம் 6 தகரக்கொட்டில் வகுப்பறையோடு தொடங்கியது. மாணவர்களை புள்ளிகள் அடிப்படையில் தரம்பிரித்துக் கற்பிப்பது இங்குதான் ஆரம்பமானது. புதிய மாணவர்கள் பலர் இணைந்துகொண்டனர். யுஇடீஇஊஇனுஇநுஇகு என்று வகுப்புகள் நீண்டன. திருமதி ப. பாலசிங்கம், திருமதி ந.யோகநாதன், திரு.புவனசந்திரன் திரு சி.சி சுப்பிரமணியம், திரு பஞ்சநாதன், திருமதி கோகிலா மகேந்திரன், திருமதி செ.இந்திரசிங்கம், திருமதி அ. சண்முகரட்ணம், திரு .உ.நவரத்தினம், திருமதி வி.டுவைற், திரு து.இந்திரசிங்கம், திரு. க.முத்துலிங்கம், திருமதி த.லிங்கோற்பவநாதன், திருமதி வி.நாகேந்திரா, திரு ச. விநாயகரத்தினம், செல்வி நாகம்மா கதிர்காமர், திருமதி து.அமிர்தநாயகம், திருமதி வாசுகி குகநாதன், திருமதி சகுந்தலா முதலான ஆசிரியர்களின் நுட்பமான கற்பித்தல் முறைமையா லும் தனிமனித ஒழுக்க மேம்பாட்டுச் செயல்முறைகளாலும் நாம் வளர்த்தெடுக்கப்பட்டோம்.

எமது பாடசாலையில் கோயில் கொண்டிருக்கும் சிவகாமிசமேத ஆனந்த நடராஜப் பெருமானின் அழகே தனி. தினமும் காலையில் மைதானத்தைச் சுற்றி டு வடிவில் அணிவகுக்கும் மாணவர்கள் திருவங்கமாலையை செவிமடுத்தபடி சாரை சாரையாக கோயிலுக்கு வருவதும், பூசையில் பங்குபற்றுவதும் திருமுறை ஓதுவதும் பிரசாதம் பெறுவதும் என்று சைவப் பண்பாடு செயல்முறையூடாக வழங்கப்பட்டமை எங்கள் பாடசாலைக்கேயுரிய சிறப்பம்சம். இது மட்டுமன்றி சமய குரவர்களின் குருபூசை, நவராத்தி விரதம், விசேட தினங்கள் யாவும் சிறப்பாக இங்கு நடைபெறுவதற்கான ஒழுங்குகளை மாவிட்டபுரம் வைத்தீஸ்வரக் குருக்களின் மகன்மார் மேற்கொண்டிருந்தனர்.

எமது சமய ஈடுபாட்டை அதிகரிக்குமுகமாக சரியைத் தொண்டிலும் ஈடுபடுத்தப்பட்டோம். கோயிலைக் கழுவுவது, திருவிளக்குகளைத் துலக்குவது, மாலை, தோரணம் கட்டுவது என்று நாம் பெற்ற பயிற்சிகள் ஏராளம். வகுப்பறையில் சமயபாடம் தொடங்குமுன்னும் ஈற்றிலும் திருமுறை ஓதுவது வழமை. சைவசமயபாட ஆசிரியர் திரு.ச.விநாயகரத்தினம் அவர்களை வாழ்வில் மறக்கமுடியாது. சைவ பரிபாலனசபை, விவேகானந்தசபை , கீரிமலை சிவநெறிக்

கழகம், சாந்தையர் மடம் கற்பக விநாயகர் ஆலயம், யாழ்.மாநகரசபை வருடாவருடம் நடத்துகின்ற பல்வேறு போட்டிகளுக்கு மட்டுமன்றி எங்கெல்லாம் போட்டிகள் நடைபெறுமோ அங்கெல்லாம் எம்மை அனுப்பிப் பங்குபெற வைத்த பேராசான்.

தமிழும் சங்கீதமும் எனக்குப் பிரியமான பாடங்கள் அமரர் சங்கீதபூஷணம் செல்வி நாகம்மா கதிர்காமர் எமது இசை ஆசிரியர். கற்பிக்கும்போது மிகமிகக் கண்டிப்பானவராக இருக்கும் இவர் ஏனைய வேளைகளில் தாய்போல் அரவணைப்பார். மேடை ஏறிப்பாடுமுன் எப்போதும் கன்ரீன் சங்கரப்பிள்ளையிடம் சுடச்சுடத் தேநீரும் வடையும் வாங்கித் தருவார். நான் க.பொ.த உயர்தரத்திலும் சங்கீதத்தை ஒரு பாடமாக எடுத்தேன். அப்போது கூட அவர்முன் பாடுவதென்றால் ஒருவித நடுக்கம் இருக்கும். மிக நுட்பமாக எமது பிழைகளைத் திருத்துவார். அவரைப்போன்ற ஆசிரியர்களை இன்று காண்பது அரிது. எத்தனை போட்டிகள், எத்தனை மேடைகள் ஏற எமக்கு சந்தர்ப்பம் கிட்டியது. ஒவ்வொரு வருடமும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் சண்முகார்ச்சனையின் போது திருப்புகழ் பாடுவோம். இனிய இராகங்களில் எத்தனை அழகிய திருப்புகழ்களைப் பயிற்றுவித்தார். இன்றும் ஆலயங்களில் பஞ்சபுராணம், திருப்புகழ் ஓதும்போது அவரை மனத்திருத்திப் பாடுவேன்.

வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி என்றால் பாடசாலை களைகட்டும். துரையப்பா, ஜெயரட்ணம், அருளம்பலம், சின்னையா, சின்னப்பா என்று ஐந்து இல்லங்களிடையே இல்ல அலங்காரப் போட்டி, அணிவகுப்பு என்று கடும்போட்டி நிலவும். மிகுந்த ஆரவாரத்துடன் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் மாணவர்கள் மிக உற்சாகமாக பயிற்சிகளில் ஈடுபடுவர். இனிய மெட்டில் அமைந்த கொடிக்கீதம் பாடுவது உணர்வுபூர்வமானதாக இருக்கும். தலைமைத்துவம், குழு ஒருமைப்பாடு, விட்டுக்கொடுப்பு / வெற்றி தோல்விகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு / ஒழுங்கமைப்புத் திறன் இவையெல்லாம் எம்மை அறியாமல் எம்முள் வளர்த்தெடுக்கப்பட்டன.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்பினால் 1987 இல் நடைபெறவிருந்த க.பொ.த சாதாரணப் பரீட்சை 1988 இல் நடைபெற்றது. சிங்கள இராணுவம் விடுதலைப்புலிகளுக்கிடையிலான சமர் காரணமாக 1990 இல் நடைபெற வேண்டிய க.பொ.த உயர்தரப் பரீட்சையும் 1991 ஆம் ஆண்டில்தான் நடைபெற்றது. எமது குடும்பம் சண்டிலிப்பாய் தொட்டிலடியில் இடம்பெயர்ந் திருந்தபோது சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் உயர்தரப் பரீட்சை எழுதினேன்.

எமது மண்ணின் சொத்து கல்வி என்ற வகையில் எந்தவொரு கடுமையான சூழலிலும் எமது கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படாதவாறு பாடசாலைச் சமூகமும் பெற்றோரும் பார்த்துக் கொண்டார்கள். க.பொ.த உயர்தரத்திற்கு நான் கலைப்பிரிவினைத் தெரிவு செய்தேன். E1, E2 என இரு வகுப்புகள். பிறபாடசாலைகளில் இருந்து உயர்தரம் கற்க வந்த வர்கள் E2 வகுப்பில் விடப்பட்டனர். மிகச்சிறந்த ஆசிரியர்களிடம் கல்வி கற்று நிறையப்பேர் பல்கலைக்கழகம் தெரிவானோம். திருமதி ந.யோகநாதன் திரு செ.இராஜகுலேந்திரா ஆசிரியர்கள் தமிழ்ப்பாடமும் திருமதி சி.செல்வராஜா,திருமதி தே. சீதாதேவி இந்து நாகரிகமும், திருமதி ஆனந்தி சிவஞான சுந்தரம் அரசறிவியலும், திருமதி இ.கெங்காதரன் பொருளியலும், திருமதி வடிவாம்பாள் நடராஜன் சங்கீதமும், திரு சு.சயந்தன், திரு.இ.பிரதாபசர்மா, செல்வி செல்லப்பா அளவையியலும் திருமதி சௌ.பத்மநாதன் மனைப்பொருளியலும், திருமதி வாசுகி குகநாதன், திருமதி சகுந்தலா நடனமும் கற்பித்தார்கள். மேற்போந்த கலைத்துறைசார் ஆசிரியர்களின் புலமைத்துவக் கற்பித்தலும்,

வழிகாட்டலும் மாணவர் பலர் சிறந்த பெறுபேறு பெறுவதற்கு வழிசமைத்தது. பரீட்சைகளுக்கு எம்மைத் தயார்ப்படுத்துவதற்கும் அப்பால் எமது எழுத்தாற்றல் விருத்தியின் பொருட்டு ஒப்படைகளை வழங்கி அவற்றின் குறைநிறைகளைச் சுட்டிக்காட்டித் திருத்தித் தருவார்கள். பல்கலைக்கழகம் சென்ற எமது சிரேஷ்ட மாணவர்கள் எம்மைச் சந்திக்கும் போதெல்லாம் பல்கலைக்கழகம் புகும் ஆர்வத்தைத் தூண்டினார்கள். E1, E2 இரு வகுப்புகளிலும் திறமையான மாணவர்கள் இருந்ததால் போட்டிபோட்டுப் படித்தோம். பல்கலைக்கழகம் சென்றோம்.

பெண்வழிகாட்டி, முதலுதவிப்படை அங்கத்தவர்களாக இருந்து நாம் பெற்ற அனுபவங்கள் ஏராளம். அமிர்தநாயகம் ரீச்சரின் வளவில் மூன்று நாட்கள் பாசறை அனுபவம் கிட்டியமை வாழ்வில் மறக்க முடியாத இன்ப அனுபவங்களை ஈட்டித்தந்தது. மாற்றுடையின்றி இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு உதவுமுகமாக நாம் வீடுவீடாகச் சென்று பொருள்கள் சேகரித்து அவற்றைப் பகிர்ந்தளிக்கும் செயற்பாட்டை முதலுதவிப்படை அக்காமாரின் தலைமையின் கீழ் முன்னெடுத்தமை இன்றும் மறக்கமுடியாத ஒன்று.

இந்து கலாசார அமைச்சு அகில இலங்கை ரீதியாக நடத்திய கட்டுரைப் போட்டியின் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு கொழும்பு சென்றதால் உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலில் என்னால் கலந்துகொள்ளமுடியவில்லை. இன்றும் அவ்வினிய வாய்ப்பை இழந்தமை குறித்துக் கவலையடைவேன்.

வருடாந்த உற்சவம் போன்று நிறுவியவர் நினைவு நாள் மிகக் கோலாகலமாக நடைபெறும். பிரதம விருந்தினராக, நினைவுப் பேருரை நிகழ்த்துபவராக உயரிய பதவிகளில் இருப்போர் வரவழைக்கப்படுவர். இவர்களது உரைகள் மாணவர்களுக்கு ஊக்கம் தருவதாக இருப்பதோடு, இவர்கள்போல் நாமும் வாழ்வில் உயரவேண்டும், சமூகப்பொறுப்புள்ளவராக வாழவேண்டும் என்ற எண்ணத்தை எம்முள் விதைத்துவிடும். "ஆசிரியத்துவம் - வித்தொன்றை விருட்சமாக்க" எனும் தலைப்பில் 24.06.2010 பாவலர் தெ. அ. துரையப்பா பிள்ளை நினைவுப்பேருரை ஆற்றக்கிடைத்ததை வாழ்வில் பெரும்பேறாகக் கருதுகிறேன்.

ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மிகக் கண்டிப்பானவர்கள். அவர்கள் தம் பார்வையினாலேயே எம்மை வழிக்குக் கொண்டுவந்துவிடுவார்கள். மாணவர் தலைவர்களை அவ்வாசிரியர்கள் நெறிப்படுத்தினர். சிரேஷ்ட மாணவ தலைவியராக நானும், கோமதியும் தெரிவு செய்யப்பட்டோம். தன்னம்பிக்கையையும் தலைமைத்துவப் பண்பையும் விருத்தி செய்வதற்கு அப்பதவி வாய்ப்பளித்ததை மறுக்க முடியாது.

எமது பாடசாலையில் மிகத்தரமான நூலகம் உள்ளது. நாம் உயர்தரம் கற்கும்போது ஓய்வு நேரங்களில் அங்கு செல்வோம். இப்போது நினைத்துப் பார்க்கும்போது நான் நூலகத்தைப் பயன்படுத்தியது மிகக்குறைவு என்பது புரிகிறது.

திரு.பொ.கனகசபாபதி, திரு. பி. இராமசாமி, திரு.இரத்தினேஸ்வரஐயர், திரு பொன். சோமசுந்தரம், திரு.த. சண்முகசுந்தரம் திரு.வே. கந்தையா, திரு க.நாகராசா அதிபர்களாக இருந்த காலப்பகுதியில் நாம் கல்வி பயின்றது உண்மையில் வரப்பிரசாதமே. சிறந்த தலைமைத்துவத்துடன் பாடசாலையை வழிநடத்தியவர்கள் அவர்கள்.

வீட்டிலிருந்து பாடசாலை நடைதூரத்தில் இருந்தபோதும் துவிச்சக்கர வண்டியில்தான் செல்வேன். பாடசாலையில் துவிச்சக்கரவண்டிகள் மிகநேர்த்தியாக நிறுத்தி வைக்கப்படும்.

பாடசாலை முதல்மணி அடித்தபின் தாமதித்து வருபவர்கள் நிறுத்தி வைக்கப்படுவதும் தொடர்ந்து தாமதமாக வருபவர்களுக்கு சிறு தண்டனைகள் வழங்கப்படுவதும் உண்டு. ஓரிரு நாட்கள் மட்டுமே நான் தாமதித்து வந்ததாக ஞாபகம்.

எனது கிராமம் பன்னாலை. மிகச் சிறிய, ஆனால் கல்வியால் மேம்பட்ட கிராமம். இக்கிராமத்து மாணவர்களாக கிட்டத்தட்ட இருபதுபேர் எம்முடன் ஒன்றாகப்படித்தவர்கள் என்றால் ஆச்சரியம்தான். கோமதி, தயாவதி, காண்டீபன், வானதி, சிவரூபி, சுபாசினி, பவானி, தேவகி, ஜெயபவன், கலைச்செல்வி, தவராணி, தயாளினி, இராஜேஸ்வரி, இராச மலர், கருணாவதி, துஸ்யந்தன், ஜெயகாந்தன், முரளி, புவனேஸ்வரி, சோதிரத்தினசர்மா ஆகியோர் பன்னாலை மகாஜனன்கள்.

பாடசாலை இரண்டுவேளை நடைபெற்ற காலங்களில் வீடுசென்று உணவருந்தி வருவோம். பாடசாலை முடிந்ததும் மாலைநேரங்களில் இசை, நாடகம், நடனம், விளையாட்டு, சாரணர் என்று ஏதாவது பயிற்சி இடம்பெறும். மாணவர்களின் ஒட்டுமொத்த ஆளுமைவிருத்தியில் எங்கள் பாடசாலை கரிசனைகொண்டிருந்தது. 'உனை நீ அறி' என்ற மகுடவாசகத்திற்கிணங்க ஒவ்வொருவருக்குள்ளும் இருந்த தனியாற்றல்களை வெளிக் கொணர்வதற்கான களத்தை எம் மகாஜனாவே தந்தது.

பாடசாலை தந்த உறவுகளுக்கு நிகரேது. அளவெட்டி, பன்னாலை, கொல்லங்கலட்டி, விழிசிட்டி, கட்டுவன், குரும்பசிட்டி, தெல்லிப்பழை, மல்லாகம், சுன்னாகம், கருகம்பனை. இளவாலை முதலான இடங்களிலிருந்து வந்து சேர்ந்த நட்புகள் ஓர் வரம். இன்றும் எமது தோழர், தோழியரைக் காணும்போது ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கனடா, இங்கிலாந்து, ஜேர்மன், பிரான்ஸ், டென்மார்க், அவுஸ்திரேலியா என்று புலம்பெயர்ந்திருந்த போதிலும் அனைவரும் நட்பின் மகிமையை உணர்ந்து இன்றுவரை தொடர்புபேணிவரு கிறோம் என்பது பெருமைக்குரிய விடயம்.

**நிறைவாக,**

புண்ணியங்கள் யாவிலும் மேலான புண்ணியம் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்று பாடினான் பாரதி. இங்கு ஏழ்மை என்பது கல்வி வறுமை. இக்கல்வி வறுமை நீங்கி சமூகம் ஈடேறும் பொருட்டு ஊர்தோறும் பாடசாலைகள் நிறுவப்பட்டன. பிரித்தானிய ஏகாதிபத்தியச் சூழலின் எதிர்ப்புக்குரலாக, மிகப்பெரும் சமூகசீர்திருத்தவாதியாக விளங்கிய கல்விக்கலை ஞன் பாவலர் துரையப்பா பிள்ளையின் பெரும் பிரயத்தனத்தில் உருவானதுதான் சைவத் தமிழ் பாடசாலையான எமது மகாஜனக் கல்லூரி. பல்வேறு சவால்கள் இன்னல்கள் மத்தியில் ஆளுமைமிக்க அதிபர்கள், அரப்பணிப்புமிக்க ஆசிரியப் பெருந்தகைகளின் வழிநடத்தலில் எமது பாடசாலை நூற்றாண்டு கடந்து பேரெழுச்சி கண்டிருக்கிறது.

ஆலயமும் பாடசாலையும் சமூக நிறுவனங்கள். ஆலயம் மனிதனை ஆன்மிகநிலையில் நெறிப்படுத்துவது. பாடசாலையோ பிள்ளையின் கல்வி மேம்பாட்டையும் நடத்தை விருத்தியையும் இலக்காக கொண்டு தொழிற்படுவது. மாதாவாக, பிதாவாக, குருவாக, தெய்வமாக நின்று சமூகப் பயனாளிகளை ஆக்கியளிக்கும் பொறுப்பைச் சுமந்தவர்களால் சிறப்புற்றமைந்திருக்கும் அறிவாலயமாக என்றென்றும் என் நெஞ்சில் நிறைந்து நிலைத்திருப்பது எங்கள் பாடசாலை மகாஜனக் கல்லூரியே!

**வெல்லுக மகாஜன மாதா!**

05

# எனக்குப் பிடித்த வகுப்பு

- இராசமலர் குகபாலன்




வித்தியாசமான கட்டிடநிர்மாணம் கதவு, யன்னல்கள் அற்ற தாரளமான காற்றோட்டம் , வெளிச்சமும் கொண்ட வகுப்பறை. D1 commerce class 13 அருகில் பல ஆண்டுகாலமான பலாமரம், பக்கத்தில் பள்ளியில் ஒலி அடிக்கும் மணி முன்புறத்தில் வார மாணவர்கள் ஒன்றுகூடல் (assemble) நடைபெறும். ஒன்றுகூடல் என்றதும் நினைவுக்கு வருவது திருமதி கோகிலா மகேந்திரன், ஆசிரியரின் கருத்து மிகவும் பயனுள்ளதும் சிந்திக்கவைக்கும் கருத்துகள். இன்றும் அவை என்னை வழிதடத்துகின்றது. அத்துடன் ஆசிரியர் திரு. இராஜகுலேந்திரன், திருமதி. செல்வராஜா ஆசிரியர்களின் கருத்துகளையும் கேட்ட அந்த முற்றலில் எங்கள் வகுப்பறை.

ஆண்டு 1989 இல் நாம் புகுந்த வகுப்பறை பல நினைவுகளை தந்த வகுப்பறை. கம்பீரமான தோற்றமும் கனிவான இதயம் உடைய வகுப்பாசிரியர் திரு. வேல்நாயகம். அவரே எமது கணக்கியல் ஆசிரியர். பொருளியல் செல்வி . செல்வகுமாரி, அளவையியல் திருமதி. மகேந்திரன் வர்த்தகம் திரு. ஜெயமனோகர் ஆசிரியர்களுடன் கல்வி, ஒழுக்கம், போட்டிகள், வெற்றிகள், மகிழ்சி, நட்பு பற்பல சாதனைகள் உணர்வுகள் கொண்டவகுப்பறை.

பெண்குழு வகுப்பு தலைவி பாமினி, கீதா, ஆண்குழு வகுப்பு தலைவன் ஜெயகாந்தன் இலங்கநாதன் கடமையாற்றிய வகுப்பறை.

பல தோழிகளையும் தோழர்களையும் சந்தித்த அந்தவகுப்பறையில் ,எங்கள் வகுப்பு தோழிகள் அமர்ந்த இருக்கை மேசை வரிசை

(1) பூங்குயில், அகிலா, பிறேமினி, வனிதா, அனுஜா மேசை வரிசை

(2) குமுதினி, உமாராணி , சிவவதனி, யாழினி, வாசுகி மேசைவரிசை

(3) தர்சினி, சியாமளா, புவனேஸ்வரி, இராசமலர், ஜெயசக்தி, செந்தில்வாணி மேசைவரிசை

(4) கீதா, மீரா, கிருபவதனி, பாமினி.

ஜெயகாந்தன் குகநாதன், சரச்சந்தர், சிறிதரன், இலங்கநாதன் , ஜெயபவன், முரளிதரன், புனிதன், செவ்வேள், கஜராகவன், உதயராசா. வீரத்தோழர், தோழிகளைத் தந்தது அந்த வகுப்பறை, எம்மை பல சாதனைகள் , மாற்றங்களையும் உருவாக்கிய அந்த வகுப்பறை இன்று வேறு வடிவம் எடுத்துள்ளது.

எங்கள் பள்ளிக் காலத்தை 1990 முடித்துவைத்தது அந்த வகுப்பறை. எத்தனை எத்தனை முகங்கள் நினைவுகள் இன்றும் அதே இடத்தில் நான் மீண்டும் அந்த வகுப்பறையில் தேடுகிறேன்.

06

# ஞாபகம்

## வருதே! வருதே!! வருதே!!!

- கோமதி மாயக்கிருஷ்ணன்



1978 ம் ஆண்டு தை மாதம், மகாஜன மாதாவின் மடியில் தவழத் தொடங்கிய முதல் நாள். புதிய இடம். புதிய சூழல் 1B வகுப்பு பாடசாலையின் தென்கிழக்கு மூலையில் 1வது வகுப்பறை அருகில் நீர்க் குழாய்கள் இருந்தன. நமசிவாயம் ஆசிரியரிடம் பாலர் பாடசாலையில் கற்ற குகநாதன், து.முரளி, ஜெயபவன் ஆகிய ஒரு சிலரைத் தவிர ஏனையவர்கள் புதியவர்கள். வகுப்பாசிரியர் செல்வி. முத்தையா. மிகவும் அன்பானவர். இன்றும் நினைவில் நிற்கும் என் முதல் ஆசிரியை. (பின்னாளில் (2014) அவர் நோய் வாய்பாட்டு படுக்கையில் இருந்த நாட்களில் பலர் வாயிலாக என்னைத் தேடியுள்ளார். நான் வவுனியாவில் இருந்து இங்கே வந்த பின்னரே கேள்வியுற்றுப் பார்க்கச் சென்றபோது அவர் அறிவற்ற நிலையில் இருந்தமையால் அவருடன் கதைக்க முடியவில்லை என்ற மனக்குறை இன்றுவரை உள்ளது.

ஆரம்பப் பிரிவின் அதிபராக அம்பலப்பிள்ளை அவர்கள் இருந்தார். ஓரிரு கிழமைகளில் கீதா, ரேவதி, மேகலா, நந்தினி, காண்டீபன் (சுதுமலை), பத்மராஜ், குணசீலன், பொ.முரளி ஆகியோரும் எனது நண்பர்களாயினர். 1-3 ம் வகுப்பு வரை முத்தையா ஆசிரியையே வகுப்பாசிரியர். 2ம் வகுப்பு படிக்கும் காலங்களில் தவணைப் பரீட்சை நேரம் எனக்குத் தாங்க முடியாத வயிற்று வலி ஏற்படும். வைத்தியசாலைக்கு சென்று பரீட்சை முடியும் நேரம் தான்

அம்மாவுடன் பாடசாலைக்கு வருவேன். நான் பரீட்சை எழுதி முடிக்கும் வரை முத்தையா வநயஉாநச என்னுடன் நிற்பார். பாடசாலையின் கிழக்காக சிறு மைதானத்துடன் இருந்த வகுப்பறை. அந்த நாட்களில் சுகயீனம் காரணமாக வகுப்பாசிரியர் அடிக்கடி விடுமுறை எடுப்பார். எமது வகுப்பு ஒரே சத்தமாக இருக்கும். அதிலும் சுதுமலை காண்டீபன் சொல்லத் தேவையில்லை. ஒருநாள் விளையாடும் போது சகநண்பியின் சீருடையை கிழித்து தண்டனை பெற்றார்.

4A வகுப்பாசிரியர் தளையசிங்கம் ஆசிரியை, உருவத்தில் மிகச்சிறியவர். மெல்லிய குரல், வட்டமாக குழுக்களாக இருப்போம். அழகான நளினி ஆசிரியர் ஆங்கிலம் படிப்பித்தார். 4 A, B வகுப்புக்கள் சேர்ந்து சுற்றுலா சென்றோம். காங்கேசன்துறை சீமெந்து ஆலை, பலாலி விமானநிலையம் பார்வையிட்ட பின் புகையிரதத்தில் ஏறினோம். புகைவண்டி புறப்பட ஆரம்பித்த போது பயத்தில் அழுதது இன்றும் ஞாபகம் உள்ளது. 5A என்றும் மறக்க முடியாத தம்பு ஆசிரியர். மூலை வகுப்பறை. பல புதிய நட்புக்கள் (சிவா, கலை, வாணி, கலா, காண்டீபன், கணேஸ்குமார், etc) உருவாகின்றார்கள். வெற்றிலை குதப்பியபடியே தான் தம்பு ஆசிரியர் படிப்பிப்பா. மிகவும் கண்டிப்பானவர். ஆசிரியரிடம் அடிவாங்கதவர்கள் அரிது. இந்த நாட்கள் போல் அந்த நாட்களில் புலைமைபரிசில் பரீட்சைக்கு அதிக முக்கியத்துவம் இல்லை. அதிலும் 1982 ஆம் வருடம் அரச அலுவலரின் பிள்ளைகள் பரீட்சைக்குத் தோற்ற முடியாது என அரச சுற்று நிருபம் வெளியிடப்பட்டதால் தோற்றியவர்கள் குறைவு. எமக்கு பெறுபேறு வந்ததாக ஞாபகம் இல்லை.

5ஆம் வகுப்பு வரை இடைவேளை நேரம் Biscuit தருவார்கள். அதற்காகவே காத்திருப்போம். பசுவும் புலியும், 4 பெட்டி, 8 பெட்டி, கப்பல்கோடு, கிளித்தட்டு இன்னும் பல வகை விளையாட்டுக்கள் விளையாடி மகிழ்ந்தோம். தரம் 6 ஆரம்ப நாட்களில் நண்பன் முகுந்தன் சுகயீனம் காரணமாக எம்மை விட்டு பிரிந்தார்.

1983 ஆம் வருடம் தரம் 6யு தகரக் கொட்டிலில் 1வது வகுப்பறை. தமிழ் ஆசிரியை திருமதி பாலசிங்கம் வகுப்பாசிரியர். மிகவும் அன்பாகவும், மங்களகரமாகவும் இருப்பா. தரம் 6 இல் A, B, C, D, E என ஐந்து பிரிவுகள். வெவ்வேறு அயல் பாடசாலைகளில் இருந்து பல புதிய நண்பர்கள் வந்து சேர்ந்தார்கள். வகுப்பில் உயரத்தின்படி இருப்போம். தரம் 6 இல் இருந்து ஆண்டு 11 வரை (தரம்10) எமது வகுப்பினர்தான் சிவகாமி சமேத ஆனந்த நடராசரின் பணிகள் செய்வோம். சிவாவிடம் தான் கோயில் அறைத் திறப்பு இருக்கும். தம்பி ஐயாஇ குமார் ஐயா பூசைக்கு வருவார்கள். நவராத்திரி காலங்களில் மீராவுடன் சேர்ந்து அழகழகான கோலங்கள் போடுவோம். தரம் 7A, கோவிலுக்கு வலப்புறம் 2வது வகுப்பறை. கணித ஆசிரியர் திரு.புவனச்சந்திரன் வகுப்பாசிரியர். இந்த வகுப்பில் தான் ரமணிச்சந்திரனின் நாவல்கள் வாசிக்க ஆரம்பித்தேன். விநியோகித்தவர் ரேவதி.

பாடவேளையில் கூட புத்தகத்தினுள் வைத்து வாசிப்போம். இந்த வகுப்புக்களில் பாடசாலை மாலை வரை நடைபெறும். மதிய உணவு வேளை வீட்டுக்கு வந்து போனாலும் அதிக நேரம் குமுதாவுடன் மனைப்பொருளியல் அறையில்தான் இருப்பேன். நானும் குமுதாவும் பல விடயங்கள் பரிமாறி மகிழ்வோம். இந்த வருடத்தில் தெல்லிப்பழையில் அமுதநாயகம் ஆசிரியர் வீட்டில் 3 நாட்கள் சாரணிய பாசறையில் பங்குபற்றி பல திறமைகள் வெளிப்படுத்தியமை நன்றாக நினைவிருக்கின்றது. அமுதநாயகம் ஆசிரியை தான்

சாரணியத்திற்கு பொறுப்பானவர். 84 ஆம் ஆண்டு வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட போதும், வெள்ளம் கலக்கி மகிழ்ந்தது மறக்க முடியாத அனுபவம்.

தரம் 8A, கோவிலுக்கு பக்கத்து வகுப்பறை. தரம் 8 இல் இருந்து O/L வரை கணித ஆசிரியர் திரு. சுப்பிரமணியம் ஆசிரியர் தான் வகுப்பாசிரியர். மிகவும் திறமையானவர். ஒவ்வொரு மாணவரினதும் தரம் அறிந்து கற்பிப்பார். போட்டி போட்டு அப்பியாசக் கொப்பி காட்டுவோம். தரம் 9A கோவிலின் இடப்புறம் இறுதிக்கு முதல் வகுப்பறை ஆசிரியர் வரவில்லை எனில் எமது வகுப்பு போல் வேறு எந்த வகுப்பும் சத்தம் இராது. அடிக்கடி பக்கத்து வகுப்பாசிரியர்களால் தண்டிக்கப்படுவோம். நண்பன் பிரபா (இன்று எம்முடன் இல்லை) உருவத்தில் சிறியவர். கடைசி வரிசையில் இருக்கும் கேதீஸ், ஜெயராஜ், கணேஸ்குமார் ஆகியோருக்கு இடையில் போய் இருந்தால் இருப்பதும் தெரியாது. Rubber Band அடிப்பார். பட்டால் நோகும். இந்த வருடம் தான் தரம் 9 என்பது ஆண்டு 10 என மாற்றப்பட்டது. இந்த வகுப்புவரை நண்பிகள் குமுதா, சுகந்தி, பாமினி, சிவா, கலை, வாணி ஆகியோரின் பூப்புனித நீராட்டு விழாவில் கலந்து மகிழ்ந்தும் நன்றாக ஞாபகம் இருக்கின்றது.

தரம் 10 A (ஆண்டு 11A) O/L, திறந்தவெளி அரங்கிற்கு இடப்புறம் 3வது வகுப்பறை. தமிழ் (தாலாட்டு) யோகநாதன் ஆசிரியை விஞ்ஞானம் கோகிலா ஆசிரியை. ஆங்கிலம் இந்திரசிங்கம் ஆசிரியர். (எமது வீட்டிலும் சிலகாலம் இவரின் பிரத்தியேக வகுப்பு நடைபெற்றது.) சமூகவியல் அருள் ஆசிரியை. சைவநெறி விநாயகரத்தினம் ஆசிரியர். இந்த இடத்தில் இவரைப்பற்றி எழுதியே ஆகவேண்டும். ஏனெனில் சைவசமயம் தொடர்பான சகல அறிவையும் இவரிடம் இருந்தே பெற்றோம். தரம் 6 இல் இருந்து மூஃடு வரை இவர் தான் சைவசமயம் கற்பித்தவர். அது மட்டுமா? கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய திருவிழா காலத்தில் ஆண்டு தோறும் சிவநெறிக்கழகம் மூலம் பல்வேறு வகையான போட்டிகள் (பேச்சு, பண்ணிசை, பாலுதல், எழுத்தாணியால் சுவட்டில் எழுதல், ஆலய தரிசனம் etc) நடத்துவார். நானும் பல பரிசில்கள் பெற்றுள்ளேன். அதிலும் சிறப்பு 1987 ஆம் வருடம் ஆவணிமாதம் நல்லூர் ஆலய உற்சவத்தை முன்னிட்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட சைவ சமய அறிவுப் பரீட்சையில் மத்திய பிரிவில் நான் தங்கப்பதக்கம் பெற மூல காரணமும் இவர் தான். நன்றாக ஞாபகம் இருக்கின்றது. அன்று ஒருநாள் மாலை மங்கிய நேரம் Sir வந்து அழைத்தார். இன்று "நரியிலா முழித்தாய்" என கேட்டார். ஏன் Sir என கேட்டபோது தான் தங்கப்பதக்கம் கிடைத்திருப்பதாகக் கூறினார்.

அவ்வாறே நான் இன்றும் குருவாக மதிக்கும் ஆசிரியை திருமதி கோகிலா மகேந்திரன். நாடகத்துறை மூலம் எனது ஆளுமை, தலைமைத்துவம் என்பவற்றை விருத்தி செய்தவர். இன்று ஆளுமை மிக்கவளாக ஒரு பதவியில் இருப்பதற்கு வித்திட்டவர்.

நிற்க, இந்த வகுப்பில் எந்த விடயமானாலும் எமக்கும் Boys க்கும் போட்டியும் சண்டை யும் தான். நாம் 3 நாட்கள் வகுப்பறை கூட்டுவோம். 2 நாட்கள் Boysக்கு. அவர்கள் கூட்ட மாட்டார்கள். அடிக்கடி ஆசிரியரிடம் இதற்காக தண்டனை பெறுவார்கள். அந்த வயதிற்குரிய அத்தனை குறும்புத்தனமும் எம்மிடையேயும் இருந்தன. மாணவர்களுக்கு ஒருவருக்கொரு வர் பட்டம் சூட்டுவது ஆசிரியர்களுக்குப் பட்டம் சூட்டுவது என அத்தனையும் செய்தோம்.

வருடாவருடம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் 17வது திருவிழா எமது பாடசாலை திருவிழா. அதற்கு மா விளக்கு போடுவோம். சாமை இடித்து மாவாக்குவது சிவா வீட்டில்

அல்லது எமது வீட்டில். அல்லது வளர் வீட்டில். அதே போல் வாணிவிழாவிற்கும் பிரசாதம் செய்வது நாம். எங்கள் வீட்டில் பிரசாதம் செய்யும்போது அவர்கள் முன் வீட்டில், காண்டீபன் வீட்டில் செய்தால் வேலிச்சண்டை கூட வந்துவிடும். இவை இன்னும் மறக்காத பசுமையான நினைவுகள் கோயில் திருவிழா காலங்களில் முதலுதவி பணிக்கு செல்வோம்.

O/L ல் சில காலம் இராஜபுலேந்திரன் ஆசிரியரிடம் தமிழ் படிக்கப் போனோம். அதிகாலை 4 மணிக்கு வகுப்பு. ஜெயகாந்தன் (இன்று எம்முடன் இல்லை.) காத்திருந்து கலைக்குப் பின் வருவார். கலை, சிவா, வாணி, நான் சேர்ந்து போக எமக்கு பின் ஜெயகாந்தன், காண்டீபன், கணேஸ்குமார் வருவார்கள். 90ஏ ஆகிய நாம் விஷேஷமானவர்கள். O/L சரி, A/L சரி எமக்கு விஷேஷமாகத்தான் நடைபெற்றது. 87 December இல் நடைபெற வேண்டிய O/L பரீட்சை 88 யிசடை இல் தான் நடைபெற்றது. அதற்குள் ஒரு துயர சம்பவம். 88 March 31 இல் எனது தந்தை அகால மரணம் அடைந்தார். அசாதாரண சூழ்நிலை காரணமாக ஈமைக் கிரிகைகள் கொழும்பில் நடைபெற்றது. குடும்பத்தவர்களினதும் நட்புகளினதும் தூண்டு தலால் தான் பரீட்சைக்கு தோற்றினேன்.

உயர்தரம் கற்பதற்காக சில நண்பர்கள் பாடசாலை மாறிச் சென்றுவிட்டனர். நான் உயிரியல் பிரிவு. எனது வகுப்பில் கலா, மீரா, பாமினி (K.K.S), ஆஷா, அமு, தயா, கபிலை, சியாமளா, முத்து மேகலா, வளர், சர்வா (இன்று எம்முடன் இல்லை), டொரின், உமா, அச்சுதன், நெவின்ஸ், ரகுலதரன் (இன்று எம்முடன் இல்லை), மன்மதன், தர்மராஜ் படித்தனர். இரசாயனவியல், பௌதீகவியல் கணித பிரிவிற்கும், எமக்கும் சேர்ந்து நடைபெறும். O/L போலல்லாது A/L இல் Boys உடன் நல்ல நட்பு வளர்ந்தது. எதற்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம்.

ஆண்டு 12 அலுவலகத்திற்கு இடப்புறம் புத்தகசாலைக்கு முன்புறம் இருந்த வகுப்றை. தாவரவியல் நவரட்ணம் Master உயிரியல் திருமதி. சுப்பிரமணியம் teacher. இரசாயனவியல் சுந்தரலிங்கம் Master மற்றும் எழில் Tracher. பௌதீகவியல் யோகலிங்கம் Master. பாடசாலையில் எந்த விழா நடைபெற்றாலும் நான் அங்கு நிற்பேன். வழிகாட்டியாக, முதலுதவி குழுவில், A/L Union தலைவியாக மாணவத் தலைவியாக இருந்தமையும், கலை நிகழ்வுகளில் பங்குபற்றியமையினாலும் சிலவேளை பாட நேரத்தில் நிற்பதில்லை. Botany நாகரட்ணம் Sir கண்டிப்பார். ஓரிரு நாட்கள் இடைவேளை நேரத்தில் எங்கள் வீடு தேடி போய் அம்மாவிடம் முறைப்பாடு செய்ததும் உண்டு. அவ்வருடம் Sir இன் தாயாரின் மரணச்சடங்கில் பங்குபற்ற ஆசிரியர்களுடன் Bus இல் உடுப்பிட்டி சென்று வந்தோம்.

எமது பாடசாலையில் விளையாட்டுப் போட்டிக்காக 5 இல்லங்கள் உண்டு. ஆரம்பப் பிரிவில் சின்னையா இல்லத்திலும் 8 ஆம் தரம் வரை அருளம்பலம் இல்லத்திலும் அதன்பின் சின்னப்பா இல்லத்திலும் இருந்தேன். 1989 ஆம் ஆண்டு விளையாட்டுத்துறைத் தலைவியாகவும், 1990 ஆம் ஆண்டு இல்லத்தலைவியாகவும் இருந்தேன். இரு வருடங்களும் அணிநடை எமது இல்லம் தான் முதலிடம். இரவுபகல் பாராது இல்லத்திற்காக உழைத்தமை. இன்றும் நினைவில் இருக்கின்றது.

ஆண்டு 13, உயிரியல் ஆய்வுகூடம் தான் எமது வகுப்பறை. தாவரவியல் அனந்தசயனன் ஆசிரியை எமக்கு படிப்பித்துக் கொண்டிருக்கும்போது இரண்டாவது குழந்தை பிறப்பிற்காக வைத்தியசாலை சென்றார். உயிரியல் சிவசுப்பிரமணியம் ஆசிரியை. எனக்குப்பிடித்த

ஆசிரியர்கள் பௌதீவியல் சத்தியமூர்த்தி sir மற்றும் காந்தன் மாஸ்ரர். இரசாயனவியல் ஞானேஸ்வரி teacher. மெல்லிய குரலில் தான் படிப்பிப்பார். ஒருநாள் எமது வகுப்பறைக்கு பக்கத்தில் அந்த வருடம் ஆண்டு 5 மாணவர்கள் சத்தம் போட்டு விளையாடிக்கொண் டிருந்தனர். Teacher பலமுறை சொல்லியும் அவர்கள் கேட்கவில்லை. Teacher கற்பிப்பது கேட்கவில்லை. மாணவர்களின் class monitor ஐ கூப்பிட்டு (மாணவ தலைவியாக இருந்த தால் ஒவ்வொரு class monitor ஐ யும் தெரியும்) வரிசையாக வகுப்பிற்கு செல்லும்படி கூறினேன். அவர்கள் சென்றுவிட்டார்கள். இவ்வாறு சில நிகழ்வுகள் இன்றும் ஞாபகம் இருக்கின்றது.

உயர்தரம் படிக்கும்போது நான் அதிகம் செலவிட்டது கலாவுடன் தான். தனியார் வகுப்புக்களுக்கு ஒன்றாக செல்வோம். சேர்ந்து படிப்போம். இடையில் சிலகாலம் நாட்டு சூழ்நிலை காரணமாக மாலை பாடசாலையாக பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் எமது பாடசாலை நடைபெற்றது. பாடசாலை பரிசளிப்பு விழாவில் வருடா வருடம் ஏதாவது பரிசு வாங்குவேன். உயர்தரம் படிக்கும் போது சூழ்நிலை காரணமாக இரு வருடங்களுக்குரிய பரிசளிப்பு விழா சேர்த்தே நடைபெற்றது. சிறந்த கவிதை ஆக்கம், சிறந்த நாடக பிரதி, சிறந்த வழிகாட்டி, சிறந்த முதலுதவியாளர், சிறந்த மாணவ தலைவி போன்ற பல பரிசில்கள் எனக்குக் கிடைத்தன. பரிசில்கள் வழங்கிய பிரதம விருந்தினரின் பாரியார் இறங்கி ஏறாது ஒரேயடியாக நின்று பரிசில்களை வாங்கிச் செல்லும்படி கூறியது இன்றும் நினைவில் இருக்கின்றது.

நாம் உயர்தரம் கற்கும்போது திரு. நாகராஜ ஐசை தான் அதிபராக இருந்தார். இலகுவில் அணுகி எந்த விடயமும் செய்ய முடியும். எந்த நிகழ்வென்றாலும் கூப்பிட்டு ஒழுங்குபடுத்தச் சொல்வார். இறுதி வருட உயர்தர ஒன்றுகூடலையும் மிகவும் சிறப்பாக நடாத்தினோம். யாழ் இந்துக் கல்லூரி ஒன்றுகூடலுக்கு நானும், பாமினியும் (KKS), சிவன்ராஜ் உம் சென்றோம். இன்றும் நினைவிருக்கும் இனிமையான நாட்கள்.

எமது உயர்தரப் பரீட்சையும் உரிய காலத்தில் அல்லாது 1991 ஆம் ஆண்டே விசேடமாக நடைபெற்றது. இராமநாதன் கல்லூரி தான் பரீட்சை நிலையம். பரீட்சை எழுத்திக்கொண் டிருக்கும் போது சிலவேளை விமானக் குண்டுவீச்சு நடைபெறும். பங்கருக்கு ஓடுவோம். மீண்டும் வந்து பரீட்சை எழுதுவோம். மறக்க முடியாத பல அனுபவங்கள். எமது பாடசாலை யில் எமது உயிரியல் பிரிவில் நான் மட்டுமே பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானேன்.

எமது பாடசாலை மிகவும் தனித்துவமானது நடுவில் மைதானம் சுற்றிவர வகுப்பறைகள். அதிபர் காரியாலயத்தில் இருந்து அனைத்து வகுப்பறைகளையும் பார்வையிடக்கூடிய வசதி. அதிலும் என் பாடசாலை வாழ்வு தரம் 1இல் பாடசாலையின் வலது மூலையில் தொடங்கி வட்டமாக முன்னேறி உயர்தரம் தொடங்கிய இடத்தில் முடிவுற்றது சிறப்பானது. எனது பாட்டனார், எனது தாய், நான், என் மகன் என 4 ஆவது தலைமுறையாக மகாஜன மாதாவின் பிள்ளைகள் என்பதனைப் பெருமையுடன் பதிவிடுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். எனது பாடசாலை வாழ்க்கையில் மகாஜன மாதாவின் செல்லப் பிள்ளையாக இருந்து, சிவகாமி சமேத ஆனந்த நடராஜரின் ஆசியுடன் வாழ்வில் உயர்நிலை பெற்றமையினால் நான் மகாஜனன் என்பதில் பெருமையடைகின்றேன்.

07

# மகாஜனா நினைவுகளில் முக்குளித்தல்

- மிருணாளினி ஜீவேஷ்வரா ரூபன்

## மூன்றரைத் தசாப்தகால வளர்ச்சி, படைப்பாற்றல், சாதனைகள், நட்புகளைக் கொண்டாடுதல்

**அறிமுகம்:**

மூன்றரைத் தசாப்தங்களின் பின்னர் எங்கள் பள்ளியில் ஒன்றுகூடலைக் கொண்டாட நாங்கள் அனைவரும் ஒன்றாக இணையும் இந்த அற்புதமான தருணத்தில், எங்களைச் செதுக்கிய அனுபவங்கள், நன்றியுணர்வு, ஆழ்ந்த பாராட்டு ஆகியவற்றினால் உள்ளீர்க் கப்பட்டு நிரம்பிப் "பொங்கி வழிகின்ற" பயணத்தைத் தொடங்கும் வேளை, நேசத்துக்குரிய கல்லூரியின் நினைவுகள் என் மனவெளியில் காட்டாற்று வெள்ளமெனக் கரைபுரண்டோடு கின்றன. "உனை நீ அறி", என்ற எங்களின் பள்ளி முழக்கத்தினால் வழிநடத்தப்படும் கல்வியின் மாற்றும் சக்தி, பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் சிறந்து விளங்குவதன் மகிழ்ச்சி, ஆசிரியர்கள், நிர்வாகத்தினரின் ஆதரவு தந்த எழுச்சி, காலத்தின் சாட்சியாக நிலைத்து நிற்கும் நட்பின் நீட்சி, எமது பயணத்தினை வடிவமைத்த செழுமையான அனுபவங்களினூடே நாம் பெற்றுக்கொண்ட வளர்ச்சி, ஆகியவற்றின் கூட்டுக் கதம்பமாக ஆளுமைமிக்க மனிதர்களாக இன்று நாங்கள் பிரதிபலிக்கின்றோம். இவ்வாக்கத்தினை எழுத அமரும் பொழுது என் இதயத்தில் இருந்து மொட்டவிழ்கின்ற ஒவ்வொரு பூஞ்சொற் களையும், அர்த்தம் தொனிக்கும் வார்த்தை ஜாலங்களாக்கி, அதனை ஒவ்வொன்றாக அழகிய பூமாலையாகக் கோத்து எமது கல்லூரித் தாய்க்கு அணிவித்து அழகு பார்க்க விழைகின்றது எனதுள்ளம். இது மனதிற்கு மிகுந்த மகிழ்ச்சியையும் பள்ளியின் மலரும் நினைவுகளில் நீந்திவிளையாடி முக்குளிக்கவும் செய்ய வைக்கின்றது.

பல ஆண்டுகளாக எனது தனிப்பட்ட வளர்ச்சியினைப் பற்றி நான் சிந்தித்துப் பார்க்கும் பொழுது, "உனை நீ அறி" என்ற இந்தத் தாரக மந்திரம் எனது பயணத்தில் மிக முக்கியமானதொரு மைல்கல்லாகி உயிர்ப்போடு தொழிற்பட்டதனை ஆழமாக உணர்கின் றேன். ஒரு தனி நபராக, நான் யார், எனது பலம், பலவீனங்கள், எனது விருப்பு, வெறுப்புகள், நான் யார் என்பதை உண்மையாகப் புரிந்து கொள்ள நேரம் ஒதுக்குவது போன்றவை, நான், எனது வாழ்க்கையை எப்படி அணுகுகின்றேன் என்பதில் ஆழமான தாக்கத்தினை உருவாக்கக் காரணமாக அமைந்தன. மேற்கூறிய செயற்பாட்டினூடாக, நான் அதிக சுய-விழிப்புணர்வுடன் இருக்கக் கற்றுக்கொண்டேன், இது வாழ்க்கையில் சிறந்த முடிவு களை எடுப்பதற்கும், எனது விழுமியங்கள், கொள்கைகள், இலக்குகளுடன் சார்பில்லாத, முரண்பாடான சூழ்நிலைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கும் எனக்குப் பக்க பலமாக நின்று பேருதவி செய்தது.

### பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகளில் முன்னேற்றம்:

பின்னோக்கிப் பார்க்கும்பொழுது, எங்கள் பள்ளி வழங்கிய பாடநெறிக்கு அப்பாற்பட்ட எனது செயற்பாடுகளின் துடிப்பானதொரு பெரிய ஓவியவரைவெளி தெளிவாகத் தெரிந்தது. தனிப்பட்ட முறையில், நான் எனது ஆர்வத்தினைக் கண்டறிந்து பல்வேறு முயற்சிகளில் சிறந்து விளங்கினேன். விளையாட்டுப் போட்டியில் யாழினி அக்காவின் இடையறாத உந்துதலினால் உயரம் தாண்டியது, உயரம் தாண்டுதல் எனது தனிப்பட்ட வெற்றியின் ஆதாரமாக மாறி விரும்பத்தக்க பரிசினைப் பெற்றுக்கொள்ள வழிவகுத்துத் தந்தது. காற்றில் பறந்து எனது வரம்புகளைத் தாண்டி, புவியீர்ப்பு விசையை மீறிய அந்த அதிசயக் கணத்தில் தான் எனக்குள் இருக்கும் பின்னடைவையும் இலட்சிய இலக்குகளை அமைப்பதற்கான முக்கியத்துவத்தினையும் நான் உய்த்துணர்ந்து கொண்டேன்.

### படைப்பாற்றல் திறமைகளை வெளிக்கொணர்தல்:

எங்கள் நேசத்திற்குரிய பள்ளியின் சுவர்களுக்குள், எனது படைப்பாற்றலை வெளிப்படுத்துவதற்கான ஒரு பெரிய ஓவியவரைவெளியினைக் காணுற்று இன்புற்றேன். சிறந்த கையெழுத்துத் தேர்ச்சி எனக்கு அறிவிப்புப் பலகைகளில் எழுதும் பொறுப்பினை அளித்தது. இது நான் அர்ப்பணிப்புடனும் பெருமையுடனும் அணுகிய பணி. பள்ளியின் தகவல் தொடர்பாடலுக்குப் பங்களிப்பு நல்குவது, சக மாணவர்களிடையே ஒற்றுமை உணர்வினை வளர்ப்பது என்பவை மரியாதைக்குரிய செயல்களாகும். நிகழ்வுகளுக்கு, சமய விழாக்களுக்கு நிலத்திலே கோலம் போட்டது, விளையாட்டுப் போட்டிகளில் இல்ல அலங்கரிப்பில் ஈடுபட்டது, கவிதைப்போட்டியில் பரிசு பெற்றது, கண்காட்சியின் நிமித்தம் பல்வேறு பாட அலகுகளையொட்டி, பாராட்டுக்களை அள்ளிக்குவித்த கைவினைப்பொருட்கள் செய்து என் கற்பனைக்குதிரையை உயர உயரப் பறக்க விட்டது, இதன் மூலம் கலைகள் எனது சரணாலயமாக மாறின. இந்த ஆக்கபூர்வமான முயற்சிகளின் வெளிப்பாடுகள் எனது நம்பிக்கையை மென்மேலும் கட்டியெழுப்பியதோடு, கலைகள், சுய-வெளிப்பாட்டின் அழகியலுக்காக வாழ்நாள் முழுவதும் நான் சென்ற இடமெல்லாம் பாராட்டுகளைப் பெற்றுத் தருவதற்கு உற்ற காரணங்களாய் அமைந்துதவின.

### ஆசிரியர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதல்:

நமது கல்விப் பயணத்தை வடிவமைப்பதிலும், நமது தனிப்பட்ட வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் நமது மதிப்பிற்குரிய ஆசிரியர்களும், நிர்வாகமும் முக்கிய பங்காற்றினர். அறிவை, ஆர்வத்தைத் தூண்டுவதற்கும், விலைமதிப்பற்ற வாழ்க்கைப் பாடங்களை வழங்குவதற்கும் அவர்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டனர். அவர்களின் அசைக்க முடியாத ஆதரவு, வழிகாட்டுதல், ஊக்கம், அறிவு அனைத்துமே எம்முள்ளே தனிப்பட்ட வளர்ச்சிக்கான தாகத்தினை வளர்க்கும் சூழலை உருவாக்க வழி சமைத்துத் தந்தன. இதன் தொடர்ச்சியாக, நமது ஆற்றல் மீதான நம்பிக்கையினாலும், சவால்களை எதிர்கொள்ளும் மனோபலத்தினாலும், தடைகளைத் தாண்டி, நமது உண்மையான திறன்களைக் கண்டறிய முடிந்தது. அத்தோடு விடாமுயற்சி, ஒருமைப்பாடு, வாழ்நாள் முழுவதும் கற்றல் ஆகியவற்றின் விழுமியங்களை நம்மில் பலருக்கு விதைத்ததன் மூலம் எங்கள் எதிர்கால முயற்சிகளுக்கும், உறுதியான அத்திவாரத்திற்குமான அடித்தளம் அமைத்துக் கொடுத்ததோடல்லாமல் நமது திறன்களில் அசைக்க முடியாத நம்பிக்கையுடன் உலகை எதிர்கொள்ளவும் நம்மைத் தயார்ப்படுத்தி வைத்துள்ளது.

**நீடித்திருக்கும் இணைப்புகள்:**

திரும்பிப் பார்க்கும் பொழுது, எங்கள் பள்ளிப் பருவத்தில் ஏற்பட்ட நட்புக்காக நான் என்றும் நன்றியுள்ளவளாக இருக்கின்றேன். நாங்கள் உருவாக்கிய பிணைப்புகள், ஊக்கம், பகிரப்பட்ட சிரிப்பு, தோழமை, கூட்டு வளர்ச்சி ஆகியவை எங்கள் அடையாளங்களை அழகழகாய்ச் செதுக்க உதவின. வெற்றிகள், சவால்கள் மூலம் ஒருவரையொருவர் ஆதரித்து, காலத்தின் சாட்சியாக நிலைத்திருக்கும் நினைவுகளை உருவாக்கி, சுய-கண்டுபிடிப்புக்கான பயணத்தைத் தொடங்கினோம். இத்தனை தசாப்தங்களுக்குப் பின்னரும், அன்று நாங்கள் உருவாக்கிய பிணைப்புகள் நம் இதயங்களில் நீங்காத இடத்தினைப் பிடித்துள்ளன, நட்பின் சக்தியையும், பகிர்ந்து கொள்ளப்பட்ட அனுபவங்களின் வலிமையையும் அவை நமக்கு இனிதே நினைவூட்டிச் செல்கின்றன. நீடித்த வலிமையின் ஆதார சுருதியாக இருக்கும் ஒரு வளர்ச்சியின் விதைநிலமாகிய ஆரோக்கியமான, வளம்கொழிக்கும் சமூகத்தை எமது பள்ளி எங்களுக்கு அளித்துள்ளதெனில் அது சிறிதும் மிகையாகாதென்றே எண்ணத் தோன்றுகின்றது.

**எங்கள் பள்ளியின் தாக்கம்:**

எங்கள் கல்லூரியின் செல்வாக்கு அதன் சுவர்களுக்குள் நம் நேரத்தினைத் தாண்டி நீண்டு பரந்து விரிந்துள்ளது. “உனை நீ அறி“ என்ற பொன்மொழி நம் வாழ்நாள் முழுவதும் எதிரொலித்து, வாழ்வின் அச்சாணியாகி, நம்மை வழிநடத்தும் உயர் கோட்பாடாகச் செயற்படுகின்றது. கல்லூரியில் நான் கற்றுக் கொண்ட பாடங்கள், விழுமியங்கள், அனுபவங்கள், பெண் வழிகாட்டிகள், முதலுதவி ஆகியவற்றில் எனக்கிருந்த தீவிர ஈடுபாடு, என்னுள் பொறுப்புணர்வினைத் தூண்டி, மனிதாபிமான காரணங்களுக்கான எனது அர்ப்பணிப்பினை ஆழப்படுத்தியதோடு, பலதரப்பட்ட மக்களுடன் திறம்பட ஒத்துழைக்கும் எனது திறனையும் கூர்மைப்படுத்தி, எனது எதிர்காலத்தைச் செப்பனிடுவதில் சிறந்த பங்காற்றுவதற்கு உறுதுணையாய் அமைந்தன.

மேற்கூறியன CARE International இல் எட்டரை ஆண்டுகள் நிறைவேற்றுச் செயலாளராக எனது வெற்றிக்கு நேரடியாகப் பங்களிப்பு நல்கின. நிர்வாகப் பணிகளைத் திறம்பட ஒருங்கிணைத்து, நிறுவனத்திற்குள் சுமூகமான செயற்பாடுகளை எளிதாக்கும் சவாலான பாத்திரத்தில் செழித்தேன். எமது பள்ளி தலைமைத்துவக் கலாசாரத்தை வளர்த்ததோடு, ஒரு வலுவான பணி நெறிமுறையை என்னுள் விதைத்தது, அத்தோடு குழுப்பணி, ஒத்துழைப்பிற்கு முக்கியத்துவம் அளித்ததன் மூலம், உலகெங்கிலும் உள்ள பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உதவி, ஆதரவை வழங்கும் நிறுவனத்தின் நோக்கத்தில் திறம்படப் பங்காற்ற எனக்கு அவை உறுதுணையாய் அமைந்தன. CARE International, அமெரிக்காவினைத் தலைமையகமாகக் கொண்டு, அன்றைய கால கட்டத்தில் 104 நாடுகளில் இயங்கிய, ஒரு புகழ்பெற்ற சர்வதேச அரசசார்பற்ற மனிதநேய அமைப்பு (INGO), மனிதாபிமான முயற்சிகளுக்கு அதனை அர்ப்பணித்து இன்றளவும் செயற்படுகின்றது.

CARE International இல் நிறைவேற்றுச் செயலாளராக இருந்த எனது அனுபவம், உலகின் பல்வேறு கலாசாரப் பின்னணியில் உள்ள நபர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தவும், நிர்வாகப் பணிகளைத் திறம்பட ஒருங்கிணைக்கவும், பங்குதாரர்களுடன் தொடர்பினைக் கொள்ளவும், மனிதாபிமானப் பணிகள் குறித்த உலகளாவிய கண்ணோட்டத்தினைப்

பெறுவதற்கும் எனக்கு நன்றே வழி சமைத்துத் தந்தது. இந்த வெளிப்பாடு பல்வேறுபட்ட கலாசாரங்களுடன் எனது தொடர்பாடல் திறன்களை மேம்படுத்தியதோடு மட்டுமன்றி உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள் பற்றிய எனது புரிந்துணர்வினையும் ஆழமாக்க உதவியது. இந்த வெற்றியைக் கட்டியெழுப்பியதன் மூலம், இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்திலே செயலாளராகப் பணியாற்றி, இலங்கையின் இராஜதந்திர உறவுகளுக்குப் பங்களிக்கும் நல்வாய்ப்பினைக் கனகச்சிதமாகப் பயன்படுத்திக் கொண்டேன். தொடர்பாடல், அமைப்பு, இராஜதந்திரம் ஆகியவற்றில் நான் வளர்த்துக் கொண்ட சிறப்பறிவுத் திறத்தினைப் பயன்படுத்தி, ஆற்றல்மிக்க, சவால்கள் நிறைந்த, மாறுபட்ட பணிச்சூழலில் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையில் பயன்மிக்க தொடர்பாடல், ஒத்துழைப்பினை எளிதாக்குவதில் ஒரு முக்கிய பங்கினை ஆற்றியது என் வாழ்வில் கிடைத்த அற்புதமான வாய்ப்புக்களில் ஒன்றாகத் திகழ்கின்றது.

பெண் வழிகாட்டிகள், முதலுதவியில் எனக்கிருந்த ஈடுபாட்டின் மூலம் மற்றவர்களுக்குச் சேவை செய்வதில் ஒரு ஆத்ம திருப்தியினையும், மனநிறைவினையும் கண்டுணர்ந்தேன். சமூக முன்முயற்சிகளில் ஈடுபடுவதற்கு இந்த அமைப்பு எனக்குப் பல வாய்ப்புக்களினை நல்கியது, மற்றவர்களின் வாழ்க்கையில் நேர்முகமான தாக்கத்தினை ஏற்படுத்த நான் தீவிரமாகப் பங்களிப்பாற்றத் தொடங்கினேன். இந்த நடவடிக்கைகள் குழுப்பணி, தலைமைத்துவம், இரக்கவுணர்வு ஆகிய நற்பண்புகளை என்னுள் விதைத்ததோடு மட்டுமன்றித் தேவைப்படுபவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதன் முக்கியத்துவத்தினையும் என்னுள் உணர்த்த முக்கிய ஏதுக்களாக அமைந்தன.

St. John Ambulance உடனான எனது ஈடுபாடு என்னை அவசர மருத்துவச் சேவைகள் துறையில் வெளிப்படுத்தி முதலுதவி, சுகாதாரப் பராமரிப்பில் உள்ள நடைமுறைத் திறன்களை எனக்களிக்க உதவியது. ஒரு உறுப்பினராக, நான் நெருக்கடி முகாமைத்துவம், நோயாளி பராமரிப்பு ஆகியவற்றில் விரிவான பயிற்சிகளினைப் பெற்றுக்கொண்டேன். இந்த அனுபவம், அழுத்தத்தின் கீழ் அமைதியாக இருப்பதற்கும், சவாலான சூழ்நிலைகளில் விமர்சனரீதியாகச் சிந்திப்பதற்கும், தேவைப்படுபவர்களுக்குச் சிறந்த ஆதரவினை வழங்குவதற்கும் என் திறனை வளர்க்க உதவியது. St.John Ambulance சேவை உயிர்களைக் காப்பாற்றும் அர்ப்பணிப்புக்கு முக்கியத்துவம் அளித்து, மனிதாபிமானப் பணிகளுக்கான எனது ஆர்வத்தினைத் தூண்ட மேலும் உதவி புரிந்தது.

வலி வடக்கில் கடும் யுத்தம் நடைபெற்ற பொழுது பலரும் இடம்பெயர்ந்திருந்த கால கட்டத்தில், வீட்டில் இருந்த சிலரும் எறிகணை வீச்சுக்கும், எண்ணற்று இலக்கில்லாமல் எங்கணும் பாய்ந்த துப்பாக்கிச் சன்னங்களுக்கும், உலங்கு வானூர்தியின் ஓய்வற்ற தாக்குதலுக்கும் பயந்து, பதுங்கு குழிகளுக்குள்ளும் வெளியே வர அஞ்சியும் இருந்த வேளையில், பன்னாலையைச் சேர்ந்த சிவரூபன் அண்ணா (88 A/L) தலைமையில், அம்பனைச் சந்தியில் இயங்கிய முதலுதவி நிலையத்தில் போரில் காயப்பட்ட பல தரப்பட்ட மக்களுக்கும் முதலுதவி செய்வதனைக் கடமையுணர்வோடு செய்யக்கிடைத்த அரிய சந்தர்ப்பத்திற்கு என்றும் நான் நன்றியுடையவளாக இருக்கின்றேன். எங்களோடு கற்று இவ்வுலகை நீத்த நண்பர் தம்பிராசா ரகுலதரனின் இளைய சகோதரன் கெங்காதரன் போரில் படுகாயமடைந்து இரத்த வெள்ளத்தில் எங்கள் முதலுதவி நிலையத்திற்கு எடுத்து வரப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டுப் பாதுகாப்பாக இலை குழைகளால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைத்தியசாலைக்கு அனுப்பி

வைக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்ட நபர்களில் ஒருவர் என்பதனை இங்கே நெகிழ்வோடு நினைவு கூரு கின்றேன். ஒத்த எண்ணம் கொண்டவர்களுடன் ஒன்றிணைந்து, ஒரு பொதுவான நல்ல நோக் கத்திற்காகப் பாடுபடுவது, சமூகத்தில் நேர்முகமான தாக்கத்தினை ஏற்படுத்துவது போன்ற நினைவுத்திறம் உந்துசக்தியாகி எனக்குள் நல்லூக்கியாகத் தொழிற்பட்டவண்ணம் உள்ளது.

பள்ளியில் பெற்ற கல்வி, விழுமியங்கள், மேம்படுத்தப்பட்ட திறன்கள் அனைத்துமே அறிவுக்கான தாகத்தினையும், தனிப்பட்ட வளர்ச்சிக்கான பசியினையும் தூண்டியதோடல்லாமல், மனிதாபிமானத் துறையில் சிறந்து விளங்கத் தேவையான திறன்கள், மனப்பாங்கினை எனக்களித்து, சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்பு நல்க என்னை ஒரு கருவியாக்கி அதன் பிரதிபலனாக உலகில் நேர்முகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதற்கான அர்ப்பணிப்பினையும் ஒருங்கே என்னுள்ளே விதைத்துச் சென்றுள்ளது. அத்தோடு சுய-விழிப்புணர்வு, வளர்ச்சி, சிறப்பான ஆற்றுகையினைப் பின்பற்றுவதற்கு தொடர்ந்து எனக்கு அவை ஊக்கமளித்த வண்ணம் இருக்கின்றன.

**முடிவுரை:**

நீண்டகாலமாகப் பேராவலோடு அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட இந்த அற்புத சந்திப்புக்காக நாம் ஒன்றுகூடும் வேளையில், நாம் பகிர்ந்து கொண்ட இனிய நினைவுகளைக் கொண்டாடுவோம். நமது பரிணாம வளர்ச்சிக்கும், வெற்றிக்கும், இடையறாத அர்ப்பணிப்பிற்கும் மூல காரணகர்த்தாக்களான நமது கல்வியாளர்களுக்கும், மதிப்புமிகு ஆசிரியர்களுக்கும், நிர்வாகத்திற்கும், நம்மை வடிவமைத்த அனுபவங்களுக்காகவும், நம்முடன் ஒன்றாக நடைபயின்ற நண்பர்களுக்காகவும் எமது அளவிறந்த நன்றிப் பூக்களைக் காணிக்கையாக்குவோம். பள்ளியில் படித்த காலத்தில் பெற்ற சாதனைகள், நாம் பகிர்ந்து கொண்ட பெரிய, சிறிய தருணங்களைக் காணக்கிடைக்காத அரிய, பெரிய திரவியமெனப் போற்றிப் பேணுவோம்.

கடந்த காலம் நம்மை வடிவமைத்துள்ளது, நிகழ்காலம் நம்மை ஒன்றிணைக்கிறது, நம்பிக்கையளிக்கும் ஒளிமயமான எதிர்காலம் சொல்லொணாச் சாத்தியக்கூறுகளைத் தன்னகத்தே தாங்கிநின்று நம்மைக் கனிவோடு வரவேற்கக் காத்திருக்கின்றது. இந்த மீள் இணைவு, சுய-கண்டுபிடிப்பின் நாட்டத்திற்கும், நாங்கள் போற்றும் நீடித்த இணைப்புகளுக்கு மானதொரு சான்றாகவும், எங்கள் பள்ளி அனுபவத்தின் மாற்றும் சக்தியின் திருவிழாக் கொண்டாட்டமாகவும் சிறப்புற அமைந்து மேன்மை பெறட்டும்.

**மனதில் நீங்காத பள்ளி நினைவுகளுக்குள்ளே முக்குளித்தபடி,**
**மிருணாளினி ஜீவேஷ்வரா ரூபன்**

08

# புலனம் என்னும் நட்பின் சரணாலயம்

- க. சதுர்முகன்
- இ. சசிகரன் (சுதா)
- தயாளினி கமலாகரன்

1978 இல் கூட்டை விட்டு வெளியேறிய சின்னஞ் சிறு பறவைக்குஞ்சுகளாக மகாஜனா என்ற வேடந்தாங்கலுக்கு ஆனந்தமாக வந்து சேர்ந்தோம். அன்றிலிருந்து 1990 வரை சுகதுக்கம், இன்பதுன்பம் மறந்து குதூகலமாக பறந்து திரிந்து ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் அறிவு பெற்று 13 ஆண்டுகளின் பின் வேடந்தாங்கலை விட்டுப் பிரிந்து சென்றோம்.

1990 களின் பிற்பகுதியில் நாட்டில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக எமது பாடசாலையும் பண்டத்தரிப்பு நோக்கி இடம்பெயர்ந்திருந்தது. எமது உயர்தரப் பரீட்சைகளும் பிற்போடப்பட்டன.

எமது நண்பர்களில் பலர் இடம்பெயர்ந்தும் சிலர் புலம்பெயர்ந்தும் பிரிந்து சென்றோம். இவ்வாறு வேடந்தாங்கலில் இருந்து பிரிந்த பறவைகள் நாம் அப்போது இருந்து காலச் சூழ்நிலையில் திக்குத்திசை தெரியாத கண்காணாத தேசங்களில் ஏதிலிகளாகினோம்.

வேலைச்சுமைகளோடும், குடும்பச் சுமைகளோடும் வாழ்க்கைக்குள் வசப்பட்டோம். காலம் கடந்தோட மனிதனின் இயந்திர வாழ்க்கையோடு விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியும் போட்டி போட்டு முன்னேறிக் கொண்டிருக்கும் காலம், தகவல் தொழில்நுட்பத்தின் பரிணாம வளர்ச்சியாக சமூகவலைத்தளங்கள் உருவாகிய வேளை அது. முகநூலாகவும், புலனமாகவும் கைகளுக்குள் உலகம் சுருங்கியது. அப்போது தான் ஞாபகம் வந்தது நட்பு என்பது கண்களை விட்டோடிச் செல்லும் கண்ணீர்த் துளிகள் அல்ல கண்ணோடு இருக்கும் கருவிழி என்று...

சமூகவலைத் தளங்களை சரியான முறையில் தேவைகளுக்கு ஏற்றாற் போல பயன்படுத்தினால் மக்களுக்கு அது நல்ல தொடர்பாடல், ஆரோக்கியமான ஒரு நட்பு வட்டாரத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுடன் தொலை நோக்குடன் சிந்திக்க வைக்கவும் செய்கின்றது. இந்தவகையில் வேடந்தாங்கலில் இருந்து பிரிந்து ஏதிலிகளாக திரிந்த நட்புப்பறவைகளுக்கு ஒரு சரணாலயமாக 2016 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 1ம் திகதி புலனம் மூலம் மகாஜனக் கல்லூரி 87OL/90AL என்ற குழுமம் உருவாக்கப்பட்டது.

இந்த சரணாலயத்தில் முதலில் விரல்விட்டு எண்ணக்கூடிய பறவைகள் இணைந்து தமது இருப்பை உறுதி செய்தன. நட்புப் பறவைகளை தேடிய பயணத்தில் நாளாக நாளாக ஒவ்வொரு பறவையாக வந்து அமர்ந்தன.

மொட்டாகி மலராது போன மொட்டுக்கள் வலிகளை சுமந்து உயிர்ப்புப் பெற்று மலராவது போல பிரிவைத் தாண்டி புலனத்தில் தமது பழைய நினைவுகளை மீட்கத் தொடங்கி காலை வந்தனம் முதல் சயன வணக்கம் வரை தொடர்ந்த வளமான கருத்துக்கள், விவாதங்கள், நகைச்சுவை உரையாடல்கள் என்பன நண்பர்களுக்கிடையே பரிமாறப்பட்டன. இவ்வெளிப்பாடுகள் எமது இயந்திரமயமான வாழ்க்கைக்கிடையே புத்துணர்ச்சியையும், மகிழ்ச்சியையும் எமக்குள் தெளித்தது. எமது மனதிற்குள் புதிய உத்வேகம் பிறந்து, எம்மை மீண்டும் பாடசாலைக் காலத்துக்கு பின்னோக்கி இழுத்துச் சென்றது. பூமிப் பந்தின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் எமது நட்புக்கள் பரந்திருப்பதால் எமது புலனம் 24 மணி நேரமும் புத்துயிர்ப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும்.

நாட்கள் விரிந்தோடி வேடந்தாங்கலிலிருந்த பறவைகளில் சில இணைப் பறவைகளாக மீண்டும் வந்து எமது சரணாலயத்தில் அமர்ந்தன. இளவயதில் விழி என்ற சிறையில் பிடிபட்ட விம்பங்களை இப்போது நிழற்படங்களாக பார்த்த போது உன்னைப் பார்த்ததும் எழுத நினைக்கும் ஏக்கத்தை விட மேன்மையானது தனது மௌன மொழியென கண்ணியமாக நட்பு தொடர்ந்தது. காலப் போக்கில் பழைய நினைவுகள் வலிகளாகி அதுவே வரங்களாகி விட்டன.

காலச் சக்கரத்தின் சுழற்சியோடு நட்புக்களின் பிணைப்பும் இணைந்தே சென்றது. நிலவுக்கு கூட வானம் மாதமொரு முறை விடுமுறை கொடுக்கும். ஆனால் நட்புக்களின் சங்கமத்துக்கு விடுமுறையே இல்லை. புலனத்தின் மூலம் மீண்டும் சங்கமித்தது நட்பு. தாயகம், பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து மற்றும் சுவிஸ் போன்ற புலம் பெயர் தேசங்களில் சங்கமித்து தமது நட்பின் கரங்களை மேலும் இறுகப்பற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும் இச்சரணாலயம் இவ் வருடம் ஏழாவது வருடத்தைப் பூர்த்தி செய்ய இருக்கின்றது. பறவை களின் வாழ்க்கையில் கடந்து போனது கல்வெட்டாக, நிகழ்காலம் சிற்பமாக, வருங்காலம் ஓவியமாக 24.08.2023 மீண்டும் வேடந்தாங்கலை நோக்கிய பறவைகளின் பயணம்...



09

# நானும் சாரணீயமும்

- செ.ஜெயபவான்



1978 ஆம் ஆண்டு மகாஜனக்கல்லூரியில் வகுப்பு ஒன்றில் எனது பாடசாலைக்கல்வியை ஆரம்பித்தேன். அப்போது எனது வகுப்பாசிரியர் செல்வி முத்தையா அவர்கள். கற்பித்தலிலும் ஏனைய செயற்பாடுகளிலும் எமக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி எமக்கு கல்வி கற்பித்தார்.

1980 ஆம் ஆண்டு மூன்றாம் வகுப்பில் கல்வி கற்றுக்கொண்டு இருக்கும் காலத்தில் (அதேவகுப்பாசிரியர்) எமக்கு குருளைச்சாரணர் அமைப்பு இருக்கின்றது அதில் இணைய விரும்பும் மாணவர்களை பெற்றோரின் சம்மதக்கடிதத்துடன் வருமாறு வகுப்பாசிரியர் குறிப்பிட்டார். குருளைச்சாரணர் என்றால் என்ன என்று தெரியாமல் வீட்டில் எனது தாயாரிடம் குறிப்பிட்டேன் அதற்கு எனது அம்மா அப்பாவிடம் சொன்னார் அப்போது எனது தந்தையார் குருளைச்சாரணியத்தில் இணைவதற்கு சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கினார். நானும் சந்தோசத்துடன் பெற்று எனது கனவை நனவாக்கலாம் என எண்ணி குருளைச்சாரணீயத்தில் இணைந்தேன். என்னுடன் குருளைச்சாரணீயத்தில் 15 பேர் இணைந்து கொண்டார்கள்.

இணைந்தவர்களின் பெயர்கள். காண்டீபன், கணேஸ்குமார், நெவின்ஸ்ராஜ், தனுசன், முரளீதாசன், துஸ்யந்தன், சசிதரன், இரமேஸ்குமார் ஜெயக்காந்தன்(அமரர்), மனோரஞ்சன், சுதர்சன், திருமால், நாவலன், நகுலதரன்(அமரர்) எமக்கு குருளைச்சாரணர் பொறுப்பாசிரியர்களாக திருமதி.றோகிணி இரத்னவேல், (அமரர்) செல்வி.முத்தையா, (அமரர்) திருமதி.வேலுப்பிள்ளை ஆகியோர் இருந்தார்கள்.

குருளைச்சாரணியத்தில் சேர்ந்த யான் ஆசிரியர்களால் வழங்கப்படும் பயிற்சிகளைப் பெற்றுச் சிறந்த குருளைச் சாரணணாகச் செயற்படும் காலத்தில் மூளைக்காய்சலால் பாதிக்கப்பட்டு சற்று சிறிது காலம் பயிற்சிகளில் பங்குகொள்வதில்லை என்றாலும் எனது நண்பர்களின் ஊக்கத்தினால் பாடவிதானங்களை பெற்று அவற்றின் மூலம் வீட்டில் ஓய்வு நேரத்தில் பயிற்சிகளைச் செய்து பார்ப்பேன்.

குருளைச்சாரணீயத்தில் இருந்த காலத்தில் எங்களை ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகள்போன்று எம்மை வழிநடத்துவார்கள். அவர்களுடன் சக குருளைச்சாரணர்கள்

சகிதம் ஆலய சிரமதானம், குருளைச்சாரணர் சம்பந்தமான போட்டிகள், விளையாட்டுக்கள் என பலநிகழ்வுகளில் எம்மைக் கலந்து கொள்ளவைப்பார்கள். இவ்வாறு குருளைச்சாரணீ யத்தில் இருந்து உயரிய விருதான தங்கத்தாரகை விருதைப்பெற்றேன்.

1983ஆம் ஆண்டு 6ம் வகுப்பில் தொடர்ந்து சாரணீயத்தில் இணைவதற்கு விருப்பமின்மையால் நான் சாரணியத்தில் தொடர்ந்து இணையவில்லை. என்றாலும் எனது தாயாரின் விருப்பத்திற்கு அமைய தொடரந்து சாரணீயத்தில் இணைந்தேன்.

1983 ஆம் ஆண்டு சாரணீயத்தில் இணையும்போது திரு.தியாகராஜா (சித்திர ஆசிரியர்) அவர்கள் பொறுப்பாக இருந்தார்கள். அவர்களுடன் கல்லூரி முன்னாள் சாரணர்கள் திரு.கணேசலிங்கம், திரு.முருகானந்தன், திரு.இரவீந்திரன், திரு.சுதர்சன், திரு.ஜனார்த் தனன், பெர்னார்ண்டோ ஆகியோர் இருந்தார்கள்.

சாரணீயத்தில் விருப்பமில்லாமல் இணைந்த யான் 1984 ம் ஆண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட ஆண்டுப் பாசறையில் எனது சாரணியத் திறமைகளை வெளிக்காட்டினேன். இவ்வாறு 1985, 1986, 1987 ஆம் ஆண்டு கனிஸ்ர சாரணருக்கான உயரிய விருதான பச்சை நாடா விருதைப் பெற்றேன். இக்காலப்பகுதியில் சாரணர்களுக்கு பொறுப்பாசிரியர்களாக திரு.தியாகராஜா, (அமரர்) திரு.ஞானசேகரன் (கணித ஆசிரியர்) மேலும் இரு சித்திர ஆசிரியர்கள் அத்துடன் திரு.இரவீந்திரன் (கனடா) ஆகியோர் இருந்தார்கள்.

1986 ஆம் ஆண்டு மகாஜனக் கல்லூரி சாரணர் குழாமின் பொன்விழா ஆண்டு. இவ்விழாவிற்கான செயற்பாடுகள் மேற்கொண்டு வரும்வேளையில் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக நடைபெறவில்லை. பின் 1988 ஆம் ஆண்டு எமது மகாஜனா சாரணர் குழாம் 50 வது ஆண்டு (பொன்விழா) விழாவைக் கொண்டாடியது.

1988 ஆம் ஆண்டு மகாஜனாக் கல்லூரியில் நடைபெற்ற மாவட்ட பாசறை நிகழ்வில் யான் துருப்புத் தலைவனாக பொறுப்பேற்றேன். அங்கு சாரணர்களுக்குரிய செயற்பாடுகளை மேற்கோண்டு முதலாமிடத்தை பெற்றுக்கொண்டோம். பொறுப்பாசிரியராக திரு.தர்மேசன் அவர்கள் இருந்தார்.

1989 காலப்பகுதியில் பாடசாலை வளாகத்தைத் துப்பரவு செய்யவேண்டும் என சாரண பொறுப்பாசிரியரிடம் கேட்டபோது. ஆசிரியர் அவர்கள் அதிபரிடம் (திரு.நாகராசா) அனுமதி பெற்றுச் செய்வோம் என்றார். அதற்கு அதிபர் அனுமதி வழங்கினார். சாரணர்கள் அனைவரும் (45 பேர்) முதலில் பாடசாலையைச் சுற்றியுள்ள கூரைகளைச் சுத்தம்செய்து உடைந்த ஓடுகளை மாற்றினோம் பின் வளாகத்திலுள்ள சேதமடைந்த தளபாடங்களை ஒன்று சேர்த்தோம் இறுதியில் புற்களை வெட்டிச் சுத்தம் செய்தோம். அதிபர் ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றோம். நன்றாகப் பலாப்பழமும் சாப்பிட்டோம்.

1988 ஆம் ஆண்டு உயர்தரத்தில் வணிகப்பிரிவில் கல்வி பயின்றேன் அக்காலப் பகுதியில் என்னுடன் 03 சாரணர்கள் மட்டும் இருந்தார்கள். றகுலதரன், நெவின்ஸராஜ், யான் (ஜெயபவான்) 1990 ஆம் ஆண்டு பாடசாலை சாரணர்களுக்கு வழங்கப்படும் உயரிய விருதான ஜனாதிபதி விருது பெற்றுக்கொண்டேன்.

1990 நாட்டில் எற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக சாரணிய செயற்பாடுகள் மந்தகதியில் இயங்கிக்கொண்டு இருந்தன. இவ்வாறு 1992 ஆம் ஆண்டு பாடசாலையில்

சாரணத்தலைவராக இலங்கை சாரணசங்கத்தால் நியமன ஆணைப்பத்திரம் வழாங்கப்பட் டது. பாடசாலையில் எமக்கு எவ்வாறு பயிற்சிகள் வழங்கப்பட்டதோ அப்பிற்சிகளை புதிய சாரணர்களுக்கு வழங்கினேன். பாடசாலை இடம்பெயர்ந்த காலத்திலும் சாரணியத்தின் ஈடுபாடு குறையவில்லை மந்தகதியில் போனலும் எமது செயற்பாடுகள் இயங்கியவண்ணம் இருந்தன.

1999 ஆம் சாரண ஆசிரியர்களுக்கான உயரிய பயிற்சியான அவத்தை IV பெற்று 2001 ஆம் ஆண்டு அவத்தை V பெற்று 2003 ஆம் ஆண்டு மாவட்டத்தின் உதவி மாவட்ட ஆணையாளராக பதவி உயர்வு பெற்றேன். இவ்வாறு உதவிமாவட்ட ஆணையாராக சாரணர் பகுதி, வெளித்தொடர்பாடல், பயிற்சி, நிகழ்ச்சி, ஆநனயை என பல பிரிவுகளுக்கும் பொறுப்புக்கள் வகித்தேன்.

1990 தொடக்கம்  நடைபெற்ற சாரணர் ஒன்று கூடல்கள் சாரணர் திரளணி போன்ற செயற்பாடுகளில் மாவட்ட மட்டத்திலும், தேசிய மட்டத்திலிலும் கலந்து கொண்டுள்ளேன்.

2018 ஆம் அண்டு காங்கேசன்துறை மாவட்டத்தின் ஆணையாளராக இலங்கை சாரணர் சங்கத்தினால் நியமிக்கப்பட்டேன். தொடர்ந்து எனது செயற்பாடுகளைச் செய்தேன். உலகத்தில் ஏற்பட்ட கொடிய நோய் காரணமாக செயற்பாடுகள் மந்த கதியில் இயங்கியதே என்றாலும் தொழில் நூட்பத்தின் மூலமாக எமது செயற்பாடுகள் இயங்கிக்கொண்டு இருந்தன. எனது இச்செயற்பாடுகளிற்கு மகாஜனன்கள் 1987 O/L 1990 A/L நண்பர்களும் உதவினார்கள். எனது மாவட்ட ஆணையாளர் காலத்தில் என்னால் சாரணர்களுக்கு செய்யக்கூடிய அனைத்து செயற்பாடுகளையும் செய்துள்ளேன். மேலும் இச்சாரணீயத்தின் மூலம் நாட்டில் உள்ள அனைத்து மதங்களுடனும் பழகும் வாய்ப்புக் கிடைத்தது அத்துடன் ஜனாதிபதி, உயர் அதிகாரிகள், அமைச்சர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கான சந்தர்பங்கள் கிடைத்துள்ளன.

2023 ஆம் ஆண்டு எனது மாவட்ட ஆணையாளர் பதவிக்காலம் நிறைவடைந்துள்ளது. மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்று காங்கேசன்துறை சாரணர் மாவட்டத்தின் 04 ஆவது ஆணையாளரும் மாவட்டத்தின் 07 ஆவது ஆணையாளரும் ஆவேன். எனவே யான் சாரணியத்தில் நினைத்து சேர்ந்தது ஒன்று நடந்தது ஒன்று.  எனது வாழ்வில் பல சவால்களை எதிர் கொண்டேன். அப்போதெல்லம் சாரணீயப் பயிற்சிகள் உறுதுணையாக இருந்தன.

மாணவர்களுக்கு ஒரு கருத்து பாடசாலையில் கல்வி கற்கும்போது இணைப்பாடம் ஒன்றை தெரிவு செய்யுங்கள் கல்வியுடன் அதிலும் வெற்றிகொள்ளுங்கள் என்பதுடன் நிறைவு செய்து கொள்கின்றேன்.



# 11

# அந்தநாள்

- இராஜேஸ்வரி நடராஜா

இல்லக்கடமைகள் கொஞ்சம் தின்ன
நிகழ்வுகளில் கனவுகளை
சாத்தியமாக்கப் போராடும்!
வாழ்வின் கடந்த இரு வருட கால
என் கல்லூரி வாழ்வைத்
திரும்பிப் பார்க்கின்றேன் பேனாமுனையால்...

மாயங்கள் நிறைந்த உலகில்
ஆனந்தமாய் நட்போடு
பவனிவந்த காலம் அது
குறும்புகள் பல பேசி
குழந்தையாய் கல்லூரியை
சுற்றிவந்த முத்தான காலம் அது

ஆணென்றும் பெண்ணென்றும்
வரையறையின்றி எம்
வையத்து வாழ்நாள் எல்லாம்
மகிழ்ச்சியாக வாழ்ந்த காலம் அது

சோதனைகள் தெரியாமல்
வேதனைகள் அறியாமல்
வறுமைப்பிணியில் வாடிவிடாது
நிம்மதியாய் வாழ்ந்த காலம் அது

வெளியுலகம் அறியாமல்
நயவஞ்சகம் புரியாமல்
நான் எனது என்றில்லாமல்
ஆனந்தமாய் வாழ்ந்த காலம் அது

கவலை அறிந்ததில்லை
களிப்பிற்குப் பஞ்சமில்லை
கண்டிப்போடு கற்கையும்
காலைமாலை நடந்திடும் காலம் அது

நாம் கதைகள் பேசிய வகுப்பறை
நம் நினைவுகளைச் சுவாசித்து
வாழ்ந்து கொண்டிருக்கின்றது இன்று...

நாம் சுற்றித்திரிந்த நூலகம்
அடுக்கிவைக்கப்பட்ட புத்தகங்களால்
அவதியுற்றுக் கிடக்கிறது இன்று...

நாம் அமர்ந்து பேசிய மரநிழல்
உயிரற்ற பிம்பங்களை
வெறுமனே சுமந்து
நிற்கிறது இன்று...........

முகவுரையும் மறந்துபோய்
முகவரியும் தொலைந்துபோய்
குரல் ஒலியில் அடையாளம் காண
காலமெனும் காந்தமது
இழுத்த இழுவைக்கெல்லாம்
சுழன்று சுழன்று ஓடுகின்றோம் இன்று...

சுமைபல தாங்கியாய்
நேரத்தைத் தேடும் மனிதராய்
நட்பையும் மறந்து
அவதியுறுகின்றோம் மாநிலத்தில் இன்று...

முடிவுறாமல் முடிந்தகதை இது
இன்னும் எத்தனை நினைவலைகள்
வந்து மோதி முட்டுகின்றது...

முதல்நாள் கல்லூரியில்
இணையும் போது தோன்றிய
படபடப்பும் பயமும் யாரறிவர்.

தந்தையின் சுவடுகளை அடியொற்றி
தந்தைவழி செல்கையில்
கண் எதிரே நாகராஜா அதிபர்
தூய்மையும் வெண்மையும் கலந்த ஆடை
மாணவர் போலும் தோற்றம்
"ஊசை" தந்தையின் குரலிது
பல்கலை புக வாழ்த்துக்கள்
என்று இசைத்து
மகிழ்வோடு கைகுலுக்கல்
இன்றும் என் நினைவலைகளாய்…
சாதித்தேன் அவர் வார்த்தை
பணிகின்றேன் அவர் நாமம்

குசநந பாடம் கண்டதும்
எம் அதிபர் நாகராஜா
புகுந்திடுவார் வகுப்பறைக்குள்
எடுத்திடுவோம் ஓட்டம் நூலகம் தன்னில்
இன்று புரிகிறது மொழியின் தாற்பரியம்
விண்ணுலகு புகுந்திடினும்
போற்றிடுவோம் அவர் நாமம்

செல்வராசா ஆசிரியை இன்றில்லை
அவர் புகழ்பாட நாமுள்ளோம்
இந்துநாகரிகம் பாடமதை
விருப்புடனே செப்பிடுவார்
சிரித்தமுகமும், கனிவானபேச்சும்
உங்களில் கண்டு கொண்டோம்
உங்கள் வசமானோம்
உங்கள் நாமம் போற்றுகின்றோம்.

யோகநாதன் ஆசிரியரும்
தமிழைச் சிறப்புறவே ஓதிடுவார்
குறளுடன் வரலாறும்
கரைபுரண்டோடிடும்
இலக்கணமும் கண்டோம்
வாழி! வாழி! பல்லாண்டு வாழி!

அறிவும் நுண்புலமையும்
தமிழ்ப் பற்றும் ஒளிரும்
ஆசான்களாம் இராஜகுலேந்திரனோடு
கணேசலிங்கமும் இடையிடையே
பாட்டுடனே வந்திறங்கி
பாட்டால் மயக்கிடுவர்
வகுப்பறையோ சிரிப்பொலிதான்
வாழி! வாழி! பல்லாண்டு வாழி!

அமைதியும் அழகும், அறிவும்
ஒருங்கே தவழ
பொருளியல் பாடமதை
பாங்குற ஓதியே
கேள்வியும் நிரம்பலுமென
கோட்டுக்குள் விளங்கவைப்பார்
வாழி! வாழி! பல்லாண்டு வாழி!

ஆணழகன் என்று குறிப்பாய்
உணர்த்திடும் ஆசான் சயந்தன்
அளவையியலுக்கோர் அளவுகோலாய்
வந்துதித்தார் மகாஜனா மண்ணில்
அன்றுதான்

இளமையும் துடிப்பும் மிளிர
நகைச்சுவையாய் கச்சிதமாய்
பாடமதை நகர்த்தியே சென்றிடுவார்
ஆசானை நாடி
அலைமோதும் மாணவர் படை

மதிவதனி அழகானவள்
அழகானவள் யாவரும் மதிவதனி அல்லர்
வாதம் உண்மையா
பொய்யா என்றறிய
ஆவலானோம் …

நேர்கொண்ட பார்வையும்
நிமிர்ந்த நன்னடையும்
கண்டு கொண்டோம் இன்று
கண்படும் என்றோ
கண்ணாடியில் அவர் பார்வை அன்று
வாழி! வாழி! பல்லாண்டு வாழி!

பண்புக்கோர் இலக்கணமாய்
பார்வைக்கோர் எளியனாய்
குரலுக்கோர் இனியனாய்

பிரவாகிக்கும் மொழியனாம்
எங்கள் பிரதாப சர்மாவே!
அறியாமைப் பிணிஅகற்றி
அழியாத அளவையியல் கல்வி தந்தீர்கள்
கல்லாமை இழிவு அகற்றி
காலம் எல்லாம் வாழச் செய்தீர்கள்
வாழி! வாழி! பல்லாண்டு வாழி!

ஈராண்டே இக்கல்லூரி வாழ்க்கை
நினைவுகளோ ஏராளம்
வாணி, வசுமதி, சபிதா, தேவகி
சந்திரா, சுகி, கௌரி, குட்டி
சசி, புனிதமலர், இராஜேஸ்
கருணா, ரதி, தவராணி, வரம்
புஷ்பா, வதனா, சிவசிவா
மதி, குணாளன், கோடீஸ், தயா
இன்னும் பலர் நண்பர்களாய்
கைகோர்த்தோம் அன்று
அற்புதங்கள் பலகோடி

நாம் கடந்து சென்ற பாதைகள்
நம் சுவடுகளை
மீண்டும் ஏந்தக் காத்திருக்கின்றது.
நாம் மீண்டும் சந்திப்போம்
நாம் மீண்டும் சிந்திப்போம்
நம் நட்பினைப் புதுப்பிப்போம்
நாம் வாழ்ந்த கல்லூரியை
நம்பிக்கையோடு கைகோர்ப்போம்
வாரீர்! அணிதிரள்வோம்.



12



# நட்பின் மகிமை

- கோமதி மாயகிருஷ்ணன்

காலப் பயணங்கள் தடுமாறலாம்
கண்ட கனவுகள் தவிடுபொடியாகலாம்
நினைவுகள் நிலை குலைந்து போகலாம்
நிலையான நட்பு என்றும் எம்முடனே!

தாய், தந்தை குரு தெய்வம் இவற்றோடு
நட்பெனும் உயிர்ச் சொல்லைச் சேர்ப்போம்
அன்பெனும் அருமருந்தை அகமகிழ்ந்து
அருந்தி தினம் இன்புறுவோம்

ஆலமரத்தின் வளர்ச்சியை
சொல்வது விழுதுகள்
நட்பின் வளர்ச்சியை சொல்வது நினைவுகள்.
நட்பு என்பது ஆழ்கடல் போன்றது
கரையில் தேடினால் கிடைப்பது சிற்பி
மூழ்கித் தேடினால் கிடைப்பது முத்து

நட்பு என்ற ஏணிப் படியால்
மலையைக் கூட எளிதில் கடக்கலாம்.
நட்பு என்பது பரந்த வானம் போன்றது
எம்மைச் சுற்றி தினம் துணை நிற்கும்

நல்ல நட்பிற்கு வயது தடை இல்லை
ஏற்றத் தாழ்வு முக்கியம் இல்லை
கருத்து வேறுபாடு பார்ப்பதில்லை

உரிமை தவிர வேறு தேவை இல்லை
பணம் அற்றவன் அல்ல ஏழை - நல்ல
நட்பு அற்றவனே ஏழை
பணத்தையும் பதவியையும் பார்த்து
பழகும் உறவுகளிடையே
மனத்தையும் குணத்தையும் புரிந்து
பழகும் நட்பு புனிதமானது.
உப்பிருந்தால் உணவு சுவைக்கும்
நட்பிருந்தால் வாழ்வு இனிக்கும்

மலரும் பூக்கள் உதிர்வது நியதி
என்றும் உதிராப் பூ நட்பு மட்டுமே!
புன்னகை போதும் நட்பைசேகரிக்க
புதைந்து போகும் வரை தொடர்ந்து வர

தட்டிக் கொடுக்க நண்பன் இருந்தால்
வேதனை கூட சாதனையாகும்
நட்பு உலகில் இருக்கும் வரை
அநாதை என்று யாரும் இல்லை

நட்பு என்பது:
இறைவன் கொடுக்கும் வரம் அல்ல
இறைவனுக்கே கிடைகாதவரம்
உரிமையாக பேசுவது
ஒருவரை ஒருவர் கலாய்ப்பது
எதிர்பார்ப்பின்றிப் பழகுவது,
குற்றங்குறை பார்க்காது
உரிய நேரத்தில் உதவுவது
உயர்ந்த நட்பின் அடையாளம்

வாழும்வரை வாழ்க்கை
சிரிக்கும் வரை கண்ணீர்
வெல்லும் வரை தோல்வி
உதிரும் வரை பூக்கள்
விடியும் வரை இரவு
மரணம் வரை நட்பு
வாழ்க்கை என்பது நிச்சயம் அற்றது
மறுஜென்மம் என்பது நம்பிக்கை அற்றது
உண்மை நட்பு உத்தரவாதம் அற்றது
இம்மையினால் நட்பை இறுக்கப் பற்றுவோம்
வாழ்க நண்பர்கள்!
வளர்க நட்பு!



12

# கனவில் மட்டும் பேசிவிட்டுச் செல்லும் விம்பங்கள்

- பிறேமினி பிரதாபன்
- அகிலா சுதேந்திரன்
- இ.சசிதரன் (சுதா)
- க.சதுர்முகன்
- யு.சிவன்ராஜ்



எம் பயணங்களில் உங்கள் பாதச்சுவட்டுத் தடயங்கள்
எம் நினைவுகளில் நீங்கள் விட்டுச்சென்ற கடைசி விம்பங்கள்
எம் காதுகளில் நீங்கள் பேசிய வார்த்தைகளின் ஒலி அலைகள்
எம் இதயத்தில் உங்களின் பசுமையான நினைவுகள்
எம் கற்பனையில் இள நகைக்கு மைபூசிய விம்பங்கள்

மனதில் தோன்றி மரணம் வரை வர
அப்போதைய விம்பம் இப்போதும் நம்கையில்
நிழல் படமாக நிற்க
கண்களில் தோன்றிய விம்பம் கடைசிக் கண்ணீரோடு முடிந்தது.

13

# மகாஜன அன்னையின் விழுமியப் பண்புகளும் கலைநிகழ்வுகளும்

## 1978 – 1990 காலப்பகுதிகளில் ஓர் கண்ணோட்டம்

**- வற்சலா கருணாகரன்**

எழில்மிகு லங்காதீவில் வடக்கில் இருக்கும் யாழ்ப்பாண நகரின் வயலும் வயல் சார்ந்த நிலமாக காணப்படும் தெல்லியூர் கிராமத்தில் புகழ்பூத்த பாடசாலையாக விளங்குது எமது மகாஜனாக் கல்லூரி.

எனது தவப்பயனாய் அக்கல்லூரியில் கல்வி கற்கும் பாக்கியம் 1977 - 1991ஆம் காலப்பகுதியில் கிடைக்கப் பெற்றது. அன்று தொட்டு இன்று வரை கல்வி, ஒழுக்கம், விளையாட்டு, கலைப் பண்பாடுகள் ஒருங்கே வளர்க்கப்படும் களமாக இக்கல்லூரி திகழ்கின்றது.

இக் கல்லூரியில் ஆலய வழிபாட்டுடன் கூடிய கலை நிகழ்வுகளும் விழுமியப் பண்புகளும் இசை ஆசிரியர்களாலும், சைவசமய பாட ஆசிரியர்களாலும் பெரிதும் வளர்க்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இசையானது ஒரு புனிதமான கலையாகும். ஆதிகாலத்தில் மொழி மூலம் மனிதன் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி வந்தான். இனிமையான ஒலிகளில் இருந்து கேட்கப்பட்ட நாதமானது இசை என வெளிப்படுத்தினர்.

வேதகாலத்தில் இருந்தே இசை தோற்றம் பெற்று வந்துள்ளன. அதாவது சாமகானம் இசைக்கப்பட்டதிலிருந்து இசையானது தோற்றம் பெற்றுள்ளது. நிஸ்ரி என்ற மூன்று ஸ்வரங்களை இசையில் முதன் முதலில் தோற்றம் பெற்ற ஸ்வரங்களாகும். இவ்வாறே இசை படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

நாயன்மார்களின் தேவாரத்திருமுறைகள் ஆலயங்களிலும், விழாக்களிலும் ஒலிக்கத் தொடங்கின. தேவாரப் பதிகங்களில் அடங்கும் தேவாரம், திருவாசகம், திருவங்கமாலை, சிவபுராணம், திருவெம்பாவை போன்ற பதிகங்களும் தோத்திரப் பாடல்களான அருணகிரிநாதரின் திருப்புகழும் குமரகுருபரரின் சகலகலாவல்லிமாலை போன்றவை ஆலயங்களில் பாடப்பட்டு வளர்க்கப்பட்டன. இதற்கமைய எமது கல்லூரியிலும் பண்ணிசை, திருப்புகழ், சகலகலாவல்லிமாலை முதலானவை இசைக்கப்பட்டு மாணவச் செல்வங்களின் சமய நம்பிக்கை, ஈடுபாடு வளர்க்கப்பட்டுள்ளன. சைவசமய பாட ஆசிரியரான திரு. விநாயகரட்னம் ஆசிரியர் அவர்கள் இவற்றுக்குப் பொறுப்பாசிரியராக இருந்தார். சைவசமயப் பண்ணிசைப் போட்டிகளையும் திறம்பட நடாத்தி பள்ளிச் சிறார்களின் சைவசமயப்

பண்புகளையும், பண்ணோடு பாடும் திறனையும், வளர்ப்பதற்கு இவர் அயராது உழைத்து வந்தார்.

இக்காலகட்டத்தில் பண்ணிசைப் பாடம் தோத்திரப் பாடல்களைப் பாடவும் திறம்பட மாணவர்கள் இசைப்பதற்கும் பயிற்றுவித்த இசை ஆசிரியர்கள் செல்வி. நாகம்மா ஆசிரியையும், திரு.திலகேஸ்வரன் ஆசிரியரும் இவர்களின் பின் வந்த திருமதி. வடிவாம்பிகை ஆசிரியையும் குறிப்பிடத்தக்கவர்களாவர். மேலும் இக்காலப்பகுதியில் திருவங்கமாலை என்ற தேவாரப் பாடலை மாணவர்கள் பண்ணோடு இசைப்பதற்கு நெறிப்படுத்தி காலைப் பிரார்த்தனையில் தினமும் மாணவர் குழுக்கள் ஒலிபெருக்கியில் பாடுவதற்கு வழிகாட்டினார்கள். மாணவர்கள் கோயில் பூசைக்குரிய முதலாவது மணி ஒலித்தபின் திருவங்கமாலை பாட ஆரம்பித்து மாணவர்கள் கோயிலை சென்றடைந்து முடியும் போது அப்பதிகம் நிறைவடையும். அதனைத் தொடர்ந்து பிரார்த்தனை முடி வடைந்ததும் தேவார புராணம் இசைக்கப்பட்டு மாணவர்கள் வகுப்பறைகளுக்குச் செல்வார் கள். இது போன்று பாடசாலை முடிவடையும் போதும் தேவாரபுராணம் இசைக்கப்படும். அந்தவகையில் இசையில் ஆர்வமுள்ள மாணவர்கள் பாடுவார்கள். அந்த ஒரு காலத்தை நினைவுபடுத்தும் போது இன்றும் அவை எமது காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன.

இவற்றை விட கோலம் போடுதல், தோரணம் கட்டுதல் போன்ற பலவித செயற்பாடுகளும் நிகழ்வதற்கு எமது ஆசிரியர்கள் பெருந்துணை புரிந்தார்கள். மேலும் கீரிமலைச் சிவன் கோவில், திருக்கேதீஸ்வரம் போன்ற ஆலயங்களில் திருவிழாக்களின் போது பண்ணிசை பாடுதல், இசைப்பாடல் பாடுதல், திருப்புகழ் பாடுதல் போன்ற நிகழ்வுகளில் மாணர்கள் பங்குபற்றுவார்கள். மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய உற்சவத்தில் எமது பாடசாலைக்கென்று ஒரு பூஜை கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வேளைகளிலும் மாணவர்கள் எல்லோரும் தமிழ் கலாசார விழுமியப் பண்புகளுக்கேற்ப ஆடையணிந்து அத்திருவிழாவில் கலந்து கொள்வர். அன்றைய தினத்திலும் மாணவர்கள் பண்ணிசை, திருப்புகழ் போன்றவற்றைப் பாடுவதற்கு நெறிபடுத்தி, நிகழ்வுகளை நிகழ்த்துவதற்கு பாடசாலையின் இசை ஆசிரியர்கள் பெரிதும் பங்களிப்புச் செய்தனர்.

பாடசாலையில் நடைபெறும் நவராத்திரி விழா, பரிசளிப்பு விழா உள்ளிட்ட கலை நிகழ்வுகள் அனைத்திற்கும் இசைக்குழுக்களைத் தயார்படுத்தி மேடையேற்றுவதில் செல்வி நாகம்மா இசை ஆசிரியை பெரிதும் பங்காற்றி வந்தார். இக்காலகட்டத்தினை நினைவுபடுத்தும் போது கலாசாரப் பண்பாட்டிற்கேற்ப உடையணிந்து சிகை அலங்காரம் செய்து மேடையேறிய அந்த நாட்கள் மீண்டும் வராதா என்ற ஏக்கம் மனதைத் தொட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படியாக எமது கல்லூரித் தாய் விழுமியப் பண்புகளையும், சமய ஒழுகலாறுகளையும் வளர்த்து வந்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இவற்றுக்கெல்லாம் காரணம் எம்மை வழிப்படுத்திச் சென்றது ஆசான்களே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தவகையில் பாரம்பரிய கலாசாரமாக மிளிர்ந்து விளங்கிய மகாஜனாக் கல்லூரிக்குரிய விழுமியங்கள் பேணப்பட வேண்டும். அன்று போல் இன்றும் சிறப்புடன் விளங்க வேண்டும். இவற்றினை வளர்த்து எமது மண்ணையும் கல்லூரித் தாயையும் போற்றி எமது எதிர்கால சமூகம் நல்நிலைக்கு வளர்த்துச் செல்ல வேண்டிய கட்டுப்பாடு எமது பாடசாலையின் இன்றைய சமூகத்திற்குரியதே என்பதில் ஐயமில்லை.

**"வாழ்க கல்லூரி கலைவளம் மிளிர ஜெயசுப மாதா"**

14

# எனது வாழ்வில் மகாஜனா

- க. நித்தியானந்தன்

எனது பெயர் திரு. கணபதிப்பிள்ளை நித்தியானந்தன் நான் இப்போது யா/கோண்டாவில் றோ.க.த.க பாடசாலையின் அதிபர். அதற்கு முன் யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி, மு/மல்லாவி மத்திய கல்லூரி, மு/முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம் எனும் பாடசாலைகளில் வரலாறு, பொருளியல் ஆசிரியராகவும் சரசாலை, மட்டுவில், மீசாலை, குருநகர், நாவற்குழி, இருபாலை ஆகிய இடங்களில் உள்ள தனியார் கல்வி நிலையங்களில் வரலாறு ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளேன்.

இவற்றுக்கெல்லாம் அடித்தளமிட்டுக் கொடுத்தது நான் க.பொ.த (உ/த) கல்வி கற்ற யாஃ தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிதான். நான் பிறந்த இடம். மட்டுவில் வடக்கு கிராமம். க.பொ.த (சா/த) வரை கல்வி கற்றது யா/ மட்டுவில் கமலாசினி வித்தியாலயம். 1987 இன் க.பொ.த (சா/த)ப் பரீட்சை 1988 ஏப்பிரலில் விசேட பரீட்சையாக வடக்குக் கிழக்கில் நடைபெற்றது. இப் பரீட்சையில் சித்தி பெற்று க.பொ.த (உ/த) கற்கத் தகுதி பெற்றேன். அப்போது சாவகச்சேரி பிரதேசத்தில் இருந்த அரசியல், இராணுவ சூழ்நிலை காரணமாக அங்கு உயர்தரம் கற்க முடியவில்லை.

அப்போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையில் கடமைபுரிந்த எனது தமையனார் சுப்பிரமணியம் தெல்லிப்பழை விழிசிட்டியில் திருமணம் செய்து வசித்த காரணத்தினால் நானும் அவர்களுடன் தங்கிக் கல்வி கற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது!

எனது தமையனார் வீட்டுக்கு அருகில் இருந்த கல்லூரியில் இணைவதற்கு எனது அண்ணியார் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார். யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இணைந்து கலைப்பிரிவில் கல்வி கற்க வாய்ப்பு ஏற்பட்டது. 1990 கல்வியாண்டில் நான்கு பாடங்கள் தெரிவு செய்ய வேண்டியிருந்தது. இதில் பொருளியல், அளவையியல், இந்து நாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களுடன் ஆங்கிலமும் கற்றோம்.

யா/தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் கலைத்துறை E II வகுப்பில் பொருளியல் பாடத்தினை திருமதி.இ. கெங்காதரன் ஆசிரியரும், அளவையியலை செல்வி. செல்லப்பா ஆசிரியரும், இந்து நாகரிகத்தினை திருமதி. . செல்வராசா ஆசிரியரும் தமிழ்ப் பாடத்தினை எமது வகுப்பாசிரியராக இருந்த திரு.செ. இராஜகுலேந்திரன் அவர்களும் கற்பித்தனர். ஆங்கிலப் பாடத்தினை திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்கள் கற்பித்தார். கல்லூரிப் படிப்பிற்கு மேலாக மகாஜனக் கல்லூரிக்கு முன் இருந்த யுனைடெட் கல்வி நிலையத்தில் அனைத்து பாடங்களையும் கற்றோம். இதில் பொருளியல் ஆசிரியர் திரு. சண், அளவையியல் ஆசிரியர் திரு. கேசவன் அவர்கள் முதன்மையானவர்கள்.

1990 காலத்தில் எமது மகாஜனக் கல்லூரி இடம்பெயர்ந்து இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அப்போது யா/பண்டத்தரிப்பு மகிளிர் கல்லூரியில் பிற்பகல் 1.00 மணிக்கு பாடசாலை ஆரம்பித்து 4.30 மணிவரை நடைபெற்றது. இந்த இக்கட்டான காலகட்டத்தில் திரு. நாகராஜா அவர்கள் அதிபராகக் கடமையாற்றினார். இவ்வாறு இடம்பெயர்ந்த சூழ்நிலையில் நாம் சித்தங்கேணியில் இருந்த பாரதி கல்வி நிலையம், நாவலர் கல்வி நிலையம் என்பவற்றில் கல்லூரி நண்பர்களுடன் கல்வி கற்று பரீட்சைக்குத் தோற்றினோம். எமது உயர்தரப் பரீட்சையும் 1990 இல் நடைபெறாமல் 1991 இல் விசேட பரீட்சையாக யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அமைக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் நடைபெற்றது.

நான் மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்ற முதல் ஆண்டில் ஜெயரத்தினம் இல்லத்தில் இணைக்கப்பட்டிருந்தேன். எமது கல்லூரிக் காலத்தில் ஒரு முறை மட்டும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது. ஜெயரத்தினம் இல்லத்தின் கலை, கலாசாரப் பிரிவுக்கும் தலைவனாக இருந்தேன். ஆயினும் அப்போது இருந்த சூழ்நிலைகள் காரணமாக நிகழ்வுகளை நடாத்த முடியவில்லை. ஆனாலும் உயர்தர மாணவர் மன்றத்தால் வருடாந்த ஒன்றுகூடல் சிறப்பாக நடாத்தப்பட்டது. இக்காலகட்டத்தில் யாஃ வேம்படி மகளிர் கல்லூரியின் ஒன்று கூடல் நிகழ்விற்கு நானும் நண்பன் புனிதனும் கல்லூரிப் பிரதிநிதிகளாகச் சென்று கலந்து கொண்டோம். எனது வாழ்வில் இவை நல்ல அனுபவங்களைப் பெற்றுத் தந்தன.

மகாஜனாக் கல்லூரியில் நான் கலைப் பிரிவில் இணைந்த காலத்தில் கல்லூரிச் சூழல் புதிய இடமாக இருந்தது. இதனால் எனது அண்ணியின் உறவினரான சுரேஸ்குமார் எனது வகுப்பு நண்பனாக மாறினார். இது உண்மையில் ஒரு சுவராஸ்சியமான விடயமாகும். கல்லூரியில் இணைந்த காலத்தில் கலைப் பிரிவில் இரண்டு பிரிவுகள் EI,EII என இருந்தன. எனக்கு EI இற்கு அனுமதிச் சீட்டு வழங்கப்பட்டது. ஆனாலும் நண்பன் சுரேஸ் EII இல் இருந்த காரணத்தால் அனுமதிச் சீட்டில் EII என மாற்றி வகுப்பில் இணைந்து கொண்டேன்.

உயர்தர வகுப்பறையில் பொருளியலும் தமிழும் விருப்பத்துக்குரிய பாடமாக இருந்தமை யால் இவை இரண்டையும் பல்கலைக் கழகத்தில் சிறப்புப் பாடமாகக் கற்க வாய்ப்பு ஏற்பட்டது. இறுதியில் பொருளியல் சிறப்புக் கலைமாணிப் பட்டம் பெற்று பட்டதாரியாக வெளிவர மகாஜனா அன்னை உதவினாள்.

மகாஜனாக் கல்லூரியில் உயர்தர மாணவனாக இருந்த காலத்தில் சுரேஸ்குமார் முதல் நண்பனாக இருந்தார். இதனால் அவரின் நண்பர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டு அவர்களும் எனது நண்பர்கள் ஆனார்கள். இதில் PM, குகநாதன், புனிதன், கண்ணன், ஆகியோருடன் பின்னாளில் முரளி, பங்கயச் செல்வன், சிவசிவா, இலங்கநாதன், சசிதரன், சுதாகரன், சிவன்ராஜ், சீராளன் என கலைத்துறைக்கு அப்பால் கணித, விஞ்ஞான, வர்த்தகத்துறைசார் நண்பர்களும் இணைந்து கொண்டனர்.

நான் மகாஜனாவில் உயர்தரம் கற்ற காலத்தில் மதிய உணவு வழங்கப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வகை உணவாக இருக்கும். கடலை, கௌப்பி, பயறு, பாண், குழைசாதம் என அவை அமைந்தன. நண்பன் சுரேஸ்குமார் வகுப்பு மாணவ தலைவனாக இருந்த காரணத்தால் அவருடன் இடைவேளையின்போது உணவு எடுக்கச் செல்வது வழமை. எடுத்து வரும் உணவு அனைவருக்கும் பகிர்ந்தளிக்கும் வாய்ப்பு ஏற்படும். இதனால் வகுப்பு மாணவர்கள் அனைவருடனும் நல்லுறவுடன் இருக்க வாய்ப்பு ஏற்பட்டது. உணவு

பகிர்ந்தளிக்கும்போது பற்றாக்குறையான சந்தர்ப்பங்களதும் உண்டு. பலவேளைகளில் மீதமான உணவை நிறைய உண்ட அனுபவங்களும் உண்டு. இவ்வுணவு வழங்கும் செயற்பாடு பின்னாளில் உணவு முத்திரையாக மாறி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் உலர் உணவுப் பொருட்களாகக் கொள்வனவு செய்யும் நிலை ஏற்பட்டது.

மகாஜனாவில் கல்வி கற்ற காலத்தில் நண்பர்களாக இருந்த கலை, வணிக, விஞ்ஞான, கணிதத்துறை நண்பர்கள் நாட்டுச் சூழ்நிலை காரணமாக புலம்பெயர்ந்து பல்வேறு தேசங்களிலும் குடும்பங்களுடன் வாழ்கின்றார்கள். அவர்களும் 87 O/L, 90 A/L நண்பர்கள் சாசனம் என்னும் நலன்புரி அமைப்பினை உருவாக்கி, பல்வேறு நலத்திட்டங்களை திட்டமிட்டு ஒழுங்கமைத்து செயற்படுத்தி வருகின்றார்கள். நலிவுற்ற நண்பர்களின் பொருளாதார விருத்தி, அவர்களின் பிள்ளைகளின் கல்வி விருத்திக்கான உதவி, மகாஜனா அன்னையில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் என அது தொடர்கின்றது.

இவற்றுக்கெல்லாம் மேலாக தனிப்பட்ட விடுமுறையில் தாயகம் வரும் நண்பர்கள் தமது உள்ளூர் நண்பர்களை அழைத்து, விருந்தளித்து கூடிக் குலாவுவது வழக்கம். இதனை விட நண்பர்களின் வீடுகளில் நடைபெறும் மங்கல, அமங்கல நிகழ்வுகளில் கலந்து கொண்டு தமது அன்பை வெளிப்படுத்தும் செயற்பாடுகளை சாசனம் மேற்கொண்டு வருகின்றது. இவற்றை விட சாசனம் என்னும் அமைப்புக்கு அப்பாலும் தனிப்பட்ட முறையில் பல்வேறு உதவிகளை வெளிநாட்டில் வதியும் நண்பர்கள் மேற்கொண்டு வருவது பலருக்குத் தெரியாது. இவ்வகையில் லண்டனில் உள்ள நண்பன் முரளிதரன் எனது வீடு அமைக்கும் போது உதவியதும் அவ்வப்பொழுது தாயகம் வரும்போது உதவுவதும் வழமை. இவ்வாறு நண்பர்கள் பலர் ஏனையவர்களுக்கு உதவுவது தெல்லிப்பழை மகாஜனாவின் பெருமையன்றோ.

இவ்வகையில் தான் நண்பர்களின் 50 வது வயதில் தாயக, புலம்பெயர் உறவுகள் இணையும் ஒன்று கூடல் நிகழ்வு 2021 இல் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த போதும் நாட்டிலும் உலகிலும் ஏற்பட்ட “கொரோனா” பெருந்தொற்றுக் காரணமாகத் தடைப்பட்டுப் போனது யாவரும் அறிந்ததே. ஆயினும் நண்பர்களின் விடாமுயற்சி 2023 இவ்வருடம் சிறப்பாக நடைபெறுவது மகிழ்வுக்குரியதே.

நான் மகாஜனாவில் உயர்தரத்தில் கல்வி கற்ற காலத்தில் சாதாரண தரத்தில் கல்வி கற்ற “ராசாத்தி” என அழைக்கப்படும் து.கேதீஸ்வரியை மனம் விரும்பி இல்லாள் ஆக்கி இல்லறத்தில் இருப்பது மகாஜனாவால் கிடைத்த மற்றொரு கொடையாகும். இதன் பேறாய் சஞ்சீவன் எனும் ஏக புதல்வன் கிடைத்துள்ளான்.

**வாழ்க மகாஜன மாதா!**



15

# கடந்து போன பாடசாலை நினைவுகள்

- யு.சிவன்றாஜ்



இன்று போல் உள்ளது நாம் பாடசாலை சென்ற முதல் நாள்...................... இற்றைக்கு 46 ஆண்டுகளுக்கு முன், திரும்பிப் பார்க்கின்றேன். அம்மாவின் ஒரு கையில் தடி மறு கையில் என்பிடி, பள்ளி செல்ல மறுக்கும் என் கண்ணில் கண்ணீர், கையில் சிலேற், பென்சில். அம்மா தந்த அந்த 50 சதத்தின் பெறுமதி....... கறுவா இனிப்பும், பொரி உருண்டையும்........... நண்பனுடன் பகிரும் போது அவன் கொண்டுவந்த பல்லி முட்டை இனிப்பும், புளுட்டோ ரொபியும்.................. அவ்வளவு பிரியமாய்................ படிப்பதற்காய் தாய் செய்த தியாகம்......... சாப்பாட்டிலும் விளையாட்டிலும் எமக்கிருந்த பிரியம், நினைவுகள் இன்றும் பசுமையாய் மனதில் ...............

சிறு வயதில் அழுகையுடன் பாடசாலை செல்ல மறுத்த எமக்கு இன்று செல்ல மனம் ஏங்குகிறது.............

உட்செல்ல முன் அனுமதி பெறவேண்டிய நிலை............. ஏனோ மனம் இன்று ஏங்கித் தவிக்கிறது.

பின்வந்த விடலைப் பருவம் ஏனோ புரியவில்லை கலவன் பாடசாலை என்பதால், சனி, ஞாயிறு கூட விட்டு வைக்காத பாடசாலை வரவு........... போராட்டம் ஒருபுறம்............. பொழுது போக்காய் சென்றோமோ? என்று ஒரு ஐயம்..........

குறும்பு செய்யும் வயதில், எமது வகுப்பு நண்பிகள் மட்டுமா தாக்கப்பட்டனர், முன் பின் இருந்த வகுப்பு நண்பிகளும் கூட எமது றபர்பான்ட் அடிக்கு தப்பவில்லை.......... இதற்காகவெல்லாம் அதிபர் அறையின் உள்ளே செல்ல அனுமதி திணிக்கப்பட்டு, தண்டனை

பரிசளிக்கப்பட்ட நினைவுகள்........... இன்று மனம் சொல்கின்றது. “மகிழ்வோடு சென்று, மகிழ்வாய்க் கற்று, அக்கறையோடு செயற்பட்டு, இந்நிலை விட்டு இன்னும் மேலெழுந் திருக்கலாம்” என்று, எனினும் “அது ஒரு நிலாக்காலம். தினம் தினம் மனதினில் உலாப்போகும்” என்ற பாடல் தான் மனதில் வந்து போகின்றது.

அன்றைய நாட்கள் பட்டாம் பூச்சியாய் எந்த ஒரு கவலையும், பொறுப்பும், ஏக்கமும் இன்றி கடந்த நாட்கள்........ விளையாட்டுப் போட்டி என்றால் போதும்............. எங்கள் அலப்பறை தாங்காது. பள்ளி............ வகுப்பறைக் கதிரை மேசைகள் ஓய்வெடுக்கும். நாங்கள் வெய்யில் அளப்போம்.......

விதம் விதமான ஆடைகளுடன் மைதானத்தில்............ ஆம் கலவன் பாடசாலை என்பதால் காட்டிய படங்கள் பல........ நான் இருந்த இல்லத்தில் தான் அழகிய பெண்களும்????............ இருந்தார்கள்.......... ஆனால்..... என்னவோ நான் இருக்கும்வரை ஒரு தடவை கூட எனது இல்லம் தன்நிலை மாறாமல் கடைக்குட்டியாகவே செல்லமாக இருந்து விட்டது.............

ஒவ்வொரு நண்பர்களுக்கும், பல்கலைக்கழகம் செல்லாமல், பட்டமளிப்பில்லாமல் கொடுத்த பட்டங்கள் எத்தனை....... பெயர் மறந்தாலும் பெற்ற பட்டப் பெயர் இன்னும் அழியாமல்................ அனைத்தும் அன்பாய்க் கழிந்த நாட்கள், போட்டிகள் இருந்தன. பொறாமைகள் இல்லை. பணக்காரன், ஏழை என்னும் வித்தியாசம் இருருந்ததில்லை. இன்பமாய்க் கை கோர்த்து பாடசாலையில் வலம் வந்த நாட்கள்....... நீண்டு செல்லும் கடந்துபோன நினைவுகள்........... மீண்டும் ஒருமுறை பள்ளிக்கு செல்ல கிடைத்த சந்தர்ப்பத்தை இனிமையாக கழிக்க ஏக்கத்துடன் எதிர்பார்த்து இரை மீட்கத் துடிக்கும் நாட்களுக்காய் ஆவலுடன்................



16




# மலரும் பசுமையான நினைவுகள்

- புவனேஸ்வரி கிருஷ்ணலிங்கம்

வயலும் வயல் சார்ந்த நிலமுமாகிய மருத நிலமாய் வளம் கொழிக்கும் அம்பனைக் கிராமத்தில் கல்விப் பெருவிருட்சமாக விளங்கும் மகாஜனக் கல்லூரி: சிவப்பு நிற மதிலின் ஒரு பக்கமும் ஒரே மாதிரியான வளைவைக் கொண்ட இரு நுழைவாயில்கள்: இரு மருங்கிலும் வானுயர ஓங்கி வளர்ந்த அசோக மரங்கள: நடுவில் கோபுரத்துடன் பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபம்: அதன் முன்னால் குறோட்டன்கள் சூழ அமைக்கப்பட்ட முற்றம்: அந்த முற்றத்தில் அழகிய விசிறி வாழை: அதன் முன்னால் கம்பீரமான பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் சிலை: மைதானத்தில் சுற்றி அமைக்கப்பட்ட வகுப்பறைகள்: மைதானத்தின் தென்கிழக்குத் மூலையில் அசைந்து ஆடிவிழும் மெல்லிய நாவல் நிறப் பூக்கள் என்று எமது பாடசாலையின் அழகினை வர்ணித்துக்கொண்டே போகலாம்.

நான் கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று, ஆறாம் ஆண்டிற்கான அனுமதிப் பரீட்சையில் சித்தி எய்தி, 1982ம் ஆண்டு முதன்முதலாக மகாஜன மாதாவில் காலடிவைத்தேன். 1990ம் ஆண்டு ஆகஸ்ட் வரையான ஒன்பது வருடங்கள் மகாஜனாவில் அனுபவித்த அழகிய காலங்கள். ஆறாம் ஆண்டு வகுப்பறை தகரக் கொட்டில் வகுப்பறை. இருந்ததில் மிகவும் பழமையான வகுப்பு. முன்பக்கம் கோணப்புளி மரங்கள் வரிசையாக வளர்க்கப்பட்டு நேர்த்தியாக வெட்டப்பட்டிருந்தன. நீண்ட கொட்டகையில் வகுப்புக்கள் சிறுசிறு தடுப்புக்கள் வைத்து A, B, C, D, E எனப் பிரிக்கப்பட்டிருந்தன.

பாடசாலை ஆரம்பிக்க முதல்மணி அடித்ததும் வகுப்பறைக்கு முன்னே ஆண்கள், பெண்கள் தனித்தனியாக இரு வரிசைகளில் இருவர், இருவராக சோடி போட்டு நிற்பர்.

இரண்டாவது மணியுடன் மைதானத்தின் கிழக்குப் பக்கத்தால் பெண்களும் மேற்குப் பக்கத்தால் ஆண்களும் வரிசையாக திருவங்கமாலை ஒலிக்க சிவகாமி சமேத ஆனந்த நடராஜப்பெருமான் கோவிலுக்குச் செல்லும் காட்சிக்கு ஏதும் மிகையாகாது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விசேடமாக சிவபுராணமும், விசேட நாட்களில் பஞ்சபுராணமும் பாடப்படும். வாரத்தில் இரு தினங்கள் காலை நேர உடற்பயிற்சி இறைவழிபாட்டைத் தொடர்ந்து நடைபெறும்.

நாம் 1987 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தியெய்தி, கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் என்று துறைகளைத் தெரிவுசெய்து உயர்தரப் பிரிவு மாணவர்களாய் கால் பதித்தோம். அதில் நான் வர்த்தகத் துறையை தெரிவு செய்தேன். எமது வர்த்தக வகுப்பு பலாமரத்தடி வகுப்பென்று அழைக்கப்படும். ஜெயரத்தினம் மண்டபத்திற்கு அருகாமையில் சிற்றுண்டிச் சாலைக்கு நேர் எதிரே அமைந்திருந்த மண்ணிற வகுப்பில் ஆரம்பமானது. இந்த வகுப்பு அரைச்சுவர் கொண்டே அமைக்கப்பட்ட மண்டபம். வகுப்பில் இருந்தவாறே பாடசாலையின் பெரும் பகுதியை பார்க்கக் கூடியவாறு அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இன்னுமொரு முக்கியமான விடயம். மணி அடித்தல் பாடசாலை ஆரம்பம். முடிவு பாடமாற்றம், இடைவேளை என்பவற்றை அறிவிப்பதற்கான மணி உயர்தர வர்த்தகப் பிரிவு வகுப்பின் தாழ்வாரத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் பழைய தண்டவாளத்துண்டில் இரும்புக் கம்பியால் அடிக்கும் ஒலி இன்றும் எம்மனதில் பசுமையாகப் பதித்துள்ளது.

உனை நீ அறி என்ற எமது பாடசாலையின் மகுட வாசகம் எமை அறிய வைத்தது. இன்று வட புலத்து கிராமத்து விளக்காக எமது கல்லூரி கல்வியில் மட்டுமன்றி விளையாட்டு, இயல், இசை, நாடகம் போன்ற அனைத்து இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாகாணம் தாண்டி தேசிய நிலையிலும் சாதனை புரிந்து வருவது எம்மை எல்லாம் பெருமை கொள்ளச் செய்கின்றது. விஞ்ஞானிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், விளையாட்டு வீரர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் எனப் பல்தகைமையான ஆளுமையாளர்களை உருவாக்கி சர்வதேச அரங்கில் தடம் பதித்து வருகின்றமை சிறப்பம்சம். பாடசாலை வாழ்க்கையை நிறைவு செய்து முப்பத்து மூன்று வருடங்கள் கழித்து மீண்டும் சந்திக்கும் நிகழ்வு எம்மை எல்லாம் காலச் சக்கரத்தில் ஏற்றி மீண்டும் பள்ளிப் பருவத்தில் கூட்டிப் போகும் நிகழ்வாக அமைகின்றது. என்றுமே எமக்கு வழிகாட்டிய ஆசிரியர்களையும் கண்டு வணங்கி நம்மை உருவாக்கிய மகாஜன மாதாவில் நாங்கள் வாழ்ந்த அழகிய நினைவுகளை பகிர்ந்து கொள்வதில் மகிழ்வடைகின்றேன்.

**வெல்க மகாஜன மாதா**




# உன் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிகள்

- கருணாவதி தேவதாசன்

மகாஜனத் தாயே!
மாதவம் செய்தோம்
உன்மடி தவழ
பாவலர் துரையப்பா பிள்ளையின்
துடிப்பான சிந்தையில்
துளிர் விட்ட தாயே!
துடிப்போடு நடை போடும்
சர்வ வல்லமை கொண்ட
கல்விக் கோயிலாய் உனைக்கண்டு
கனிவோடு கரம் குவித்தோம்.

அறப்பணியாம் ஆசிரியப் பணியை
உன்மடியில் ஆற்றியோர்
அற்புதப்பணி செய்து – உனை
ஆழமாய் நேசித்தார்
அறிவுப் பசி தீர்க்க
ஆதாரம் நீயென்று
ஆவலாய் ஓடி வந்த
அன்பான மாணவரும்
மாசறு கலைகளெல்லாம்
மாண்புடனே கற்றுயர்ந்தார்
ஆதலால் .............................
மாட்சிமை பொருந்திய
மகாஜனத் தாயே!
உன்மடி தவழ்ந்து
கற்றோர் மட்டுமன்றி
கற்பித்தோரும்கூட
மாபெரும் பேறுபெற்றோர்
நீ வளர்த்த விதத்தால்
தனித்திறமைகள் பல கொண்டு
துலங்குதல் கண்டோம்.

மகஜனா தாயே !
கண்ணியமாய் உனைக்கடந்த

கல்வித்துறையினர்
கால ஓட்டத்தில்
கலைந்து சென்ற போதிலும்
மகாஜனா எனும் நாமம்
மகிமையுறப் போற்றுகின்றார்.
கடல் கடந்து சென்றாலும்
கலைக் கோயில் நீ உயர
கனதியான பணிகள் பல
களிப்புடனே ஆற்றகின்றார்
மகாஜனா மாதாவே!
நீ விதைத்த விதைகளெல்லாம்
இன்று திக்கெட்டும் திறமையுடன்
பல்துறை விருட்சங்களாய்
ஓதி உரைத்திட
நீதி செழித்திட
உறுபிணி தீர்த்திட
கவினுறு கட்டடங்கள்
விண்ணேகி உயர்ந்திட என்று
வித்தனம் காட்டி நிற்பர்
உன் விரிநிழல் தன்னில் வென்றோர்
அத்தனை துறைகளிலும்
சாதனைத் தேரினில்
ஏறியே வெல்க!
முத்திரை பதித்து வென்ற
முதுபெரும் சொத்தாம் எங்கள்
தெல்லியூர் மண்ணின் பெரும்புகழ்
மகாஜனாக் கல்வித் தாயே!

சிவகாமி சமேத
ஆனந்த நடராஜரின்
அற்புத அருளும்
ஆசியும் துணைநிற்க
துடிப்போடு நாம் பயின்ற
காலங்கள் மறந்திடுமா?
தொண்ணூறில் நான் பயின்ற
பசுமையான நினைவுகளை
வீணையாய் மீட்டிடும் வேளை
வியப்பினால் விரியும் உள்ளம்
ஆளுமை மிகக் கொண்ட
அறிவுக் களஞ்சியமாய்
மகாஜனா முத்துக்கள்
அத்தனையும் முன்னேற
முனைப்புடன் செயற்பட்ட
அர்ப்பணிப்பை அடிமனதில்
ஆழமாய் கொண்ட
அன்பான அதிபரை
வரமாய் நாம் கொண்டோம்
வரமான அதிபருடன்
உரமிட்டு எமை வளர்க்க
உண்மையாய் உழைத்தார்கள்

உணர்வோடு கலந்த எங்கள்
உத்தம ஆசான்கள்.
மறைந்தும் மறையாமல்
மனதில் நிற்பவரும்
அறிவுப் பசி தீர்க்க
அற்புதமாய் உழைத்த
வெற்றிக் களிப்பில்
வேதமாய் வாழ்பவரும்
ஓதி உணர்ந்ததை
மனதில் ஆழத்தில் அன்று
விதைகளாய் விதைத்தால் நன்று
விருட்சமாய் வென்றோம் இன்று.

பொறாமைகள் ஏதுமின்றி
இல்லங்கள் ஐந்தும்
இனிதாய் போட்டியின்
ஆழமான பதிவுகளும்
மனப் புத்தகத்தில் ஆழமாய்
ஏனைய இல்லங்கள்
அறிந்திடா வண்ணம்
பரம இரகசியம் போல்
மறைத்தும் ஒளித்தும்!
துரையப்பா இல்லத்தில்
இல்லத்தை அலங்கரித்த
நினைவுகள் அனைத்தும்
நிழலாய் தொடர்கின்றன
துரையப்பா இல்லம் வெல்கவென்று
கூச்சலிட்ட பொழுதுகளும்
பொக்கிஷமாய் மனதினிலே.

பரிசளிப்பு விழாவின் பேருரைகள்
பார்த்தும் கேட்டும் இரசித்தும்
நம் தோழர்கள் சேர்ந்து
நயம்படச் செய்த கலைகளும்
எமக்குக்கிடைத்திட்ட பரிசுப்பொதியில்
எவ்வளவு பணம் என
உடைத்துப் பார்த்து
பெருமிதம் அடைந்ததுவும்
மகிமை நிறை எங்கள் மகாஜனத் தாயே!
மங்காத உன் பொன்னடிக்குப்
பல்லாயிரம் போற்றிகள்

வேர் கொண்ட தமிழினத்தைப்
போர் கொன்ற வேளையில்
உயிர் கொண்டு பலரும்
ஊர் விட்டு ஓடினோம்
ஆனாலும்…………………
தடம் மாறிப் போகவில்லை
மகாஜனத் தாயே!
மாண்போடு நீ தந்த
போதனைகள் அத்தனையும்
அடி மனதில் சுமந்து சென்றோம்.

ஆதரவு தேடிய
மகாஜன முத்துக்கள்
முன்னேற்றம் காண்பதற்காய்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
அடைக்கலம் தந்திடவே
நாங்கள் உயர்தரப் பரீட்சைதனை
ஆசான்கள் உந்துதலில்
ஆர்வமாய் எழுதிவென்றோம்
மகாஜனாத் தாயே!
உன்மடியில் நாங்கள்
மாண்புறவே வளர்ந்ததால்
அன்றெமக்குஅடைக்கலம் தந்தவரை
இன்றும்நன்றியுடன் நினைக்கின்றோம்

மகாஜனாக் கல்வித் தாயே!
உன்னில் இருந்து சிதறிய
பல்லாயிரம் பொறிகளில்
நானுமோர் புள்ளியாய்……..
நீந்த ஆளுமை
அசையாமல் பற்றி
மாண்புறு மாணவம்
செதுக்கிடும் சிற்பியாய்
மாதவம் செய்து பெற்ற
மாண்புயர் எங்கள்
மகாஜனா தாயே!
உன்பொன்னடிக்குப்
பல்லாயிரம் போற்றிகள்
சாற்றினோம் ஏற்றினோம்
சாதனைத் தேரினில்
ஏறியே வெல்க!

# 18

# எமது பள்ளிக்கூடப் பொன்மொழியின் ("Know thyself") தமிழ் இலக்கியப் பின்புலம்

- வி.இ.குகநாதன்

எமது பள்ளியின் பொன்மொழியான ஹ முழெற வாலளநடக ஹ உன்னை நீயே அறி என்பது கிரேக்க அறிஞரான சாக்கிரட்டிசின் கருத்து என்பது தெரிந்ததே. ஆனால் இதே கோட்பாட்டினை அறிவுறுத்தும் சில தமிழ் இலக்கியப் பாடல்களையும் நாம் காணலாம். அத்தகைய பாடல் களையும் இக் கோட்பாட்டின் முதன்மையினையுமே இப்பதிவில் பார்க்கப் போகின்றோம்.

**" தன்னை அறியத் தனக்குஒரு கேடு இல்லை;**<br>
**தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்**<br>
**தன்னை அறியும் அறிவை அறிந்தபின்**<br>
**தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே". : திருமந்திரம் 2355.**

தன்னை அறியாதவன் எதை அறிந்தாலும் பயனில்லை, தன்னை அறிந்தால் தன்னிலேயே இறைவனைக் கூட அறிந்து கொள்ளலாம், வெளியில் தேட வேண்டியது இல்லை எனப் பாடுகின்றார் திருமூலர். இதை விட "உன்னை நீயே அறி" என்ற கோட்பாட்டினை எவ்வாறு விளக்க முடியும்! மேலுமொரு திருமந்திரப் பாடலிலும் இதே கருத்தினை மூலன் (திருமூலர்) கூறுகின்றார்.

**"தானே தனக்குப் பகைவனும் நட்டானும்**<br>
**தானே தனக்கு மறுமையும் இம்மையும்**<br>
**தானேதான் செய்த வினைப்பயன் துய்த்தலால்**<br>
**தானே தனக்குக் கரி"**

நல்ல நண்பனாகவும், எதிரியாகவும் தனக்குத் தான் தான் முதலில் இருப்பான் எனச் சொல்வதுடன், இன்பத்தினையும் துன்பத்தினையும் கூட அதிகளவில் தனக்குத் தானே தான் தரமுடியும் எனவும் சொல்லப்படுகின்றது. இது "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்ற கணியன் பூங்குன்றனின் கருத்தின் வழிவந்தது.

அப்பரும் "உன்னை நீயே அறி" என்ற கருத்தில் பாடுகின்றார்.

**" தன்னில் தன்னை அறியும் தலைமகன்**<br>
**தன்னில் தன்னை அறியில் தலைப்படும்**<br>
**தன்னில் தன்னை அறிவிலன் ஆயிடில்**<br>
**தன்னில் தன்னையும் சார்தற்கு அரியனே" : திருநாவுக்கரசர்**

இதே பொருளில் வள்ளலாரும் ஒரு அருமையான பாடலினைப் பாடியுள்ளார்.

**“தன்னை அறிந்து இன்பம் உற வெண்ணிலாவே,**
**ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே” : வள்ளலார்**

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளில் “வலியறிதல்” என்ற அதிகாரத்தின் கீழ் வரும் ஒவ்வொரு குறளுமே இதே கோட்பாட்டினை ஏதோ ஒரு வகையில் சொல்வனவே. காட்டாக ஒரு குறளினைப் பார்ப்போம்.

**“வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்**
**துணைவலியும் தூக்கிச் செயல்”. : குறள் 471**

[ Let {one} weigh well the strength of the deed (he purposes to do), his own strength, the strength of his enemy, and the strength of the allies (of both) , and then let him act ]

மேலுள்ள குறள் சொல்வது ஏறக்குறைய இன்றைய முகாமைக் கற்கைநெறியில் ஒரு கூறாகக் கற்பிக்கப்படும் ‘SWOT analysis’ எனும் ஆய்வு சொல்வதனையே! / SWOT (Strengths, Weaknesses, Opportunities, and Threats) analysis is a framework used to evaluate a company's competitive position and to develop strategic planning}. இதன் படி (SWOT இன் படி) ஒரு நிறுவனம் தனது வலிமையினையும் தனக்கான வாய்ப்புகளையும் பயன்படுத்துவதன் மூலம் தனது வலிமையின்மைகளையும், அச்சுறுத்தல்களையும் முறியடித்து போட்டியாளர்களை வெல்ல வேண்டும், அதற்காக முதலில் அவற்றினை இனங்காண வேண்டும் எனக் கூறப்படுகின்றது. இந்த நுட்பத்தினை நிறுவனங்கள் மட்டுமன்றித் தனியாள் ஒருவர் கூடத் தனது சொந்த முன்னேற்றத்துக்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதனையே பின்வரும் திரைப்படப் பாடல் வரி எமக்குச் சொல்லுகின்றது.

**“உன்னை அறிந்தால் நீ உன்னை அறிந்தால்**
**உலகத்தில் போராடலாம்**
**உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்**
**தலை வணங்காமல் நீ வாழலாம்”.**

**“ தன்னை தானும் அறிந்து கொன்டு**
**ஊருக்கும் சொல்பவர்கள்**
**தலைவர்கள் ஆவதில்லையா”.**

**‘உன்னை நீயே அறி’** எப்பேர்ப்பட்ட பொன்மொழியினைக் கொண்ட பள்ளியில் படித்துள்ளோம் என எண்ண வியப்பாகவுள்ளது!



19

# நினைவுகளை மீட்போம்

- தவராணி திருக்கேதீஸ்வரச்செல்வன்

அம்பனை வயற்காற்றில் மிதக்கும்
அடிகொழிக்கும் மகாஜனா
எங்ஙனம் சொல்வேன்
எப்படி இயம்புவேன்
எழுத்தாணியும் என்னோடு
எழுதெனச் சமர் புரிகின்றது

அம்பனையின் முதல் சொத்தாய்
கல்விக் கூடத்தின் முதல் வித்தாய்
வரலாற்றின் முதல் தடமாய்
வசந்தமாய் வீசுகின்ற கல்லூரி

என்னென்றும் மங்காத புகழுடன்
எதிர் நீச்சல் போட்டு
செறிப்பான சாதனைகள் பல நாட்டி
வானுயர ஓங்கி நிற்கின்ற கல்லூரி

நான் உட்கார்ந்த நாற்காலி
என்பதைச் சூடு காணாமல்
உள்ளுக்குள் அழுகின்றது.
ஒருகணம் நினைவுகளை மீட்கின்றேன்
அன்னையின் தாள் பணிந்தே
உயர்தர வகுப்பிலேயே
முத்து முத்தாய் கற்பித்து
அனைவரும் போற்றும்
அறநெறி வாழ்ந்திட
மனங்களை ஒன்றாக்கி
மானிதம் தந்த கல்லூரி அன்னயே!
தொடர்கின்றேன் இருவரிகள்

உயர்தரம் கற்கவென
ஊக்கமுடன் வந்தேனே
உயர்வுடனே அனுமதித்தார்
நாகராஜா அதிபருமே
அணி அணியாய் மாணவர்கள்
கண்டே அதிசயித்தேன்
ஆசான்கள் அடிதொழுதேன்
அன்புடனே அரவணைத்தார்.

மாமர நிழலிலே நின்று
வேடிக்கையாய் பண்பாட்டோடு
விழுமியங்களும் சமத்துவமும்
சொல்லியே வழிப்படுத்திய
எம் ஆசான் விநாயகரத்தினமே!
உங்கள் நாமம் போற்றுகின்றோம்.

செல்வராசா ஆசிரியரும்
செவிக்கினிய அமுதமென
இந்து நாகரிகம் மொழியவே
செவி சாய்த்துக் கேட்டே மகிழ்ந்திட்டோம்

பத்மநாதன் ஆசிரியரும்
மனைப் பொருளியல் தன்னை
பக்குவமாய் பயிற்றுவித்து
பாசமுடன் நேசித்தார்.

பண்போடு போற்றுவித்தோம்
இராஜபுலேந்திரன் ஆசானே
இன்னமுதாம் தமிழை

ஊட்டியே வளர்த்திட்டார்
தான் பணிந்தே போற்றுகின்றோம்.
செல்லப்பா ஆசிரியரும்
செல்லமாக அரவணைத்தே
அளவையியல் பாடத்தை
ஆழமாகத் தர்க்கித்தே
கற்பிக்கவல்லவர்
அவர் பாதம் போற்றுகின்றோம்

ஏணியாய் ஆசான்கள்
எம்மையெல்லாம் உயரவைக்க
தோணியாய் நின்று நிதம்
வெற்றிக்கு வழிகாட்டிய மகாஜனத்தாயே
எம்மை வாழ வைத்தாய் - உனை
நாளும் போற்றுகின்றோம்.

தொண்ணூறின் சரித்திரம் சொல்லி
துவண்டு விடத் தயாரில்லை நாம்
மனங்களில் ஒன்றாகி மார்தட்டி
எழுவோம் இன்றே
கை கோர்த்து ஒன்றாய்
நினைவுகளை மீட்போம்
அணிதிரண்டு ஒன்றாய்
எழுவோம் வாரீர்! வாரீர்!



20

# அறிவினை மேம்படுத்தல்

- மிருணாளினி ஜீவேஷ்வரா ரூபன்

### சிறப்பான கற்பித்தல் மற்றும் தரமான கல்வியின் கூறுகள்

சிறந்த ஆசிரியர்கள் தரமான கல்விக்கு உத்தரவாதமளிக்கும் சிறப்பான பண்புகளைத் தன்னகத்தே கொண்டுள்ளதோடு மாணவர்களுக்குத் தேவையான உதவி, ஆதரவினை வழங்குவதிலும் ஒருபொழுதும் பின்நிற்பதேயில்லை. அத்தோடு மாணவர்கள் அவரவர் துறைகளில் வெற்றியடைவதற்கும், அவர்களின் முழுத் திறனைப் பயன்படுத்தி மென்மேலும் சிறப்புறுவதற்குமான சூழலை உருவாக்குவதிலும் முன்னின்று அயராது உழைக்கின்றார்கள்.

சிறந்த ஆசிரியர்கள் தாங்கள் கற்பிக்கும் பாடங்களில் மிகுந்த ஆர்வத்தோடும், மாணவர்களோடு அவர்களின் அறிவைப் பகிர்ந்து கொள்வதில் இதயசுத்தியுடன் கூடிய அர்ப்பணிப்பான செயற்பாட்டோடும், தங்கள் பாடப்பரப்பினைப் பற்றிய ஆழமான புரிதலினையும் கொண்டு மிளிர்வதோடல்லாமல், தொடர்ச்சியாகத் தங்கள் பாடத்தினைப் பற்றிய சிறப்புத்திறமையை மென்மேலும் அதன் எல்லைகளுக்கப்பால் விரிவுபடுத்த முயற்சி செய்து கொண்டிருப்பதில் வல்லுனர்களாகவும் திகழ்கின்றார்கள். இந்த ஆர்வமும், அவர்களின் தனித்துறைச் சிறப்பறிவுத்திறமும் மாணவர்களுக்கு நல் ஊக்கியாகத் தொழிற்படுவதோடு கற்றல் மீதான ஆர்வத்தினையும் ஒருங்கே தூண்டுவதற்கு நல் ஏதுவாக அமைகின்றது.

சிறந்த ஆசிரியர்கள் என்போர் மேலான அறிவூட்டும் தொடர்பாளர்கள் சிக்கலான கருத்துக்களை மாணவர்கள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கும் திறன் கொண்டவர்கள். மாணவர்கள் மீது தீவிர ஆர்வத்தோடு கவனம் செலுத்தி, அவர்கள் கேள்விகள் கேட்பதனை ஊக்குவிக்கின்றார்கள். மேலும் ஒவ்வொரு மாணவரும் மதிக்கப்பட்டவராகவும், கவனிக்கப்பட்டவராகவும் உணர்ந்துகொள்ளக்கூடிய திறந்த, அனைத்தையும் உள்ளடக்கிய சிறந்த வகுப்பறை சூழலை உருவாக்குவதிலும் முன்னின்று உழைக்கின்றார்கள் .

சிறந்த ஆசிரியர்கள் பொறுமையின் இருப்பிடமாகவும், மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் திறன் படைத்தவர்களாகவும் உள்ளனர். ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட பலங்கள், பலவீனங்கள், கற்றல் பாணிகள் உள்ளன என்பதை அவர்கள் நன்கே அறிந்து வைத்திருக்கின்றார்கள். மாணவர்களைத் தனித்தனியாக அறிந்து கொள்ளவும், அவர்களின் கற்பித்தல் அணுகுமுறைகளை அதற்கேற்றாற்போல வடிவமைக்கவும், ஒவ்வொரு மாணவரும் வெற்றி பெறுவதனை உறுதி செய்யவும், முடிந்தால் மாணவருக்கு தனிப்பட்டரீதியில் ஆதரவினை வழங்குவதற்கும், தங்கள் நேரத்தினைப் பயன்படுத்துவதில் அவர்கள் ஒருபொழுதும் பின்நின்றதேயில்லை.

சிறந்த கல்வி முறையின் முக்கிய அம்சங்களாக பல்வேறு விதமான கற்பித்தல் முறைகள், வளங்களின் கூட்டான ஒருங்கிணைப்பு என்பவை உள்ளடக்கியதாகக் கருதப்படுகிறது. விரிவுரைகள், விவாதங்கள், கலந்துரையாடல்கள், செயற்பாடுகள், ஒப்படைகள், குழுத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவற்றின் கூட்டான கலவையைப் பயன்படுத்தி பல்வேறு கற்றல் பாணிகளைப் பூர்த்தி செய்வதை மையமாகக் கொண்டு இது முழுமையாக வடிவமைக்கப்பட்டுச் செயற்படுகின்றது. இவ்வகையான ஒழுங்கமைப்புமுறையானது மாணவர்களிடையே விமர்சன சிந்தனை, சிக்கலைத் தீர்க்கும் திறன், படைப்பாற்றல், ஒத்துழைப்பை நல்குதல் போன்றவற்றினை ஊக்குவிக்கிறது.

சிறந்த கல்வி முறைகள் மாணவரின் "முழுமையான வளர்ச்சிக்கு" உறுதுணை புரிகின்றன் கல்வித் திறன்களை மட்டுமல்ல, நற்பண்பு, உணர்வுசார் நுண்ணறிவு, சமூகத் திறன்களை வளர்ப்பதன் முக்கியத்துவத்தினை அடையாளம் கண்டு முழுமையாக அங்கீகரிக்கின்றன. அத்தோடு மாணவர்களுக்குப் பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள், தலைமைத்துவ ஆற்றலை வளர்ப்பது, சமூக சேவை மற்றும் தனிப்பட்ட வளர்ச்சி, முயற்சிகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்களை ஒருங்கே வழங்குவதிலும் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுக்கு இடையேயான புரிந்துணர்வுடன் கூடிய ஒத்துழைப்பானது பயன்மிக்க மேலான கல்வி முறையின் இன்றியமையாத சிறப்பு அம்சமாக விளங்குகின்றது. பெற்றோருடனான இடையறாத தொடர்பாடலை, அவர்களின் ஈடுபாட்டினை ஊக்குவிப்பதோடு, தங்கள் பிள்ளைகளின் கல்வியில் தீவிர ஆர்வமுள்ள பங்காளிகளாக அவர்கள் இருப்பதனைச் சிறந்த பள்ளிகள் உறுதிசெய்கின்றன. இவ்வகையான ஒத்துழைப்பு ஒரு பலமான அத்திவாரத்தினை அமைக்கும் ஆதரவுத் தளத்தினை உருவாக்க உதவுவதோடு மாணவர்களின் கல்வி மற்றும் தனிப்பட்ட வளர்ச்சிக்கான பகிரப்பட்ட பொறுப்புணர்வு உணர்வினையும் மேம்படுத்த உதவுகின்றது.

சிறந்த ஆசிரியர்கள் ஆர்வம், சிறப்பறிவுத்திறமை, சிறந்த தகவல் தொடர்புத் திறன், பொறுமை, மாணவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் திறன் போன்ற பண்புகளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றனர். சிறந்த கல்வி முறையானது பல்வேறு கற்பித்தல் முறைகளை ஒருங்கிணைத்து, மாணவரின் முழுமையான வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிப்பதோடு, ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்களுக்கிடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதிலும் முன்னிலை வகிப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது.

மேற்கூறிய பண்புகளை உள்ளடக்கி, எதிர்காலத்திற்குப் பயனளிக்கக் கூடிய கல்வி நடைமுறைகளைச் செயற்படுத்துவதன் மூலம், மாணவர்களுக்கு அவர்களின் கல்விப் பயணத்திலும், அதற்கு அப்பாலும் வெற்றிபெறத் தேவையான உதவி, ஆதரவுடன் கூடிய தரமான கல்வியினை பள்ளிகள் வழங்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து முழுமூச்சோடு செயற்படுவோமாக.

21

# Know Thyself

**- Mrinalini Jeeweshwara Ruban**

As I sit down to write for our esteemed school book "Kuviyam", I find myself drawn to a concept that has shaped my personal growth and journey "Know Thyself". Our school motto holds within it the power to transform our lives and guide us towards a path of self-discovery.

Reflecting upon my own experiences, I have come to realize the profound impact that understanding oneself has on how we navigate life. Taking the time to truly know who we are as individuals, embracing our strengths and weaknesses, and acknowledging our passions and dislikes, opens doors to a more fulfilling existence.

Let's take a look at how this motto can be a valuable guiding light in our lives. Sages, academics, philosophers and mystics down the ages from diverse cultures have all arrived at this motto from their independent research and inquiry. Let's explore together the insight they've imparted to us from their inquiry.

"Know thyself, be thyself, Love Thyself"

Love yourself, for if you do not have love of self, you cannot have a love for others.

Love for oneself is the foundation upon which we build relationships with others. Embracing self-love allows us to love and appreciate those around us fully.

Be self always that is all you need to know.

Sigmund Freud once said, "Being entirely honest with oneself is a good exercise." In our journey of self-discovery, honesty becomes a powerful tool to uncover our deepest truths and embrace personal growth.

To thine own self be true - an oft quoted maxim from the bible - Being true to oneself is a fundamental principle that resonates universally. From ancient texts to modern philosophies, the message to be authentic and genuine echoes throughout human history. Let us hold on to this wisdom and always remain true to ourselves.

"Know thyself" is a phrase that carries a deep meaning, both from a spiritual and a philosophical point of view. At its core, this phrase is a call to look inward, to engage in self-reflection and introspection, and to gain a deeper understanding of who we truly are.

**From a spiritual point of view,** "Know thyself" speaks to the idea that every human being has a divine spark within them. We are all part of a greater whole, connected to the divine source of creation. In order to fully realize this connection, it is essential that we know ourselves, for in that self-knowledge lies the key to unlocking our true potential and living our best lives.

"Know thyself" means that one should embark on a journey of self-discovery and realization to understand and connect with their true inner self, their own divine essence, and their soul.

Knowing oneself is considered as a key to spiritual growth and enlightenment. It's through this process, one can realize their purpose and connection with the universe and the divine.

Through meditation, prayer, and other spiritual practices, we can learn to access this inner wisdom, to gain a deeper understanding of ourselves and our place in the world. By doing so, we can connect with the divine spark within us, and find a greater sense of purpose and fulfillment in our lives.

In the words of the Persian poet Rumi, "Who looks outside, dreams; who looks inside, awakes." He means that to awaken our inner selves, we need to turn our attention inward. Our journey towards spiritual enlightenment requires looking inward, reflecting on our thoughts, emotions and beliefs and achieving a state of self-awareness.

Another great quote reinforcing the philosophical and spiritual importance of knowing oneself would be, "The more you know yourself, the more clarity there is. Self-knowledge has no end." –Jiddu Krishnamurti

**From a philosophical point of view**, the phrase "Know thyself" means understanding our own nature, and the human condition concerning our thoughts, emotions, and actions. We need to comprehend our strengths and weaknesses, our motivations, and our biases. This notion of self- awareness is considered to be the foundation of wisdom.

"Know thyself" is a call to engage in self-discovery and introspection, in order to gain greater clarity and understanding of one's own beliefs, values, and motivations. Self-knowledge forms the foundation for personal growth, allowing individuals to make meaningful changes in their lives and to live in alignment with their true selves.

At its core, the phrase "Know thyself" encourages us to look beyond the surface and to delve deeper into our own inner workings. It is a call to engage in self-reflection, to question our assumptions and beliefs, and to expand our understanding of ourselves and the world around us.

Socrates believed that true wisdom lies in acknowledging our ignorance, reminding us that "The only true wisdom is in knowing you know nothing." Aristotle emphasized that self-knowledge is the beginning of all wisdom. Through self-reflection and introspection, we expand our understanding of ourselves and the world, stepping onto a path of growth, joy, and fulfillment.

In conclusion, "Know thyself" is a powerful phrase that speaks to the importance of self-discovery and introspection, both from a spiritual and philosophical point of view. By delving deeper into our own inner workings, we can gain greater clarity and insight into ourselves and our place in the world, unlocking our true potential for growth, joy, and fulfillment.

To know thyself is to know the universe.

"There is nothing noble in being superior to your fellow man; true nobility is being superior to your former self."
- Ernest Hemingway

Honesty is one of the greatest values in this world. To be honest shows you are a person with integrity. And that brings with it an inner core of strength which will be reflected in your outer aura.

I love this quote by Ralph Waldo Emerson! "In a world where societal pressures and expectations can be overwhelming, staying true to oneself is a great accomplishment indeed. It takes courage and strength to resist the urge to conform and embrace one's unique identity, quirks, and all. It's important to remember that our differences are what make us special and interesting. We should never be ashamed of who we are or try to change ourselves to fit in. Instead, we should celebrate our individuality and use it as a source of empowerment to achieve our goals and aspirations."

I wish you all an excellent journey of self-knowledge and self-healing. Our beloved alma mater knew what she was doing when she came up with that motto for us.

May her wisdom continue to school us in life.

May her teachings continue to guide us towards a life lived with authenticity, purpose, and love.

May we always strive to know ourselves, for in knowing ourselves, we come to know the universe.

Wishing you all very well.

22

# வகுப்பறைக்கு வெளியே கல்வி அனுபவங்களை மேம்படுத்துதல்

- மிருணாளினி ஜீவேஷ்வரா ரூபன்

**அறிமுகம்**

கல்வியானது பாரம்பரிய வகுப்பறையின் எல்லைகளுக்கு அப்பால் நீண்டு பரந்து விரிந்துள்ளது. முறையான அறிவுறுத்தல் என்பது கற்றலில் மிக முக்கிய பங்கினை வகிப்பதோடு, கல்வி அனுபவங்களை வகுப்பறைக்கு அப்பால் வளப்படுத்தி மாணவர்களின் முழுமையான வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதோடு அவர்களை நவீன உலகின் சவால் களுக்கு / சிக்கல்களுக்குத் துணிச்சலோடு முகம் கொடுத்துத் தயார்படுத்துவதற்கும் சமதளத் தில் மிகமுக்கிய வகிபாகத்தினைக் கொண்டு மிளிர்கின்றது. இக்கட்டுரையில், வகுப்பறைக்கு அப்பால் சென்று கல்வி அனுபவங்களை மேம்படுத்தும் எண்ணற்ற வாய்ப்புக்கள் நன்மை களை ஆராய்வது தொடர்பான கருத்துக்களைச் சற்றே விரிவாக ஆராய்வோம்.

**1. அனுபவக் கற்றல்**

கல்வி அனுபவங்களை மேம்படுத்துவது மாணவர்களுக்கு அனுபவமிக்க கற்றலுக்கான சிறந்த வாய்ப்புகளை அளிப்பதற்கு நல் ஏதுவாக அமைகின்றது, இது மாணவர்களுக்கு யதார்த்த உலகச் சூழ்நிலைகளை எதிர்கொள்வது, நடைமுறைச் செயற்பாடுகளைக் கையாளும் திறன்களை வளர்ப்பது, துரிதமாகச் செயற்படும் சூழல்களில் தீவிரமான பங்களிப்பினை ஈடுபாட்டுடன் நல்குவது போன்றவற்றிற்கு உறுதுணை புரிகின்றது. கல்விச் சுற்றுலா சார்ந்த பயணங்கள், வெளிப்புறக் கல்வித் திட்டங்கள், பயிற்சிகள் அல்லது சமூக சேவைத் திட்டங்கள் போன்றவற்றின் மூலம் அனுபவக் கற்றலில் ஈடுபடும் மாணவர்கள் தங்கள் அறிவினை பன்முகமாக வளப்படுத்தி வாழ்வில் முன்னேறுகின்றார்கள். அத்தோடு இவை விமர்சன ரீதியான சிந்தனைத் திறனை வளர்த்துக் கொள்வதற்கும், நடைமுறை அனுபவத்தினைப் பெற்றுக்கொள்வதற்கும் வழி சமைத்துக் கொடுக்கின்றன. இதன் தொடர்ச்சி யாகப் பல்வேறு கருத்துக்கள் தொடர்பான ஆழமான புரிதலினை மாணவர்களுக்குள்ளே வளர்ப்பதன் மூலம் சிக்கல்களுக்குத் தீர்வு காண்பதற்கும் ஊக்கமளிக்கின்றன. அத்தோடு பாட நூல் கற்றலுக்கு அப்பாற்பட்ட திறன்களையும் ஒருங்கே வளர்ப்பதில் பேருதவி புரிகின்றன.

**2. அனுபவக் கற்றல், சமூக ஈடுபாடு**

கல்வி அனுபவங்களை மேம்படுத்தும் செயன்முறையானது பெரும்பாலும் சேவையூ டான அனுபவக் கற்றல், சமூக ஈடுபாட்டுடன் கூடிய முயற்சிகளின் உள்ளடங்கலாகத்

தொழிற்படுகின்றது. இவ்வாறான நடவடிக்கைகள் மாணவர்களை அவர்களது உள்ளூர் சமூகங்களுடன் உயிர்ப்போடு இணைப்பதன் மூலம் அர்த்தமுள்ள பங்களிப்பினை வழங்குவதற்கும், சமூகப் பொறுப்புணர்வு விழிப்புணர்வினை வளர்ப்பதற்குமான வாய்ப்புகளை வழங்குவதற்கும் உதவி புரிகின்றன. சேவையூடான கற்றல் திட்டங்கள் அர்த்தமுள்ள சமூகத் தேவை களை நிவர்த்தி செய்வதில் பெரும் பங்காற்றுகின்றன. மாணவர்கள் அவர்களின் உச்ச திறன்களைப் பயன்படுத்தவும், மற்றவர்களுடன் ஒத்துழைக்கவும், நேர்முகமான தாக்கத்தினை ஏற்படுத்தவும் அனுமதிக்கின்றன. சமூக ஈடுபாட்டின் மூலம், மாணவர்கள் பச்சாத்தாபம், தலைமைத்துவத் திறன்கள், குடிமைப் பொறுப்புடன் கூடிய கடமை உணர்வு என்பனவற் றினை ஒருங்கே வளர்த்துக் கொள்கின்றார்கள்.

### 3. தொழில் முனைவோர், புத்தாக்கத் திட்டங்கள்

மாணவர்களின் தொழில் முனைவோர் மனப்பான்மையானது கல்வி அனுபவங்களை மேம்படுத்துவதனூடாக புதிய கண்டுபிடிப்புக்களை உருவாக்குவதற்கு உதவி செய்யும். தொழில் முனைவோர் திட்டங்கள், கண்டுபிடிப்புகளினூடு எதிர்கொள்ளும் சவால்கள், பரிசோதனைக்கூடங்கள் ஆகியவை மாணவர்களை ஆக்கப்பூர்வமாகச் சிந்திப்பதற்கும், எதிர்கால வாய்ப்புக்களை இலகுவாக அடையாளம் காண்பதற்கும், சிக்கல்களுக்கான தீர்வு காணும் திறன்களை வளர்ப்பதற்கும் பெரியளவில் ஊக்கமளித்து உதவி புரிகின்றன. மாணவர்கள் தங்கள் எண்ணத்தில், கற்பனையில் உதிப்பவற்றினை நன்கு ஆராய்வதற்கும், சவால்களை, ஆபத்துக்களை எதிர்கொள்வதற்கும், தோல்விகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதற்குமான சிறந்த தளத்தை வழங்குவதன் மூலம், இந்தத் திட்டங்கள் தொழில் முனைவோர் மனப்பான்மை, தொய்விலிருந்து உடனேயே மீண்டெழும் மனத்தின் விரி திறன், சூழலுக்கேற்ப மாறும் தன்மை, நெகிழ்வுத்திறன் ஆகியனவற்றினை அவர்களுக் குள்ளே ஆழமாக வளர்ப்பதில் பேருதவி புரிகின்றன.

### 4. கலை, விளையாட்டு, பாடநெறிக்கு அப்பாற்பட்ட செயற்பாடுகள்

கலை, விளையாட்டு, பாடநெறி சாராத செயற்பாடுகளில் மாணவரின் பங்களிப்பானது படைப்பாற்றலை வளர்ப்பதோடு கல்வியினையும் வளப்படுத்த உதவி செய்கின்றது. அத்தோடு மாணவரின் உடல்நலனை, அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களையும் ஒருங்கே மேம்படுத்த உதவுகின்றது. இசை, காட்சிக் கலை, நாடகம், விளையாட்டுக் குழுக்கள், கழகங்கள், மன்றங்கள், பாடநெறி சாராத செயற்பாடுகளில் ஈடுபடுவது சுய – வெளிப்படுத்தல், குழுப்பணி, ஒழுக்கம், நேர மேலாண்மைக்கான பண்புகளை மாணவருள்ளே வளர்ப்பதற்கு உதவி புரிகின்றது. இவ்வகையான அனுபவங்கள் மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச் சியை மேம்படுத்துவதோடு அவர்களின் ஆர்வங்களைத் தூண்டி கல்வியில் சமநிலையான அணுகுமுறையினைப் பேணி அதன்படி நடப்பதற்கும் ஊக்கமளிக்கின்றன.

### 5. தொழில்நுட்பம் சார்ந்த கற்றல்

கற்றல் வாய்ப்புக்களை விரிவுபடுத்த மாணவர் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் செயற்பாடானது கல்வி அனுபவங்களை மேலும் மேம்படுத்த உதவி புரிகின்றது. இணையவழி நிகழ்நிலைக் கற்கைகள், மெய்நிகர் கூட்டு / இணைந்த ஒத்துழைப்புகள், எண்முறை (Digital) வளங்கள் என்பவை மாணவர்களை வகுப்பறையின் எல்லைக்கு அப்பால் கல்வியின் உள்ளடக்கத்தினை அணுக அனுமதிக்கும் சிறந்த செயற்பாடுகளாக

அமைகின்றன. தொழில்நுட்பம் மாணவர்களை உலகின் பல்வேறுபட்ட புவியியல் எல்லை களோடு ஊடாடச் செய்து நிபுணர்களுடன் இணைப்பதோடு மட்டுமல்லாது அனைவரோடு இணைந்து செயலாற்றும் திட்டங்களையும் எளிதாக்குவதற்கு உதவி புரிகின்றது. அத்தோடு இது எண்முறை (Digital) கல்வியறிவு திறன்களுடன் மாணவர்களைத் தயார்ப்படுத்தி எண்முறை (Digital) இயக்க உந்துதல் உலகிற்கும் அவர்களை இட்டுச் செல்ல வழி சமைத்துக் கொடுக்கின்றது.

### 6. வழிகாட்டுதல், வலையமைப்பாக்கம்

கல்வி அனுபவங்களை மேம்படுத்தும் செயற்பாடானது வழிகாட்டுதல், வலையமைப் பாக்கம் போன்ற வாய்ப்புக்களை உள்ளடக்கியதாகத் தொழிற்படுகின்றது. நம்பிக்கைக்குரிய அறிவுரையாளர் என்போர் வழிகாட்டுதல், ஆதரவு அளித்தல், மதிப்புவாய்ந்த விவேகமான அறிவுடன் கூடிய கருத்துக்கள் என்பவற்றினை பகிர்ந்து கொள்வதில், வழாங்குவதில் அனை வருக்கும் முன்மாதிரியாகத் திகழ்வதோடு மட்டுமன்றி மாணவர்களுக்குப் பொருத்தமான கல்வி, பயிற்சி, தொழில் பாதைகளில் செல்ல வழிகாட்டுவதற்கும் உதவி புரிகின்றார்கள். வலையமைப்பாக்க நிகழ்வுகள், மாநாடுகள், தொழில்துறை இணைப்புக்கள் ஆகியன மாணவர்களுக்குத் தொழில் வல்லுநர்களுடன் தொடர்பினை ஏற்படுத்தித் தருவதற்கும், பல்வேறு துறைகளில் சிறந்த திறந்த வெளிப்பாட்டினைப் பெறுவதற்கும், தொழில் வாய்ப்பு களைப் பற்றிய ஆழமான புரிதலை வளர்ப்பதற்கும் உதவி புரிகின்றன. வழிகாட்டுதல், வலை யமைப்பாக்கம் என்பன முக்கியமான தனிப்பட்ட திறன்களை வளர்ப்பதோடு, தொழில்முறை வலையமைப்புக்களை விரிவுபடுத்த உதவுவதனூடாக மாணவர்களின் எதிர்கால வாய்ப்பு களுக்கு உத்தரவாதமளித்து அவர்களின் வாழ்வினை மேம்படுத்துவதில் பெரும் பங்காற்று கின்றன.

### முடிவுரை

நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் பல்துறை ஆற்றலும் திறமையும் கொண்ட நபர்களை உருவாக்குவதற்கு, வகுப்பறைக்கு வெளியே கற்கும் கல்வி அனுபவங்களை வளப்படுத்துவது மிகவும் அத்தியாவசிமானதொன்றாகக் கருதப்படுகின்றது. அனுபவக் கற்றல், கலாசார கற்றலினூடு பெற்றவற்றினை சமூகத்திற்குத் தேவைப்படும் பொழுது வழங்குதல், சேவையூடான கற்றல், தொழில் முனைவோர் திட்டங்கள், கலை, விளையாட்டு நடவடிக்கைகள், தொழில்நுட்பம் சார்ந்த கற்றல், வழிகாட்டுதல், வலையமைப்பு வாய்ப்புக்கள் என்பவற்றின் மூலம் மாணவர்கள் மதிப்பு வாய்ந்த திறன்களைப் பெற்றுக் கொள்கின்றார்கள். அத்தோடு தங்கள் எல்லைகளை விரிவுபடுத்தி வாழ்நாள் முழுவதும் கற்றல் தொடர்பான ஆழமான ஆர்வத்தினைத் தம்முள்ளே வளர்த்துக் கொள்கின்றார்கள். மாணவர்களுக்குச் சுய- அதிகாரமளிப்பதற்கும், அவர்களின் முழுத் திறனை வளர்ப்பதற்கும், நவீன உலகோடு உருமாறும் கல்விப் பயணத்தினை உருவாக்க, இந்தச் செழுமைப்படுத்தும் கல்வி அனுபவங்களை நாம் அனைவரும் விரும்பி வரவேற்று ஏனையோருக்கும் பரிந்துரை செய்து மேன்மையடைவோமாக.

கற்றல் படைப்பாற்றலைத் தருகிறது,
படைப்பாற்றல் சீரிய சிந்தனைக்கு வழிகோலுகின்றது,
சிந்தனை அறிவினை மேம்படுத்துகின்றது,
அறிவு உங்களைச் சிறந்த மனிதனாக உருமாற்றுகின்றது.

23

# School Education

**- Dr.V.Kalaichelvi**

Quoting the famous words of Nelson Mandela: "Education is the most powerful weapon which you can use to change the world." And it's true, going to school holds incredible significance in our lives. But it's not just about textbooks and grades; education shapes us in profound ways, instilling life skills, cultivating a love of learning, and nurturing integrity - qualities that contribute to personal growth and societal progress.

One of the most valuable aspects of attending school is the emphasis on teamwork and collaboration. Through group projects, extracurricular activities, and class discussions, students learn how to work together, pooling their strengths towards common goals. It's not just about learning to share ideas; it's about developing interpersonal skills like effective communication, compromise, and empathy. These skills prove vital in navigating the complexities of the modern world. Besides, the diverse school environment brings together students from various backgrounds, promoting unity and understanding among different cultures. Collaborative learning also encourages the exchange of ideas, fostering better teamwork and creative problem-solving abilities. But education is not just about what we learn in class; it's about igniting a passion for learning itself. Good educators go beyond the textbooks, inspiring students to explore beyond the boundaries of the curriculum. They encourage critical thinking and creativity, fueling a love for learning that lasts a lifetime. This intrinsic curiosity becomes a lifelong journey, propelling individuals to seek continuous personal and professional growth. After all, in a rapidly evolving world, the ability to adapt and acquire new skills is essential. Schools provide the foundation for this journey of self-improvement.

Integrity, a cornerstone of good character, is deeply embedded in the educational experience. Schools not only impart academic knowledge but also shape the very essence of our being. As we learn about ethics, morality, and the difference between right and wrong, we develop a strong moral compass. Upholding integrity becomes second nature – being honest, responsible, and accountable for our actions. These values lay the groundwork for a just and principled society, where individuals contribute positively to their community and respect the rights and dignity of others.

Yet, education is not just about gaining skills and knowledge; it's also about building treasured friendships. The camaraderie formed during school years often withstands the test of time, becoming lifelong connections. Shared experiences, challenges, and joys create bonds that endure. These cherished friendships are not just a source of emotional support but also serve as valuable networks of opportunities and resources in various aspects of life. Social connections made during school can lead to career advancements, personal growth, and overall well-being.

Education is a journey filled with unforgettable experiences and valuable insights. The classroom becomes a space for exciting discoveries, animated discussions, and impassioned debates. From memorable school trips that broaden horizons to engaging in sports and cultural events, countless memories are etched into students' hearts. These memories become milestones in their personal growth, shaping their perspectives and understanding of the world.

Moreover, schools offer a rich and diverse environment, exposing students to a plethora of interests and subjects. From literature to science, history to mathematics, students gain a wealth of knowledge that broadens their horizons and shapes their identity. Learning languages through the educational process fosters cultural exchange and understanding, promoting a sense of global harmony and cooperation.

In the current uncertainty within Sri Lanka, unique to the situation when we attended Mahajana, it is important that bright young minds are nurtured to help lead the country forward through its troubles, and enable students to help and inspire those around them. We eternally grateful to Mahajana for helping us discover our path, and giving us such beautiful, timeless memories that we will cherish throughout our life.

In conclusion, attending school holds more significance than we often realize. It is a transformative journey that equips individuals with essential life skills, ignites a love for learning, and upholds integrity. Schools provide a nurturing space where lifelong friendships are cultivated, and numerous unforgettable memories are made. Education not only enriches individuals but also lays the foundation for a better society, where mutual respect, integrity, and teamwork thrive. As we embrace the power of education, we pave the way for a brighter and more harmonious future for all.

24



# மகாஜன அன்னையின் மகத்தான வரம்

- ரதி தெய்வேந்திரன்

ஆனந்த நடேசரை
ஆனந்தமாய் வலம் வந்தே
ஆளுமை பல பெற்று
அகிலம் போற்ற வாழும்
மகாஜன அன்னை தந்த
மகத்தான செல்வங்கள் நாம்.

அன்னை மடி தவழ்ந்ததினால்
தினம் ஒரு பாடத்தை
கற்றுத் தேர்ந்திங்கே
நம் வாழ்க்கை எனும் கடலை
பக்குவமாய் நீந்துகின்றோம்.

ஒரு கூட்டுக் கிளியாக
ஒற்றுமையாய் மிளிர்ந்த காலம்
ஒரு தட்டில் உணவுண்டு
ஒரு தாய் வயிற்று உறவுகளாய்
நினைக்க நினைக்க
இனித்திடுமே மீண்டும்
மலர மனம் துடித்திடுமே.

சின்னச் சின்னக் குறும்புகள்
குளறுபடியற்ற குதூகலம்
ஆசானை அடி பணிந்தே
அறிவுக் கடலில் மிதந்து
நட்பு எனும் உறவை
ஆழ் மனதில் விதைத்த காலம்
இறைவன் தந்த இனிய வரம்
மகாஜன அன்னை தந்த
மகிழ்வான தருணங்கள்
விட்டு விலக்குதலின்றி பசை
ஒட்டுரிமையாய் இன்ப துன்பங்களை
ஒட்டு மொத்தமாய் பகிரும்
நட்பு எனும் நந்தவனம்
மலர வைத்த அன்னையே
தினம் தினம் போற்றி நிற்போம் நின்னையே.

25

# நட்போட திருநாள்

- மு.சிவதாசன்

ஐம்பது ஆயிருச்சு
பொன்விழா முடிஞ்சிருச்சு
ஆனாலும் நண்பர்கள் தான்

ஐந்தில் ஆரம்பிச்சோம்
இன்னும் முடியலையே
நம்மோட நட்புத்தான்

இது நட்போட திருநாள்தான்
புது உற்சாகம் வரும் நாள்தான்
நாம் எல்லோரும் என்நாளும்
பட்டாம் பூச்சிதான்
வா நண்பா கும்மாளம் அடிப்போமே

ஐம்பது ஆயிருச்சு
பொன்விழா முடிஞ்சிருச்சு
ஆனாலும் நண்பர்கள் தான்

ஐந்தில் ஆரம்பிச்சோம்
இன்னும் முடியலையே
நம்மோட நட்புத்தான்

எம் அன்பான நட்பு
நம் போன்ற உறவு
நாடெங்கும் பார்த்தேன் கிடையாது
அட என் ஆசை நண்பா
அன்பான தோழா
நம் போன்ற உறவு உடையாது
அட அன்பான நட்பு சாகாது
அது தப்பாக என்றும் போகாது

நாம் கூத்தாடவும் கை கோத்தாடவும்
மனம் காத்தாடி போல் ஆகுதே
ஐம்பது ஆயிருச்சு
பொன்விழா முடிஞ்சிருச்சு
ஆனாலும் நண்பர்கள் தான்

ஐந்தில் ஆரம்பிச்சோம்
இன்னும் முடியலையே
நம்மோட நட்புத்தான்

நம் உள்ளத்தில் பிறர்
வைக்கின்ற ஒரு நம்பிக்கை
ஓயாமல் இருந்தால் சந்தோஷம்தான்
நட்போட பழகி
கைரெண்டும் புடிச்சு
கொண்டாடும் சுகமும் நட்புத்தான்
இனி எல்லோரும் அன்பாக பழகுங்கடா
அதை பிரிக்காமல் வாழ வையுங்கடா
இங்கு வாழும் வரை
மண்ணில் வீழும் வரை
அதை மாத்த முடிஞ்சா நட்புத்தான்

ஐம்பது ஆயிருச்சு
பொன்விழா முடிஞ்சிருச்சு
ஆனாலும் நண்பர்கள் தான்

ஐந்தில் ஆரம்பிச்சோம்
இன்னும் முடியலையே
நம்மோட நட்புத்தான்

26

# மீண்டும் ஒருநடை பள்ளிக்கு...



- வானதி காண்டீபன்

அம்பனைக்கு முன்னால்
அடிக்கும் வயற்காற்றில்
கொப்புலுப்பிப் பூச்சொரியும்
குடைவாகை நிழல்தரும்
வரிசையாய் வான் பார்க்கும்
வளமான அசோகமரம்
முன்றலிலே விசிறிவாழை
தன்னழகைப் பறைசாற்றும்

கல்விக்கடலின் ஒரு கலங்கரை
தெல்லிப்பழையின் கலைக்கூடம் எம்
உயர்தனிக் கல்விக்கழகம்
'உனை நீ அறி'என்று
எமை நாமுணரவைத்த
ஏறு புகழ்க் கல்விக்கூடம்
மகாஜனக் கல்லூரி நாமம் – அது
நாமகள் உறைவிடம்!

நூனில மீதினில் நற்புகழொடு நாம்வாழ
நாளும் பொழுதும் நற்கல்வியொடு
கலைபலவும் பயில வைத்து
எம்மனவிருள் நீக்கிய தாய்நிலம்!
நெஞ்சில் நாளும் சுமக்கும்
எங்கள் மகாஜன மாதாவை
தகைசால் ஆசான்களை
உயிரனைய தோழர் தோழியரை
கண்டுகளிகூர...
வாருங்கள்.. ! ஒருநடை பள்ளிக்கு..

எத்தனை இன்பமான நாட்கள் அவை..
வெள்ளைச் சீருடையில்
துள்ளித்திரிந்த நாட்கள்!
ஆன்புநிறை நண்பரொடு
ஆடிப்பாடி விளையாடி
குதூகலித்திருந்த காலங்கள்...
சின்னஞ்சிறு கதைகள்பேசி
பென்னம்பெரிதாய்
மகிழ்ந்திருந்த பொழுதுகள்...
விண்ணைக்கிழித்து
முழுநிலவாய்ப் பொழிந்து
பூமியைப் பார்த்திடும்
வானத்து மதிபோல
மனதுள் கிடக்கும் பள்ளிநாட்களின்
நினைவலைகள் ஆர்ப்பரித்தெழுந்து
கொட்டிடக் காத்திருக்கும்.
நண்பர்களே!
வாருங்கள்! மீண்டும் ஒருநடை பள்ளிக்கு...

கற்பாறைகளைச் சிற்பமாய்
செதுக்குகின்ற சிற்பிபோல
நம் குறைகளைந்து நிறை
மனிதராம்படிக்கு

வாழ்வினில் நாமுயர
ஏணிகளாய்த் தமைநிறுத்தி
ஏம்முயர்வே தம்முயர்வாய்
ஏண்ணமதை வரித்திட்டு
அவையத்து நாமெல்லாம்
முந்தியிருக்க வைத்திட்ட
ஏங்கள் குருநாதர்கள்
திருப்பாதம் பணிந்து
மகிழ்ந்து கலந்துறவாடிட
நாளொன்று கனிகிறது…
நண்பர்களே!
வாருங்கள்! மீண்டும் ஒருநடை பள்ளிக்கு…

ஆறுதினங்கள் ஆறே தினங்கள்
சிட்டுக்குருவிகளாய் வானில்
சிறகடித்துப் பறந்திடுவோம்
நம் வாழ்நாளில் அவை
மறக்கவொணா நாட்களாகட்டும்
ஒவ்வொரு பொழுதும் கல்மேல் எழுத்தென
நெஞ்சில் பதியட்டும்
இன்புறு கதைகள் பேசி அன்புடன்
உறவுகள் சங்கமிக்க
நண்பர்களே!
வாருங்கள்! மீண்டும் ஒருநடை பள்ளிக்கு…



27

# எனது கல்லூரிக்கால நினைவுத்துளிகள்

- தயாளினி கமலாகரன்

நான் 1978 ஆம் ஆண்டு தைமாதம் மகாஜனாவில் 1ம் வகுப்பில் கால் பதித்தேன். அக்காலத்தில் மகாஜனாவில் அனுமதி எடுப்பதென்பது மிகவும் சிரமம். பாடசாலையை அண்மித்த பகுதியில் வசிக்கும் பிள்ளைகளுக்கே முன்னுரிமை. அப்போது நான் அம்மாவின் ஊரான பன்னாலையில் வாழ்ந்து வந்தேன். அந்நேரத்தில் பாடசாலை விண்ணப்பப்படிவத்தில் பாடசாலையில் இருந்து நாம் வாழும் ஊரின் தூரம் எழுத வேண்டும். எனவே, அது “400 சங்கிலி” என்று, சங்கலி என்ற அளவுகோலில் எழுதப்பட்டிருந்தது எனக்கு இப்போதும் ஞாபகம் இருக்கின்றது.

எனது பேரனார் V.S.C சிங்கம் அவர்கள், அவர் வாழ்ந்த காலப்பகுதியில் மகாஜனாவில் இரசாயன ஆய்வுகூடம் ஒன்றை கட்டிக் கொடுத்திருந்தார். எனவே, அந்தச் சலுகை மூலம் எனக்கு 1ஆம் வகுப்பு அனுமதி கிடைத்திருந்தது.

1978 இல் நான் பாடசாலையில் சேர்ந்த காலப்பகுதியில் அதிபராக திருவாளர் கனகசபாபதி அவர்கள் இருந்தார். அவர் எப்போதும் வெள்ளை முழுக் காற்சட்டை வெள்ளை சேட்டுடன் தான் பாடசாலைக்கு சமூகமளிப்பார். காலை, மதிய வேளைகளில் மைதானத்திலோ வகுப்பறைகளுக்கு வெளியிலோ தேவையற்று எவரும் நிற்கமாட்டார்கள். அவ்வளவு அமைதியாக இருக்கும். இந்த நினைவு அநேகமாக எனது மனக் கண்முன்னே வந்து செல்லும்.

மகாஜனாவில் எனது 1வது வகுப்பறையான 1ஆம் வகுப்பு உயிரியல் ஆய்வுகூடத்துக்கு அருகாமையாக இருந்தது. கல்லூரியில் எனது 1வது வகுப்பாசிரியை பரமேஸ்வரி ரீச்சர். (திருமதி குலசேகரம்) அவர் இப்போது எம்முடன் இல்லை. மிகவும் பண்பான ஆசிரியை. அமைதியானவரும் கூட.

அவர் 3 ஆம் வகுப்பு வரை எமது வகுப்பாசிரியராக இருந்தார். எனக்கு சிறிய வயதில் இருந்து ஆசிரியர்களை கண்டால் பயம். அதனால் விளங்காவிட்டால் கூட ஆசிரியர்களிடம் ஒரு கேள்வியும் கேட்கமாட்டேன்.

2 ஆம் வகுப்பில் முயல்குட்டி ஒன்று வரைந்து எமக்குத் தரப்பட்டது. அதனை பருத்திப் பஞ்சினால் ஒட்டி அழகுபடுத்த வேண்டும். நான் மிகவும் அழகாக பஞ்சினால் ஒட்டி அழகு படுத்த வேண்டும். நான் மிகவும் அழகாக பஞ்சினை ஒட்டி அழகுபடுத்தியிருந்தேன். அந்தநேரம் பெற்றோருக்கான ஒன்றகூடல் நடைபெற்றது. அப்போது எனது அம்மா வந்திருந்தார். அவருக்கு நான் ஒட்டிய முயல்குட்டியை காட்டி மகிழ்ச்சியடைந்தேன். அவ்வாறு எனது சகமாணவர்களும் தமது கைவேலைகளை தத்தமது பெற்றோருக்கு காட்டி மகிழ்ந்தனர்.

நான் 2 ஆம் வகுப்பில் இருந்தபோது எனக்கு பக்கத்தில் இருந்தவர் குமுதா. குமுதா தனது கொப்பிக்கு அழகான உறை போட்டுக் கொண்டு வந்திருந்தார். அது மிகவும் அழகாக இருந்ததனால் எனது மனதைக் கவர்ந்தது. குமுதாவுக்குத் தெரியாமல் அந்தக் கொப்பியை வீட்டுக்குக் கொண்டு போய்விட்டேன். பின் பயத்தினால் அடுத்த நாள் கொப்பியை திருப்பிக் கொண்டு வந்து குமுதாவிடம் கொடுத்துவிட்டேன். இச் சம்பவத்தை தற்போது குமுதாவுடன் பகிர்ந்து கொள்ள மிகவும் அவாவுடன் இருக்கின்றேன். ஆனால் அவரின் தொடர்பு கிடைக்கவில்லை.

3ஆம் வகுப்பு படித்த போது தேவகியுடன் சண்டை பிடித்து அவவுக்கு பென்சிலால் நெஞ்சில் குத்திவிட்டேன். அன்று மாலை பாடசாலை முடிவடைந்ததும் வீட்டில் நிற்காமல் தேவகியின் அருகில் உள்ள உறவினர் வீட்டில் போய் நின்றுவிட்டேன். தேவகி தனது அப்பாவுடன் வந்து எனது வீட்டில் முறைப்பாடு செய்து விட்டு பின் நான் போய் நின்ற வீட்டிற்கு வந்துவிட்டார்.

தேவகியின் அப்பா எனக்கு புத்திசொல்லி என்னைக் கண்டித்து விட்டுச் சென்றார். இச் சம்பவத்தை நான் எப்போதும் நினைத்துப் பார்ப்பதுண்டு. அச் சம்பவத்தின் பின் தேவகியுடன் நான் கதைப்பதில்லை. அதன் பின் 7ஆம் வகுப்பிலிருந்து தேவகியும் நானும் மீண்டும் நண்பர்களானோம்.

10 ஆம் வகுப்பின் ஆரம்பகாலம் வரை மகாஜனாவில் தேவகி படித்தார். அதன் பின் கொழும்பு சென்றுவிட்டார்.

4 ஆம் வகுப்பில் எனது வகுப்பாசிரியர் ரோகினி ரீச்சர். 4ஆம் வகுப்பு படிக்கும் போது காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிற்சாலை என்பவற்றுக்கு ரோகினி ரீச்சரும், தளைய சிங்கம் ரீச்சரும் சுற்றுலா கூட்டிச் சென்றார்கள். அதன்போது எடுத்த அரியதொரு புகைப்படம் தற்போது எம்மிடம் சான்றாக இருந்து எமக்கு அந்த ஞாபகத்தை மீட்டுத் தந்திருக்கின்றது.

5 ஆம் வகுப்பு வீமன் காமத்தில் இருந்து வரும் பரமேஸ்வரி ரீச்சர் வகுப்பாசிரியர். தம்பு ரீச்சரும் கொஞ்சக் காலம் எமக்கு கற்பித்ததாக ஞாபகம் இருக்கிறது. தம்பு ரீச்சர் என்றாலே எல்லோருக்கும் மிகுந்த பயம். மிகுந்த கண்டிப்பானவர். அவர் எப்போதும் வாயில் வெற்றிலை பாக்கு குதப்பிய வண்ணம் இருப்பார். எமது வகுப்புக்கு வெளியே மாமரங்கள் இருந்தன. அந்த மாமரங்களுக்குக் கீழே எம்மை வட்டமாக நிற்க வைத்து வாய்ப்பாடு கேட்பார். வாய்ப்பாடு பாடமாக்கவில்லை என்று சொன்னாலே அடி தான் விழும். அப்படி பாடமாக்கி இருந்தாலும் கூட அடி விழுமோ என்ற பயத்திலே தெரிந்தது கூட மறந்து போய்விடும். தம்பு ரீச்சரிடம் அடி வாங்காதவர்கள் இருக்க முடியாது என்று தான் நினைக்கின்றேன். தம்பு ரீச்சர்

1980 களின் காலப்பகுதியில் எமது வீட்டுக்கு அருகில் விழிசிட்டியில் வாழ்ந்து வந்தார். அந்த நேரத்தில் தம்பு ரீச்சர் இருக்கும் வீட்டுப் பக்கமே நான் போவது கிடையாது. அவ்வளவு பயம் 1990 களின் பின் அவர் முள்ளியவளையில் இருந்ததாக கேள்விப்பட்டேன். இப்போது தம்பு ரீச்சர் எம்முடன் இல்லை.

6 ஆம் வகுப்பு தகரக் கொட்டில் யுஇடீஇஊஇனுஇநு என தகரக்கொட்டில் கல்லூரியின் பின்பக்கம் இருந்த ஆண்கள் விடுதி வரை நீண்டிருக்கும். ஆண்கள்விடுதி என்ற ஒன்று இருந்தது தான் மாணவிகள் எவரும் அந்தப் பக்கம் எட்டியும் பாத்ததில்லை. வெளிமாவட்டங்களில் இருந்து வந்து ஆண்கள் விடுதியில் தங்கிப் படித்தவர்கள் அதிகம்.

6 ஆம் வகுப்பில் இருந்து 10 ஆம் வகுப்புவரை எமக்கு சமயப்பாடம் கற்பித்தவர் விநாகயரட்ணம் மாஸ்டர். அவர் எப்போதும் மேசை மேல் ஏறி இருந்து தான் எமக்கு பாட விளக்கங்கள் தருவார். சிவ நெறிக்கழக பரீட்சைகள், விவேகானந்தா பரீட்சைகள் மற்றும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலய சிவராத்திரி நிகழ்வுகள் போன்றவற்றுக்கு எம்மை தயார்படுத்தி அழைத்துச் செல்வார். விநாகயரட்ணம் மாஸ்ரர் இப்போது எம்முடன் இல்லை.

7 ஆம் வகுப்பு நடராஜர் ஆலயத்தின் வலப்புற வகுப்பறைகளிலும் 8ஆம் வகுப்பு ஆலயத்தின் இடப்புறம் அமைந்த வகுப்பறைகளிலும் அமைந்திருந்தன.

9 ஆம், 10 ஆம் வகுப்புகள் மைதானத்தின் மேற்குப் பக்கமாக அமைந்திருந்தன. அப்போது மைதானத்தின் மேற்குப்பக்க நீளமும் மாமரங்கள் வரிசையாக நின்றன. அவை எமது வகுப்பறைகளுக்கு நிழலாக அமைந்தது குறிப்பிடத்தக்கது. 10ஆம் வகுப்பு படிக்கும் காலத்தில் எமது விஞ்ஞானபாட ஆசிரியை கோகிலா மகேந்திரன் அவர்கள். அப்போது எமது கல்லூரியில் விஞ்ஞான கண்காட்சி நடைபெற்றது. நானும் கீதாவும் சேர்ந்து சிறுநீர்த் தொகுதி செயற்பாட்டு விளக்கம் செய்து பார்வையாளர்களுக்கு அதற்குரிய விளக்கத்தை சிறப்பாக விளக்கிக் காட்டியிருந்தோம். அக்கண்காட்சி முதலில் எமது பாடசாலையில் நடைபெற்று பின் அடுத்த கட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டு அதன்பின் யூனியன் கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞானக் கண்காட்சியிலும் சிறுநீர்த் தொகுதி செயற்பாட்டு விளக்கமானது விளக்கிக் காண்பிக்கப்பட்டு ஆசிரியருடைய பாராட்டையும் பெற்றோம்.

நான் உயர்தரத்தில் விஞ்ஞான பிரிவை தெரிவு செய்திருந்தேன். 11ஆம் வகுப்பு அலுவலகத்துக்கு எதிராக இருந்த வகுப்பறையிலும் அதன்பின் 12ஆம் வகுப்பு உயிரியல் ஆய்வு கூடத்திலும் நடைபெற்றது.

தாவரவியல் – அனந்தசயனன் ரீச்சர், நவரட்ணம் மாஸ்ரர்
உயிரியல் – சிவசுப்பிரமணியம் ரீச்சர்,
இரசாயனவியல் – சுந்தரலிங்கம் மாஸ்ரர்,
பௌதீகவியல் – யோகலிங்கம் மாஸ்ரர் கற்பித்தார்கள்.

இவர்களுடன் வேறு ஆசிரியர்களும் சிறிது காலம் கற்பித்தார்கள். அவர்களுடைய பெயர்கள் எனக்கு ஞாபகம் இல்லை.

உயர்தர வகுப்பில் சக மாணவர்களாக கோமதி, அமுதினி, ஆஷா, வளர்மதி, கலாதேவி, பாமினி (K.K.S), முத்துமேகலா, மிருணாளினி, டொரின், உமா (அம்பனை) அச்சுதன்,

ரகுலதரன், தர்மராஜா, நெவின்ஸ் (இவர்களைத் தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது.) இருந்தார்கள். அக் காலப்பகுதியில் புத்தகத்திற்குள் ஒழிந்து வைத்து கதைப்புத்தகம் வாசிப்பேன். ஒருமுறை ரகுலதரன் சிவசுப்பிரமணியம் ரீச்சரிடம் போட்டுக் கொடுத்து ரீச்சர் புத்தகத்தை வாங்கி வைத்து விட்டார்.

1990 ஆம் ஆண்டு ஆவணியில் எமது உயர்தரப் பரீட்சை நடைபெறுவதாக இருந்தது. அப்போது இருந்த அசாதரமாண சூழ்நிலை காரணமாக எமது கல்லூரி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு இடம்பெயர்ந்தது. அங்கும் சிறிது காலம் கற்றோம். அதன்பின் எமது உயர்தரப் பரீட்சை 1991 சித்திரை பிற்பகுதியில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்றது. இவ்வாறு 13 வருட காலங்கள் சிட்டுக்குருவிகளாக சிறகடித்துப் பறந்து திரிந்து எமது ஆசான்களால் கொடுக்கப்பட்ட அறிவென்னும் அமுதசுரபியுடன் கல்லூரிக் காலத்தை நிறைவு செய்து எமது வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குச் சென்றோம். 33 வருட காலத்தின் பின் எமது மூளையின் நினைவுப் பகுதியை தட்டி எழுப்பி அங்கொன்றும் இங்கொன்றுமாக வரும் ஞாபங்களை மீட்டுவதற்காக பூமிப் பந்தின் பல பாகங்களிலிருந்தும் மகாஜனா மாதாவின் மடியில் தவழ பயணிக்கின்றோம்.

**நன்றி**

28

# இத்திலத்தில் வேண்டும்வரம் என்னிலேற்று

- நடராஜர் காண்டீபன்

பொன்னிலாசை பொருளெனக்கு வேண்டியதில்லை
பொன்னதனில் முடியெனக்கு வேண்டியதில்லை
மண்ணிலாசை கொண்டுநிலம் வாங்கியதில்லை
மண்ணதனில் பிடியெனக்கு வேண்டியதில்லை
பெண்ணிலாசை கொண்டுநிதம் ஏங்கியதில்லை
பெண்ணவளின் சுகமெனக்கு வேண்டியதில்லை.

அன்னையவள் மகாசனாவை உயிரிலேந்தடா
அன்னைத்தமிழ் அறிவெனக்கு உயிரின்மேலடா
பண்பிலுறை நண்பர்களாய் சேருவோமேயடா
பார்புகழும் பைந்தமிழைக் காவுவோமேயடா
பாவலரை அனுதினமும் போற்றுவோமேயடா
பைந்தமிழர் பயில்நிலத்தை ஏற்றுவோமேயடா.

பள்ளியிலே பாகுபாடு பார்த்ததுமில்லை
பாவையரை காளையரும் கண்டதுமில்லை
அடுத்தவனை குழிபறித்து வீழ்த்தவுமில்லை - குழி
பறித்தவனை ஏற்றிவைத்து பாடவுமில்லை
பழியுரைத்துப் பாவியனாய் போனதுமில்லை
பொய்யுரைத்து பாவலனாய் ஆனதுமில்லை.

பச்சைவயல் பரப்பிடையே பாடிநடந்தேன்
பயிர்நிலத்தில் பால்நிலவை கண்டுமகிழ்ந்தேன்
கச்சைகட்டி கலைகளாற்றி வீதிநடந்தேன்
இச்சையுடன் மகாசனாவை தேடியுறைந்தேன்
பிச்சையதாம் கல்வியதைப் பெற்றுஉயிர்த்தேன்
உச்சமதாம் மகாசனாவின் உயிரில்கலந்தேன்.
வல்லபல வளவாளர் பள்ளியேகினார்

கல்விநிதம் எமக்கூட்டி வள்ளலாகினார்
பட்டியிலே எமையடைத்து வேதம்ஓதினார்
பட்டினியில் பசியாற்றி பரிவுகாட்டினார்
துள்ளிநாமும் துருத்திநிற்க துணிவைஊட்டினார்
அள்ளிநிதம் தமிழ்பருக்கி அறிவையேற்றினார்.

மண்ணில்நல்ல வண்ணமதாய் வாழ்ந்துகளித்தோம்
கண்ணில்பட்ட காயமதாய் கவலைமிகுந்தோம்
வாசல்வந்த வினையதுவாய் வாழ்வையிழந்தோம்
கொல்லவந்த பகையதனால் குடியையிழந்தோம்
வேரிழந்த மகாசனாவாய் விடிவையிழந்தோம்
குண்டுபோட்ட கொலைக்களத்தில் பலியுமாகினோம்

வலிசுமந்த மண்ணில்நாமும் மறவராகினோம்
வீறுகொண்ட மனிதராய்நாம் விதியைமாற்றினோம்
பயிர்நிலத்தில் பகைவர்தம்மை பாடையேற்றினோம்
பைந்தமிழர் வீரமதை பாரில்காட்டினோம்
கொன்றுநின்ற பகைமுடித்து நீதிஈட்டுவோம்
வென்றுநாமும் விளைநிலத்தில் நீதிநாட்டுவோம்.

சிவகாமி அம்மனுறை எங்கள்பெருமானே
அம்மையவள் அருகிருந்தே வரமருளவோனே
இன்னற்படும் எம்மவர்க்கு இனியவைகளாற்றி
இத்திலத்தில் வேண்டும்வரம் என்னிலேற்று
தாய்நிலத்தில் தமிழருந்தி சாகும்போதும்
தமிழவளின் கைப்பிடித்தே சாகவேண்டும்

பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போதும்
பைந்தமிழில் அழுமோசை கேட்கவேண்டும்
தீயிடையே என்னுடலம் வேகும்போதும்
தீந்தமிழாய் தமிழ்மணந்து வேகவேண்டும்
கங்கையிலே என்சாம்பல் கரையும்போதும்
கவித்தமிழே சலசலத்து ஓடவேண்டும்.



29

# நாங்களும் மகாஜனாவும்

- சி.சிவசிவா

காலையில் புது உத்வேகத்துடன் புது ஆடையணிந்து, புதுப்பையில் புதுக்கொப்பி புத்தகங்களுடன் தரம் ஆறிற்காக ஆர்வத்துடன் நடை போட்டேன். பயமோ,பதட்டமோ இல்லை.

அப்பா படித்த பள்ளி. அப்பா சிறந்த உதைபந்தாட்ட வீரர். 1948 ஆம் ஆண்டில் மகாஜன சிற்பி தெ.து.ஜெயரட்ணம் அதிபருடன் உதைபந்தாட்டக் குழு எடுத்துக்கொண்ட புகைப்படத்தில் அப்பாவைப் பார்த்துப் பார்த்து இரசிப்பதுண்டு. அண்ணாவும் அக்காவும் படித்துக் கொண்டிருக்கின்ற பள்ளி.

பிரதீபன், காண்டீபன், சிவதாஸ், தயாளன், வளர்மதி, பூங்குயில், அமுதா, சியாமளா, முத்துமேகலா ஆகியோருடன் நானும் புதுப்பள்ளிக்குச் சென்றேன்.

அளவெட்டி வடக்கின் சிறார்கள் பெரும்பாலானோர் ஆரம்பக் கல்வியை அளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தியாசாலையில் கற்றபின்பே மகாஜனாவிற்குச் செல்வர். மாஜனாவின் முதல் எஞ்ஜினியர் அளவெட்டி வேல்சாமி அவர்கள் ஆரம்பக்கல்வியை இங்குதான் கற்றார். மகாஜனாவின் மும்மணிகள் எனப்போற்றப்படும் மகாஹவி, அ.செ.மு., அ.நா.கந்தசாமி ஆகியோர் எமது அயலவர்கள்.

பள்ளியின் காலை மணி ஒலிக்கின்றது. “தலையே நீ வணங்காய்” சாதாரிப் பண்ணில் அமைந்த பாடல், ஓர் அக்காவின் இனிமையான குரலில் ஒலிக்கின்றது. மனதிற்கு இதமாக இருக்கின்றது. இது மகாஜனவிற்குத் தனித்துவமானது. மாணவர் வரிசையாக காலைப் பிரார்த்தனைக்குச் செல்கின்றனர். “தலையே நீ வணங்காய்” பாடலைக் கேட்டிருக்கின்றேன். ஆனால் மாணவர் வரிசையாகக் காலைப் பிரார்த்தனைக்குச் செல்லும்போது இப்பாடலைப் பாடுவதைக் கேட்பது புதிது. வரிசையாகச் செல்லுதல், ஒழுங்கு மற்றும் ஒழுக்கத்தை ஆரம்பப்பள்ளி எங்களுக்கு நன்றாகக் கற்றுத் தந்திருந்தது.

தகரக் கொட்டிலில் அமைந்திருந்த ஆறு E வகுப்பினுள் நுழைகின்றேன். அனைவரும் புது முகங்கள். கண்ணன் (சிறிதரன்), வரதராஜன் (VK), தயாபரன் (பண்டிதர்), செல்வநாதன், செவ்வேள், வஸ்மதி, சபிதா, சுகிர்தா. சிலரது பெயர்களே இன்று ஞாபகத்தில் உள்ளது.

புது முகங்கள் என்பது சில நாட்களே. சில்வண்டு மற்றும் பொன்வண்டினை தீப்பெட்டிக்குள் அடைத்தல், மாபிள் அடித்தல், கிரிக்கெற், உதைபந்து என அனைத்து விளை யாட்டுக்களையும் மறக்கமுடியாது. மதிய இடைவேளையின் மணியடித்தவுடன் கிரிக்கெற்

விளையாடுவதற்காக விழுந்தோடி மரங்களில் ஒன்றைப் பிடிப்பதும், கிரிகெற் பந்தினால் மாங்காய்களை விழுத்தி உண்பதும். இலந்தைப்பழங்களைப் பொறுக்கி உண்பதும் மறக்க முடியாதவை. தற்போது கிரிக்கெற் விளையாடிய மரங்களை நினைத்துப் பார்க்கவே முடிகிறது.

கணிதம் எனக்கு விருப்பமான பாடமாக இருந்தது. கணித பாடத்தினைக் தரம் 7, 8 வகுப்புக்களில் கற்பித்த அமரர் க.ஞானசேகரன் ஆசிரியர் இதற்குக் காரணமானார். 1995 ஆம் ஆண்டின் இடப்பெயர்வின்பின் க.ஞானசேகரன் ஆசிரியரை சந்திக்கவில்லை. அவரை இனிமேல் சந்திக்க முடியாது என்பது துரதிஸ்டமாகும்.

தரம் 11 E வகுப்பு வகுப்பாசிரியராக இருந்தவர் வர்த்தக பாடம் கற்பித்த முத்துலிங்கம் ஆசிரியர் அவர்கள். எனது வீட்டுச் சூழல் காரணமாக நாதஸ்வரம் வாசிப்பதற்காக ஆலயங் களுக்குச் செல்வது வழக்கம். வெள்ளிக்கிழமைகளில் கொல்லங்கலட்டிப் பிள்ளையார் ஆலயத்திற்குச் செல்வேன். முத்துலிங்கம் ஆசிரியர் காலையில் இவ்வாலயத்திற்கு வருகைதந்து வணங்கிப் பள்ளிக்குச் செல்வார். வெள்ளிக்கிழமைகளில் சில சந்தர்ப்பங்களில் பாடசாலைக்கு தாமதமாகவே செல்லவேண்டி ஏற்படும். அப்போதெல்லாம் எனது வரவை இடாப்பில் பதிவு செய்வார் முத்துலிங்கம் ஆசிரியர். பள்ளிக் கல்வியைத் தொடர்வதற்கு இவரது செயற்பாடு காரணமாக அமைந்தது. என்றும் நினைவில் கொள்ளத்தக்கவர் முத்துலிங்கம் ஆசிரியர் அவர்கள்.

உயர்தரத்தில் கணிதத்துறையினை தேர்வு செய்ய விரும்பினேன். எனது குடும்பச் சூழல் இடம் தரவில்லை. "கலைத்துறையில் சங்கீத பாடத்துடன், தமிழ் மற்றும் இந்துநாகரிக பாடங்களைத் தெரிவு செய்து படி உனக்கு எதிர்காலம் இருக்கு" என வழிகாட்டினார் இராஜகுலேந்திரன் ஆசிரியர் அவர்கள். அவர் எனது அப்பாவுடன் மிகுந்த நட்புக்கொண்டவர். அவரது வாழ்த்தும் வழிகாட்டலும் எனது உயர்விற்கு வழிசமைத்தது. ஆசிரியராகவும் பின்பு இலங்கைக் கல்வி நிர்வாக சேவைக்குச் செல்வதற்கும் வழிகாட்டியது. என்றும் மறக்க முடியாதவர் இராஜகுலேந்திரன் ஆசிரியர் அவர்கள்.

ஆசிரியர்கள் சிறந்த வழிகாட்டிகளாக இருக்கும்போது மாணவர்கள் சிறந்து விளங்குவார் கள். ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் சரியான வழியில் இருப்பதும், மாணவர்கள் அதனைச் சரியான முறையில் பின்பற்றுவதுமே உயர்விற்கு வழிசமைக்கும்.

எனது பிள்ளைகள் மூவரும் மகாஜனாவில் கற்கின்றனர். மனைவி மகாஜனாவில் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றார். எனது குடும்பமும் ஊரும் மகாஜனாவுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

# இயல் - 04


## மகாஜனாவின் மேம்பாட்டில் 87 சாதாதரணதர, 90 உயர்தர மகாஜனன்கள்

# மகாஜனாவின் மேம்பாட்டில் 87 சாதாதரணதர, 90 உயர்தர மகாஜனன்களின் பங்களிப்பு

மகாஜனாவின் மேம்பாட்டிற்காக 87 O/L, 90 A/L அணி நண்பர்களினால் தனியாகவும், குழுவாகவும் இணைந்து பல உதவிகள் வழங்கப்பெற்றன. வெளிநாடுகளில் வசிக்கும் நண்பர்கள் தாயகத்தில் வசிக்கும் நண்பர்களினூடாகவும். 87 O/L, 90 A/L அணியின் சாசனத்தினூடாகவும் மகாஜனாவின் மேம்பாட்டிற்கான பங்களிப்புக்களை வழங்கியுள்ளனர்.

1. 

**மரங்கள்** நாட்டும் செயற்றிட்டத்திற்காக இங்கிலாந்தில் வசிக்கும் நண்பரின் நிதி உதவியுடன் தாயக நண்பரினூடாக 2017 ஆம் ஆண்டில் பள்ளியிலும் பள்ளியைச் சூழவுள்ள வீதிகளிலும் மரங்கள் நாட்டப்பெற்று அவை பேணப்பட்டன.



2. 

**மேம்படுத்தும் நோக்கில்** வல்லாட்ட அணிக்குத் (Chess team) தேவையான கருவிகள் வழங்கப்பெற்றன.

3. வெளிநாட்டு நண்பர்களின் நிதி உதவியுடன் பள்ளி மாணவர்கள் சிலருக்கான ஊக்கல் தொகை வழங்கப்பெற்றன.
4. இங்கிலாந்து நண்பரின் நிதி உதவியுடன் உதைபந்தாட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் உதைபந்தாட்ட அணிக்கான உதவிகள் வழங்கப்பெற்றன.
5. இங்கிலாந்து நண்பரின் நிதி உதவியுடன் கோலூன்றிப் பாய்தலுக்கான கோல் வழங்கப்பெற்றது.
6. பிரான்ஸ் நண்பரின் நிதி உதவியுடன் தரம் ஐந்து புலமைப்பரில் பரீட்சையில் 100 புள்ளிக்கும் வெட்டுப்புள்ளி இடையே புள்ளிகளைப்பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் ஊக்கல் பரிசு கடந்த நான்கு வருடங்களாக வழங்கப்பெற்று வருகின்றது.
7. கனடா நண்பரின் நிதிப்பங்களிப்புடன் பள்ளியின் சாரணர் துருப்புக்களுக்கு சாரணர் சீருடையின் 50 தொப்பிகள் 2018.02.21 ஆம் திகதி வழங்கப்பெற்றது.



8. வெளிநாட்டு நண்பர்களின் நிதி உதவியுடன் 2019 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற மகாஜனன்களின் வருடாந்த ஒன்றுகூடலில் பள்ளியில் கடமையாற்றும் அனைத்து ஆசிரியர்களும் பங்குபற்றுவதற்கு வசதியாக பள்ளியின் அனைத்து ஆசிரியர்களுக்கும் நுழைவுச் சீட்டுக்கள் பெற்று வழங்கப்பெற்றன.

9. தாயகம் மற்றும் வெளிநாட்டு நண்பர்களின் நிதிப்பங்களிப்புடன், 87 O/L, 90 A/L அணி நண்பர்களின் பொன்விழா ஞாபகார்த்தமாக நான்கு திறன்பலகைகள் (Smart boards) பள்ளியிடம் கையளிக்கப்பெற்றன. இச்செயற்பாட்டிற்காக திறன் பலகைகள் பொருத்தப்பட்ட வகுப்பறைகளுக்கான வர்ணப்பூச்சு வேலைகள், வகுப்பறையில் திறன்பலகைகளுக்கான மின்சார இணைப்பு, மின்குமிழ்கள் மற்றும் மின்விசிறி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பெற்றன. திறன்பலகைகள் (Smart boards) பொருத் தப்பட்ட வகுப்பறைகளின் கையளிப்பு நிகழ்வு 2021.01.27 ஆம் திகதி மிகச்சிறப்பாக நடைபெற்றது.

10. பள்ளியின் அதிபரின் வேண்டுகோளுக்கமைவாக திறன்பலகையினடாக ணுழழஅ பாவிப்பதற்கு வசதியாக ஊயஅநசய ஒன்று வழங்கப்பெற்றது.

11. வெளிநாட்டு நண்பர்களின் நிதிப்பங்களிப்புடன் பள்ளியின் மாணவ தலைவர்களுக்கான (ஆண்கள், பெண்கள்) 50 சீருடைகள் 2022.06.23 ஆம் திகதி வழங்கப்பெற்றது.

12. பள்ளிச் சாரணர்களின் குழுச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக இங்கிலாந்து நண்பரினால் ஊதுகுழல் (விசில்) 2016 ம் ஆண்டு அன்பளிப்புச் செய்யப்பட்டது.

13. அமரர் சுத்தரமுர்த்தி அவர்களின் (விஞ்ஞானகூட உதவியாளர், மகாஜனக் கல்லூரி) ஞாபகார்த்தமாக பள்ளியின் மழலைச் சாரணர்களின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் முகமாக சாரணர்களுக்கான சீருடைகள் அவரது மகனால் (பிரான்ஸ்) அன்பளிப்பாக 2018 ஆம் ஆண்டு வழங்கப்பெற்றது.

14. 87 O/L , 90 A/L அணி நண்பர்களின் பொன்விழா ஞாபகார்த்தமாக 2021 ஆம் ஆண்டு பள்ளியின் சாரணர்களுக்கு உருக்கு அலுமாரி ஒன்று வழங்கப்பெற்றது.

15. 2022 ஆம் ஆண்டின் ஜனாதிபதி விருபெற்ற சாரணர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் குருநாகலில் 01.06.2023 ம் திகதி நடைபெற்றது. இவ்வைபவத்தில் விருது பெற்ற பள்ளியின் 15 சாரணர்கள் கலந்துகொள்வதற்கு வசதியாக போக்குவரத்துச் செலவினை இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் நாட்டு நண்பர்கள் இருவர் இணைந்து வழங்கினார்கள்

16. பள்ளி மாணவர்களின் உள்ளக விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் நோக்கில் கனடா நண்பரினால் இரண்டு கரம் போட் கொள்வனவு செய்வதற்கான நிதி அன்பளிப்பு 2023.06.15 ஆம் திகதி வழங்கப்பெற்றது.

17. 

பள்ளியின் ஆலயக் கொட்டகை அமைப்பதற்கும், ஆலயக் கும்பாபிசேக செலவுக்குமாக கனடா நண்பரினால் 17.07.2023 அன்று பள்ளி அதிபரிடம் நிதி வழங்கப்பெற்றது.

# 87 O/L, 90 A/L அணி நண்பர்களின் பொன்விழா ஞாபகார்த்த திறன்பலகைகள் கையளிப்பு நிகழ்வு - 27.01.2021













# ஏனைய மேம்பாட்டுச் செயற்றிட்டங்கள்














# இயல் - 05

## எங்கள் ஒன்றுகூடல்கள்

# 1. பாடசாலை நிகழ்வுகள்
## (ஆரம்பப்பிரிவு முதல் இடைநிலை வரை)






























# 2. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி - 1990
















# 3. உயர்தர வகுப்பு ஒன்றுகூடல் - 1990

























# 4. யாழ்ப்பாண நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்







































# 5. கொழும்பு நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்












# 6. கனடா நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்



















# 7. இங்கிலாந்து நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்

























# 8. சுவிற்சர்லாந்து நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்











# 9. பிரான்ஸ் நண்பர்கள் ஒன்றுகூடி மகிழ்ந்த தருணங்கள்














New Evergreen Printers (Pvt) Ltd, #693, K.K.S. Road, Jaffna. 021 221 9893